# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக மாதாந்தப்பத்திரிகை මන්නා

பொழிவு - 09
குவிப்பு - 08
பக்கங்கள் - 20
விலை ரூபா 20.00
ஓகஸ்ட் 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebestian's St. Mannar, Sri Lanka. T. P. 023-223277



## அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார் (திருப்பாடல் 91:4)



# வெள்ளி விழா நாயகர்கள்



ஆயர்த்துவப் பணியில்
25 ஆண்டுகளை நிறைவு செய்யும்
மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை




குரு முதல்வர் பணியில்
25 ஆண்டுகளை நிறைவு செய்யும்
பேரருட் தந்தை சேவியர் குருஸ் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயரும் இன்றைய யாழ் ஆயருமான தோமஸ் ஆண்டகைக்கும்
மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது குரு முதல்வரான சேவியர் குருஸ் அடிகளாருக்கும் மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை
மற்றும் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரதும் செபம் நிறைந்த நல் வாழ்த்துக்களை அன்போடும், மிகுந்த நன்றியோடும் தெரிவிக்கின்றோம்

அருட்பணியாளர் நேசன் –மன்னா பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்

## நீ ஓர் அறிவுக் களஞ்சியம்!

எம் இனிய மன்னாவே! நீ மாதந்தோறும் வரும் வெறும் பத்திரிகையல்ல. பெரியவர், சிறியவர் எனப் பருவத்திற்கேற்ப அறிவைப் புகட்டும் ஓர் அறிவுக் களஞ்சியம் நீ. உனது வரவால் சமயம் தொடர்பான விடயங்களை மட்டுமல்ல சமூகம் தொடர்பான பல விடயங்களையும் அறிய முடிகிறது.

பங்கின் நிகழ்வுகள் பற்றி மட்டுமல்ல மாவட்டம், திருச்சபை பற்றி அறியாத பலர் உன் மூலமாக எத்தனையோ விடயங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். சிறுவர்கள் மறை அறிவில் வளர்ச்சியடைகிறார்கள்.

மன்னாவே, உன்னில் வெளிவரும் பல சம்பவங்கள் அறிவுள்ள கிறிஸ்தவனின் வாழ்க்கையில் பல திருத்தங்களை ஏற்படுத்த உதவுகின்றது. 'மருத்துவப் பகுதி' பலருக்குப் பயனளிக்கிறது. கவிதைப் பகுதியால் எம்மாலும் ஏன் எழுத முடியாது? என்ற கேள்வி ஏற்பட்டு ஆற்றல் அறிவு விருத்தியாகின்றது.

மன்னாவே, உன்னை வளர்க்க அடித்தளமாக இருந்து செயலாற்றும் அன்புக்குரிய அருட்பணியாளர் நேசன் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள். மன்னாவே நீ தொடர்ந்து மேலும் வளர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டி நிற்கின்றேன். அடுத்த மன்னாவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

*திருமதி. சுகந்தி மனோகரன், ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.*

**டென்மார்க்கில் இருந்து ஒரு நெடிய மடல்**

## வளர்ச்சிப் படிகளில் மன்னா!

இந்த ஜூன் மாத இதழில் கொழும்பு அம்புறோஸ் பீற்றர் எழுதிய புனிதர் வரிசையில் அதி உன்னத இடத்தைப் பெற்றவர் புனித அந்தோனியார் என்றும் பொறுமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் புனித அந்தோனியார் என்றும் மிகத் திறமையாக எழுதியுள்ளார். ***அதிகரித்து வரும் மது பாவனையும் அழிந்துவரும் குடும்பங்களும்*** என்ற கட்டுரை 'குடும்பக் குவலய'த்தில் இடம்பெற்றிருந்தது. அதைத் திறமையாக எழுதியனுப்பிய மடு, பண்டிவிரிச்சானைச் சேர்ந்த டினேஸ் குமாருக்கு எனது நன்றிகள்.

இவ்வாறாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக மன்னா வளர்ந்து வருகிறது. மக்கள் வாசித்து முன்னேறக்கூடிய பல விடயங்களை மன்னா தாங்கிவருவது உண்மையிலேயே மகிழ்ச்சியான விடயம். இப்படியாக நாளாந்தம் வளர்ச்சிப் படிகளில் ஏறிவரும் மன்னாவிற்கு எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

*இங்ஙனம், சாதாரண கிறீஸ்தவன், க. போல் சேவியர், டென்மார்க்.*

## உன்னை எப்படிப் புகழ்ந்திடுவேன்?

என்னருமைத் தோழா மன்னாவே, உன்னை எப்படிப் புகழ்ந்திடுவேன்? பாரதி இருந்திருந்தால் உன்னருமையைப் புகழ்ந்து பாடியிருப்பார். திருவள்ளுவர் இருந்திருந்தால் உன்னைப் பற்றி திருக்குறள் எழுதி இருப்பார். கவிஞர் கண்ணதாசன் இருந்திருந்தால் ***மன்னாரில் மலரும் மன்னாவே*** என்று கதையே எழுதி இருப்பார். என்னருமை மன்னாவே, ஏற்றமுடன் நீ வளர, ஊக்கமுடன் தொடர்ந்தும் செயற்பட உன்னை நான் வாழ்த்துகிறேன்.

*ஜே. சிந்துஜா, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.*

## என் ஆசை நண்பியே மன்னா!

அன்பின் மன்னாவே, என் ஆசை நண்பியே, "நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எவரிடமும் இல்லை". மன்னாவே, உனக்காக உயிரைக் கொடுத்து எமக்காக உழைக்கும் அனைவரும் உடல் நலத்திலும் ஆன்மீகப் பலத்திலும் வாழ இறைவனை வேண்டுகிறோம். மன்னா தொடர்ச்சியாக இதே சுவையோடு வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உன் வாசகர், ம. லின்ரா, பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல்.*

## உள்ளம் கவர்ந்த கள்வனே!

எமது சிந்தனைகளையும் ஆற்றல்களையும் வளர்ப்பதற்காக மாதத்தில் ஒரு தடவை வரும் மன்னாவே, உன் சேவையைப் பிறர் அறிந்துகொள்ளும் வகையில் உன் விநியோகத்தை மென்மேலும் அதிகரிக்க வேண்டுகிறேன். உனது சேவை மென்மேலும் வளர, மலர எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

*க. ஆனந்த குமார், சிதரம்பரபுரம், வவுனியா.*

### மன்னா விநியோகஸ்தர்கள் கவனத்திற்கு!

நாம் எவ்வளவு விரைவாக மன்னாவை அச்சிட்டு பங்குகளில் உள்ள விநியோகஸ்தர்கள் கைகளில் கொடுத்தாலும், அவர்களில் சிலர் உரிய நேரத்தில் அவற்றை வாசகர்களுக்கு, கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுப்பதாக நாம் அறிய வருகின்றோம். எனவே தயவுசெய்து, மன்னா விநியோகஸ்தர்கள் உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும், அவற்றை கூடிய விரைவில் வாசகர்கள் கைகளில் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

**கருத்துக் களம்.... கருத்துக் களம்.... கருத்துக் களம்....**

# ஆசீர்வாதப்பரா? பெனடிக்ற்றா?

*அருட்பணியாளர். ஜெயந்தன் அ.ம.தி.*

நம் திருத்தந்தையுட்பட வேற்று மொழிப் பெயர் கொண்ட சில வேதாகம நபர்களையும், புனிதர்களையும், திருத்தந்தையர்களையும் அப்பெயர்களைக் கொண்டு அழைப்பதா! அல்லது அப்பெயர்களுக்குச் சமாந்தரமான தமிழ் வடிவப் பெயர்களைக் கொண்டழைப்பதா? என்ற விவாதம் மன்னாவில் மாத்திரமல்ல, தமிழ் கூறும் நல்லுலகின் நாலா பக்கங்களிலிருந்தும் ஆராய்ச்சிப் பரப்பை விசாலப்படுத்துகின்றது. இது மகிழ்ச்சி தரும் ஓர் ஆய்வுத் தேடலாகும்.

ஏற்கனவே நாம் கண்ட வாதப்பிரதிவாதங்களை எடுத்து தீர்ப்பு எப்பக்கம்! என அறுதியிட்டுக் கூறுவது இலகுவானதல்ல எனத் தோன்றுகின்றது. பெயர்களை மொழிமாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவையில்லை என்பது ருசுவான (சரியான) வாதமே. அவ்வாறு, மூல வடிவப் பெயர்களை பயன்படுத்துகின்ற பொழுது நாம் இழப்பவை எவை? என்ற கேள்வி ஒருவேளை எம் விவாதத்திற்கு விடையாகலாம். தமிழ் வடிவிற்கு மாற்றிவிட்டால் பொருள் கெட்டுவிடுகிறது. பொருள் திரிபு ஏற்படுகிறது. அடிப்படையுண்மையிலிருந்து, அந்நியமாகிப் போகின்றோம் என்ற சூழ்நிலைகள் இருக்குமேயானால், நாம் பெயர்களை மொழிமாற்றம் செய்வதில் அவசரப் போக்கை தவிர்க்கத்தான் வேண்டும்.

மறுபக்கத்தில், இல்லை, இவ்வாறு மொழி மாற்றம் செய்கின்ற பொழுது நாம் மூலத்திலிருந்து, மூலக்கருத்திலிருந்து அந்நியப்படவில்லை என்றால் மொழிமாற்றம் செய்வது பாரதூரமான குற்றமல்ல. ஆக, பெயர்களை மூலமொழியில்தான் காத்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை ஒன்றும் கட்டாயமானதல்ல. ஆனால், மூலப்பெயரே பொருட் செறிவையும் கூடுதல் விளக்கத்தையும் வழங்குமாயின் அதுவே பரிந்துரைக்கப்பட வேண்டியதுமாகும்.

மாறாக தமிழ் வடிவ மொழி மாற்றப் பெயர்கள் ஏதோ சில காரணங்களினால் கூடுதல் விளக்கத்தையும், இன்னும் சில சந்தர்ப்பங்களில் பொதுப் பயன்பாட்டையும் கொண்டிருக்குமாக இருந்தால், அவற்றைப் பயன்படுத்துவதை பாதகம் எனக் கொள்ளத்தேவையில்லை. உதாரணமாக, 'கேபா' – Chepha என்ற அரமேயச் சொல்லிற்கு, தமிழில் பாறை என்ற சமாந்திரச் சொல்லிணையான 'இராய்' என்கின்ற மலையாளச் - (திராவிடச்) சொல்லடியைப் பயன்படுத்துகின்றபொழுது, "நீ கேபா... உன்மீது என் திருச்சபையைக் கட்டுவேன்....." என்பதிலும் பார்க்க, "நீ பாறை உன்மீது என் திருச்சபையைக் கட்டுவேன்...." என்ற வசனத்தில் விளக்கம் கூடுதலாக இருப்பதைக் காணலாம். 'ஸ்தேவான்' வேதசாட்சியை தமிழில் முடியப்பர் என்று அழைக்கின்றபோது முதன் முதலாக வேதசாட்சி முடியைச் சுவீகரித்துக் கொண்டவர் என்ற காரணப் பெயரொன்று கூடுதல் விளக்கத்தை அளிக்கின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது.

'போட்டோ பிரதி' (Photo Copy) அறிமுகமாகி, பயன்பாட்டிற்கு வந்து, அச்சொல் பழையதாகிவிடுகின்ற காலத்தின் பின்னரே, 'நிழற்படப் பிரதி' என்கின்ற தமிழ் வடிவம் சந்தைக்கு வந்தால், அது தமிழ் சொல்லாட்சியில் இடம்பிடிக்குமேயொழிய, நடைமுறைப் பயன்பாட்டில் எளிதில் வந்து கலந்துவிடாது. இது நிதர்சன உண்மை.

### கருத்துக்களம் உங்களுக்கானது

*'கருத்துக்களம்' என்ற இப்பகுதி உங்களுக்கானது. கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு விடயங்கள் பற்றிய உங்கள் எண்ணங்களை - கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.*

*எந்தவொரு கருத்தை ஆதரித்தோ மறுத்தோ நீங்கள் எழுதலாம். நமது இந்த விவாதம் வெறும் விவாதத்திற்காக அல்ல மாறாக, ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் உண்மைகளைக் கண்டறிய முற்படுவதற்கே. இங்கு இடம்பெறும் கருத்துக்கள் திருச்சபையின் அல்லது மன்னாவின் கருத்துக்கள் அல்ல. கருத்துக்கு உரியவர்கள் உரைத்தவர்களே!* - ***பதிப்பாசிரியர்***

T.V என்கின்ற இரண்டெழுத்திற்குப் பதிலாக, 'தொலைக்காட்சிப் பெட்டி' என்கின்ற காலத்தால் பிந்திய காரணகாரிய பெயர் கொண்ட பத்தெழுத்துக் கருவியைப் பயன்படுத்துவதிலும் பார்க்க, 'ரீ.வி.' யையே மக்கள் பயன்படுத்துவர். ஆக, மக்கள் எதனோடு அதிக பரிச்சயப்பட்டிருக்கிறார்களோ, எது நாவிலும் - மனதிலும் இலகுவில் வந்தேறுமோ அதனையே நாடிச் செல்வர் என்பது நடைமுறை. நாகரீகச் சிக்கலும், தாழ்வுமனப்பான்மையுங்கூட, இவ்விடயத்தில் ஆதிக்கம் செலுத்தலாம். பிறமொழிச் சொற்களை, குறிப்பாக ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதில், வரலாற்றுக் காரணங்களினால் ஆசிய தேசத்தவர்களில் அநேகமானோருக்கு, 'கூடுதல் அந்தஸ்து வந்துவிடுகின்றது' என்கின்ற மாயை மனப்பாங்கு இதன் அடிப்படையாகும்.

'ஆசீர்வாதப்பர்'தான் அறியப்பட்டவராக இருந்தால், அல்லது 'ஆசீர்வாதப்பர்'தான் அதிக விளக்கம் தருபவராக இருந்தால், நாம் அவரை வலிந்து 'பெனடிக்ற்' ஆக மாற்ற வேண்டிய கட்டாயமில்லை. 'புஷ்' என்ற பெயராக இருந்தால் நாம் அவரை 'பற்றையாக' மாற்றுதல் நகைப்பிற்குரியது. தமிழ் 'ஜெயராசாவை' நாம் ஆங்கிலத்தில், Victorious King' என்றோ, 'மரியதாசனை' 'Lover Of Mary' என்றோ அல்லது அவற்றிற்கு இணையான ஆங்கில வடிவங்களையோ முன்மொழிவது கிடையாது. மாறாக, பெயர்கள் மொழிக்கு ஏற்றாற்போல் சற்று நெகிழ்ந்து கொடுக்கக் கூடியனவாக அமைத்துக்கொள்கின்றோம். உதாரணமாக, லூக்கா இலத்தீனில் லூக்காஸ் ஆகியிருக்கின்றது. 'யேசு' தமிழில், 'இயேசு' ஆகவும், ஆங்கிலத்தில் ஜீசஸ் ஆகவும் இருக்கின்றது. 'மரியா' தமிழில் 'மரியாள்' ஆகியிருக்கின்றது. ஆங்கிலத்தில் 'மேரி' யாகி இருக்கின்றது.

முடிவில் ஒன்று மாத்திரம் கட்டாயமானதாகும். அதாவது விளக்கத்தின் நிமித்தமோ, பயன்பாட்டின் நிமித்தமோ, வாதத்தின் - நியாயத்தின் நிமித்தமோ, எதைப் பயன்படுத்துகின்றோம்? ஏன் பயன்படுத்துகின்றோம்? என்பவற்றை, பயன்படுத்துவோரும் - பயன்படுத்தக் கேட்போரும் நன்கு அறிந்திருக்கவும், அறிவுறுத்தப்படவும் வேண்டும். அப்பொழுதுதான் நாம் அர்த்தம் தெரிந்து, விளக்கத்தோடு பெயர்களைக் கையாள முடியும்.

## சிரிக்க சிந்திக்க

**ஒருவர்:** இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள் 3 நாட்களில் கட்டியெழுப்புவேன்.
**மற்றவர்:** Very Good. ஆனா காசு, காசு என்று எங்களை கரைச்சல் படுத்த வேண்டாம்.

..................................

**ஒருவர்:** "எனக்கென்று இருக்கின்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு சந்நியாசம் செய்யப்போறேன்."
**மற்றவர்:** "உனக்கென்று எவ்வளவு இருக்கிறது?"
**ஒருவர்:** "எல்லாத்தையும் கூட்டிப் பார்த்தால் மொத்தமாக ஒரு இரண்டு இலட்சம் தேறும்."
**மற்றவர்:** "என்ன சொத்தா?"
**ஒருவர்:** "இல்லை. கடன்."

..................................

**அவர்:** பையனுக்குக் குடி, சூதாட்டம்னு கெட்ட பழக்கம் ஏதாவது...?
**இவர்:** அதெல்லாம் ஏழு வருட ஜெயில் வாழ்க்கையோட விட்டுத் தொலைச்சிட்டான், கவலைப்படாதீங்க.

..................................

**ரீச்சர்:** நீங்கள் டீ.வி. பார்க்கும்போது கரண்ட் கட் ஆனால் என்ன செய்வீர்கள்?
**மாணவன்:** மெழுகுவர்த்தியை வைத்துக்கொண்டு பார்ப்போம் ரீச்சர்.

..................................

**பிச்சைக்காரன்:** சில்லறை இருக்கா சார்...?
**கடைக்காரர்:** ஒன்னுமில்லை போப்பா ஒரே சோதனை ....
**பிச்சைக்காரன்:** ஐநூறு ரூபாய்க்கு சில்லறை இருக்கான்னு கேட்டா பெரிசா அலட்டிக்கிறீங்களே..!

## அன்னை திரேசாவின் அமுத மொழிகள்

- நாம் எல்லாம் இறைவனின் கையில் கருவிகள். நான் ஆண்டவன் கையில் ஒரு எழுதுகோல்போல் உணர்கின்றேன்.

- வீட்டில் முதலில் அறத்தைத் தொடங்குங்கள். பின் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம்... அதன்பின் அந்த வட்டாரத்தில்... நாட்டில்.... இறுதியாக உலகத்தில் என அது தொடரட்டும்.

- ஆண்டவர் நம்மை அன்பிலிருந்து உருவாக்கினார். அந்த அன்பின் பொருட்டே நம் தந்தை தம் திருமகனை இந்த உலகத்தைக் காக்க மண்ணிற்கு அனுப்பினார்.

- நான் எல்லா மனிதர்களிலும் இறைவனைக் காண்கின்றேன். தொழுநோயாளிகளின் புண்களைக் கழுவும்போது ஆண்டவனுக்கே பணிவிடை செய்வதுபோல் உணர்கிறேன். இதுவோர் அழகிய அனுபவமல்லவா?

- நாம் பெரும் செயல்கள் ஏதும் புரிவதில்லை. சிறு செயல்களையே பெரும் அன்புடன் செய்கின்றோம்.

## உண்மையை எடுத்துக் கூறியதற்காக
# தென்னிலங்கை ஊடகங்கள் மன்னார் ஆயர்மீது வசைமாரி!

## தென்னிலங்கைச் செய்திகள் நாட்டை இருளுக்குள் தள்ளிவிடும் மன்னார் ஆயர் எச்சரிக்கை



அண்மைய நாட்களில் மன்னாரில் நடைபெற்ற பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக - குறிப்பாக பேசாலை தேவாலயத்தில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பாக மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை உடனடியாக வெளியிட்ட செய்திகளாலும், அவர் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளாலும் நிலமை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் மன்னார் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

அதேவேளை சில தென்னிலங்கை ஊடகங்கள் சில, ஆயர் அவர்களை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற தொனியில் பல்வேறு அவதூறான செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்த அவதூறான கருத்துக்களை மறுத்து கொழும்பு கத்தோலிக்க பத்திரிகையாளர் ஜெகன் பெரேரா, கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் டுடிலிப் மெண்டிஸ் போன்றோர் மன்னார் ஆயரின் நிலைப்பாட்டை ஆதரித்து எழுதியுள்ளனர்.

தன்மீது சுமத்தப்பட்ட அவதூறான பொய்ப்பிரச்சாரங்கள் தொடர்பாக மன்னாவுக்கு கருத்துத் தெரிவித்த ஆயர் அவர்கள், என்மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்களுக்கு நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கப் போவதில்லை. உண்மையை விளங்கிக்கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த சில நல்ல உள்ளங்கள் என் மட்டிலான பொய்யான குற்றச்சாட்டுக்களை மறுத்து எழுதியுள்ளமை எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. உண்மை நிலைகளை அறியாமல் இருளில் இருந்துகொண்டு இருளில் சிந்திப்பவர்களால் நாடு இருளுக்குள்தான் தள்ளப்படும் என ஆயர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.

## நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட
# திருப்பலி வாசக நூல் வெளியிடப்பட்டது

நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட புதிய திருப்பலி வாசகநூல் தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழுவின் தலைவர் பேராயர் அந்தோனி ஆனந்தராயரால் யூன் 6ந் திகதி அன்று திண்டிவனம் முப்பணி நிலையத்தில் வெளியிடப்பட்டது.

1200 பக்கங்கள் கொண்ட பொதுக்காலத்திற்குத் தேவையான வாசக நூலின் இரண்டாம் பாகம் (1-34 வாரங்கள்) முதன் முதலில் வெளியிடப்பட்டது. முதல் பிரதிகளை தஞ்சை ஆயர் எம். தேவதாஸ் அம்புரோஸ், சேலம் ஆயர் சிங்கராயன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இந்த வாசக நூல் தயாரிப்புப் பணியில் சிறப்பாக உழைத்த திருவழிபாட்டுப் பணிக்குழு செயலர் தந்தை எஸ். ஆரோக்கியராஜ், அவருடன் உழைத்த மற்றப் பணியாளர்கள் ஆகியோரைப் பேராயர் பாராட்டினார்.

மேலும், இந்நூலை சிறப்பான கட்டமைப்புடன் அச்சிட்டு வெளியிட உழைத்த நடுநிலைய இயக்குனர் அருட்பணி அ. பீற்றர் அபீர், அவர்களையும் பேராயர் பாராட்டினார். சிறப்பான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, கண்கவர் வடிவில் அமைந்துள்ளது இந்நூல் எனவும் புகழ்ந்துரைத்தார்.

## யாழ். ஆயரின் வெள்ளிவிழா நிகழ்வுகளுக்காக
# யாழ் மறைமாவட்டம் தயாராகிறது

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளிவிழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் யூலை மாதம் 30 ஆம் திகதி, யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி யாழ். மறை மாவட்டக் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் ஜே. நீக்கிலஸ் அடிகளார் அன்பு அழைப்பு விடுத்துள்ளார்.

யூலை மாதம் 30 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை நிகழ்வுகள் மாலை 3.30 மணிக்கு திருப்பலியோடு ஆரம்பமாகி 6.30 மணிக்கு நிறைவுபெறும். முக்கிய நிகழ்வாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள், குருக்களுடன் இணைந்த நன்றிக் கூட்டுத் திருப்பலி யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். வாழ்த்துரைகளும் வெள்ளிவிழா மலர் வெளியீடும் இடம்பெறும்.

இந்நாளில் ஆயரோடு இணைந்து இறைவன் அவர்மேல் பொழிந்த அனைத்துக் கொடைகளுக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். மேலும், யாழ். ஆயர், யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்காக அவருக்கு எமது நன்றியையும் - அன்பையும் தெரிவிப்போம் என யாழ் குருமுதல்வர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## புதிய வாசக நூல்கள்
# விற்பனைக்கு

தற்போது இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள புதிய வாசக நூல்கள் மன்னார் வளனகத்தில் விற்பனைக்கு உண்டு.

இதன் விலை ரூபா 950.00. நாம் முற்பணம் செலுத்தி குறைநிரப்புப் பணத்திற்குப் பெற்றுக்கொண்ட (Subsidy Rates) 50 பிரதிகள் மட்டுமே தற்போது உள்ளன. இந்த 50 பிரதிகளே மேற்படி விலைக்கு விற்கப்படும். அதன்பிறகு நாம் இந்தியாவில் இருந்து பெறும் வாசக நூல்கள் இந்த விலையைவிட அதிகமான விலைக்கே விற்கப்படும். உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே இவை வழங்கப்படும் என்பதையும், யாருக்கும் முன்கூட்டியே ஒதுக்கி வைக்கப்படமாட்டாது என்பதையும் தயவுசெய்து கவனத்தில் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- வளனக நிர்வாகம் -

## பொதுநிலைப் பணியாளர்களுக்கான
# விவிலியக் கருத்தரங்கு





கடந்த யூலை 2ம் திகதி மடுத்திருப்பதியில் இடம்பெற்ற திருவிழாவோடு இணைந்ததாக மன்னார் மறைமாவட்டப் பொதுநிலைப் பணியாளர்களுக்கான கருத்தரங்கு இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் ஐந்து நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் 40 பணியாளர்களும், அடுத்த ஐந்து நாட்கள் நடைபெற்ற கருத்தமர்வில் 50 பேருமாக மொத்தம் 90 பேர் இதில் பங்கேற்றுப் பயன் அடைந்தனர். இந்தியாவில் இருந்து யூலைத் திருவிழாவுக்கு மறையுரையாற்ற வந்திருந்த அருட்தந்தை றேமன் யோசப் அடிகளார் இக்கருத்தமர்வை நெறிப்படுத்தினார். யோவான் நற்செய்தியை மையமாக வைத்து பொதுநிலைப்பணியாளர்களின் வாழ்வு மற்றும் பணி ஆகியவற்றோடு தொடர்புபட்டதாக இக்கருத்தரங்கு அமைந்திருந்தது. இதில் பங்கெடுத்தோர் தமக்கு இது ஓர் சிறந்த அனுபவம் எனக் கருத்துத் தெரிவித்தனர். இதில் தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்களே அதிகம் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வை மறைக்கல்வி நிலைய இயக்குனர் நேசன் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

## முதல் தடவையாக பிறந்த ஊருக்குச் செல்லும்
# திருத்தந்தை

எதிர்வரும் செப்டெம்பர் 9 - 14ஆம் திகதிகளில், திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தனது சொந்த மாநிலமான ஜேர்மனியிலுள்ள பவேரியாவிற்கு விஜயம் செய்வதை வத்திக்கான் உறுதி செய்துள்ளது.

இந்தப் பயணத்தில் திருத்தந்தை முனிச், அல்டேட்டிங் மற்றும் ரேகன்ஸ் ஆகிய இடங்களில் உள்ள திருத்தலங்களைப் பார்வையிடுவார். முனிச்சின் பேராயர் கருதினால் பிரடெரிக் வெட்டர் திருத்தந்தை கருதினாலாகும் முன் பேராயராக இருந்த தனது உயர் மறைமாவட்டமான முனிச்சில் திருப்பலி நிறைவேற்றுவார் என்றார்.

திருத்தந்தையின் குருச்சகோதரர் மோன்சிங்கர் ஜோர்ஜ் ரட்சிங்கர், "திருத்தந்தை என்னை எனது இல்லத்தில் சந்திப்பார். இருவரும் சேர்ந்து எங்கள் பெற்றோர்களின் கல்லறைக்குச் சென்று செபிப்போம்" என்று இத்தாலிய செய்தித் தாளுக்குப் பேட்டியளித்துள்ளார்.

## இரண்டாம் அருள் சின்னப்பரின் பரிந்துரையால்
# பார்கின்சன் நோயிலிருந்து குணம்பெற்ற அருட்சகோதரி

இரண்டாம் அருள் சின்னப்பரின் புனிதர்நிலை உயர்வுக்கு உதவியாக இருக்கும் விவரிக்க முடியாத நற்சுகம் மறைந்த இரண்டாம் அருள்சின்னப்பரின் பரிந்துரையால் பிரான்ஸ் நாட்டு அருட்சகோதரிக்கும் ஏற்பட்டுள்ளது என்று புனித நிலைக்கான காரணங்களை ஆராயும் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை சுகம் பெற்ற அருட்சகோதரியால் எழுதப்பட்டுள்ளது. இந்த அருட்சகோதரி பற்றிய விபரங்கள் வெளியிடப்படாமல் உள்ளது. இரண்டாம் அருள் சின்னப்பர் அனுபவித்த பார்க்கின்சன் என்ற அதே நோயால் இந்த அருட்சகோதரியும் துன்புற்று வந்துள்ளார். "நான் மறுபடியும் புதுப் - பிறப்படைந்துள்ளேன்" என்கிறார் இந்த அருட்சகோதரி. மேலும் அந்த சகோதரி, "இரண்டாம் அருள் சின்னப்பர் வழியாக ஆண்டவர் எனக்குப் புரிந்துள்ள அற்புதம் மறைபொருள், விவரிக்க முடியாதது. ஆனால், கடவுளுக்குத்தான் ஆகாதது எதுவுமில்லையே!." என்கிறார். "நீ நம்பினால், கடவுளின் மாட்சிமையைக் காண்பாய்" என்ற வசனத்தை செபித்த வண்ணம் இரண்டாம் அருள் சின்னப்பரின் பெயரை எழுத முயற்சித்துள்ளார். எழுந்து நிற்கக்கூட முடியாத இந்தச் சகோதரி, தொடக்கத்தில் இரண்டாம் அருள் சின்னப்பர் என எழுதக் கஷ்டப்பட்டாலும் தொடர்ந்து எழுத முயற்சித்தபோது எந்தக் கஷ்டமும் இல்லாமல் எழுதியுள்ளார். மேற்கூறிய புதுமைகள், போலந்து சென்ற திருத்தந்தையிடம் மக்கள் எழுப்பிய வேண்டுகோள் போன்றவற்றைப் பார்க்கும்போது, இரண்டாம் அருள் சின்னப்பர் விரைவில் புனிதர் நிலைக்கு உயர்தப்படலாம் என்று நம்பப்படுகின்றது.

## அதிகரித்துவரும் மேய்ப்புப் பணித்தேவையைக் கருத்தில்கொண்டு
## கொழும்பு உயர் மறை மாவட்டத்தில்
# அதிகாரப் பரவலாக்கல் முயற்சி



கொழும்புப் பேராயர்

இதுவரை கொழும்பு மறைமாவட்டத்தில் வடபகுதி தென்பகுதி என்று இரண்டு பேராயர் சிறப்புப் பணி முதல்வர்கள் (Episcpal Vicars) பொறுப்பாக இருந்தனர். வடபகுதிக்கு பேரருட்திரு யோ. விக்கிரமசிங்க அவர்களும் தென்பகுதிக்கு பேரருட்திரு மாக்கஸ் பெர்னாண்டஸ் அடிகளாரும் அதேபோல் மறைக்கல்வி, குடும்பப்பணி என்பவற்றுக்கு பேராயரின் சிறப்புப்பணி பொறுப்புப் பணி முதல்வராக பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ அடிகளாரும் பொறுப்பேற்றிருந்தனர்.

வடபகுதிக்குப் பொறுப்பான பேரருட்திரு யோ. விக்கிரமசிங்க அவர்களின் திடீர் மரணத்துக்குப் பின் பேராயர் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு ஒரு புதிய அதிகாரப் பரவலாக்கலை அறிமுகம் செய்துள்ளார். புதிய சில சிறப்புப்பணி முதல்வர்களையும் ((Episcpal Vicars) நியமித்துள்ளார். அதன்படி தமிழ் அப்போஸ்தலிக்கப் பணி மற்றும் குருக்களின் சுகாதாரம் என்பவற்றுக்குப் பேராயரின் சிறப்புப்பணி முதல்வராக பேரருட்திரு ஒகஸ்டின் பெர்னாண்டோ அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். வடகொழும்பு தென்கொழும்பு மத்திய கொழும்பு என்னும் மறைகோட்டங்களின் சிறப்புப் பணி முதல்வராக பேரருட்திரு ஐவன் பெரேரா அடிகளும் வத்தளை, ராகமை, குருபலிலை, கோட்டே மறைக் கோட்டங்களின் முதல்வராக பேரருட்திரு மாக்கஸ் பெர்னாண்டோ அடிகளாரும் மொரட்டுவை, களுத்துறை ஆகிய மறைக்கோட்டங்களுக்கு பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ அடிகளாரும் கட்டானை, துடல்லை, நீர்கொழும்பு, போலவலானை, கத்தனை ஆகிய மறைக்கல்வி கோட்டங்களுக்கு பேரருட்திரு சுசித் சில்வா அடிகளாரும் பேராயரின் சிறப்புப்பணி முதல்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சென்னை புனித தோமஸ் பேராலயம் சர்வதேச திருத்தலமாக மாற்றப்படும்

இந்தியா சென்னை மாநகர் சாந்தோமில் உள்ள புனித தோமஸ் பேராலயம் கடந்த பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி பெங்களூரில் நடைபெற்ற கத்தோலிக்க ஆயர்கள் கூட்டத்தில் தேசிய திருத்தலமாக அறிவிக்கப்பட்டது.

உலகில் இயேசுவின் சீடர்கள் சமாதியின்மீது கட்டப்பட்டுள்ள மூன்று தேவாலயங்களில் சாந்தோம் புனித தோமஸ் தேவாலயமும் ஒன்று. உரோமில் உள்ள புனித பீற்றர்ஸ் தேவாலயமும் ஸ்பெயினில் உள்ள புனித ஜேம்ஸ் தேவாலயமும் மற்ற இரண்டு தேவாலயங்களாகும். சென்னை மைலாப்பூர் பேராயர் சின்னப்பா சமீபத்தில் உரோம் சென்று திருத்தந்தை அலுவலகத்தில் தேவாலயம் தொடர்பான தகவல்களை வழங்கி இந்தத் தேவாலயம் சர்வதேச திருத்தலமாக அறிவிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### இலங்கை ஆயர் பேரவைப் பிரதிநிதிகள் மன்னார் வருகை

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களோடு நேரடிச் சந்திப்பு

## சம்பவ இடங்களுக்கு நேரில் சென்று மதிப்பீடு

மன்னார்ப் பகுதிகளில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் அசம்பாவிதங்களினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திப்பதற்காக இலங்கை கத்தோலிக்க ஆயர் குழுவினர் கடந்த 03.07.2006 அன்று மன்னாருக்கு வருகை தந்தனர்.

தாக்குதலுக்குள்ளான பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயம் உட்பட மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளுக்கும் ஆயர்குழுவினர் சென்றனர். இதேநேரம் பேசாலை அனர்த்தங்களை ஆராய மூன்று தினங்களுக்கு மேலாக மன்னாரில் தங்கி விசாரணைகளை நடாத்திவந்த ஜனாதிபதியின் விசேட ஆணைக்குழுவினரையும் ஆயர் மன்றக் குழுவினர் அன்றைய தினம் பேசாலையில் சந்தித்தனர்.

இலங்கை ஆயர் பேரவைத் தலைவரும், கண்டி மறைமாவட்ட ஆயருமான மேதகு வியன்னி பெணாண்டோ, காலி மறைமாவட்ட ஆயர் மேதகு கெரல் அந்தோனி, அனுராதபுரம் ஆயர் மேதகு நோபட் அந்திராடி, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேநேரம் அன்றைய தினம் மாலை மன்னார் செபஸ்ரியார் பேராலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மன்னார் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனின் செயலாளர், அரச, அரச சார்பற்ற திணைக்களத் தலைவர்கள், மீனவர் சமூகம், குருக்கள், கன்னியர் ஆகியோர் கலந்துகொண்டனர். மன்னாரில் மக்களுக்குள்ள பிரச்சினை தொடர்பாக இவர்கள் ஆயர் குழுவினரிடம் தெளிவாக எடுத்துரைத்தனர்.

## யுத்த அச்சம் காரணமாக யாத்திரிகர் மிகக்குறைவு

கடந்த யூலை மாதம் 2ஆம் திகதி, மடுப்பதியில் நடைபெற்ற திருவிழாவில் வழமைக்கு மாறாக மிகக் குறைந்த பக்தர்களே கலந்துகொண்டனர். இலட்சக் கணக்கில் வந்து குவிகின்ற யாத்திரிகர்களின் தொகை ஆயிரக் கணக்காக குறைந்திருந்தது. அன்னையின் திருவிழாக் கூட்டுத்திருப்பலி மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப், அனுராதபுர ஆயர் மேதகு நோபட் அந்திராடி ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் ஆயர் மறையுரை நிகழ்த்துகையில், இனிவரும் நாட்கள் எமது நாட்டில் அமைதியும் சமாதானமும் நிறைந்ததாக இருக்க வேண்டும். புலிகளும் அரசும் போர் நிறுத்த உடன்படிக்கையிலுள்ள அனைத்துச் சரத்துக்களையும் ஏற்று நடக்க வேண்டும். மனித உயிர்கள் அழிக்கப்படுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். தொடர்ந்து மனித இரத்தம் சிந்தப்படுவதை கத்தோலிக்க சமூகம் ஏற்றுக்கொள்ளாது. தற்போதுள்ள யுத்த பீதி காரணமாகவும், அச்சம் காரணமாகவும் மடு அன்னையை தரிசிப்பதற்கு காத்திருந்த மக்கள் தமது பயணத்தை மேற்கொள்ளவில்லை. இதையிட்டு நான் கவலையடைகிறேன் எனத் தெரிவித்தார்.

### பேசாலை ஆலயத் தாக்குதல் தொடர்பாக

# திருத்தந்தை ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் வெளியிட்டார்!

கடந்த யூன் மாதம் 17ந் திகதி பேசாலை ஆலயத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் கிறினைற் தாக்குதல் காரணமாக ஒரு வயோதிபத் தாய் மரணமடைந்து 46 பேர் காயமடைந்த சம்பவத்தை அறிந்து தாம் ஆழ்ந்த அதிர்ச்சியும் அதேவேளை கவலையும் கொண்டதாக திருத்தந்தை மன்னார் ஆயருக்கு அனுப்பிய செய்தியில் குறிபிட்டுள்ளார்.

இத்துர்ப்பாக்கிய சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் காலதாமதமின்றி அமைதி வழிமுறைகளுக்கு திரும்ப வேண்டும் எனத் திருத்தந்தை அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### குருத்துவ திருநிலைப்படுத்தல்

## அன்ரனி யேசுராஜன் (அமதி)



அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் அன்ரனி யேசுராஜன் (யோண்சன்) அவர்கள் எதிர்வரும் 09.08.2006 அன்று, மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில், மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட உள்ளார். (இவரோடு சேர்த்து இன்னும் இரண்டு அமதி அருட்சகோதரர்களும் மன்னாரில் திருநிலைப்படுத்தப்பட உள்ளனர். அவர்கள் பற்றிய விபரங்கள் சென்ற மன்னா இதழில் இடம்பெற்றுள்ளன)

யாழ் மறைமாவட்டம் வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. திருமதி பர்னாந்து மரியதாஸ் - அமலோற்பவம் தம்பதிகளின் புதல்வனாக, 28.07.1972 இல் இவர் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையிலும், உயர்கல்வியை வேரவில் இந்து மகா வித்தியாலயத்திலும் நிறைவுசெய்தார்.

அருட்தந்தை ம. சேவியர் கருணாரட்ணம் அடிகளாரால் அழைத்தல் ஊக்குவிப்புப் பெற்ற இவர், கொழும்புத்துறை புனித சூசையப்பர் அ.ம.தி சிறிய குருமடத்தில் பயிற்சி பெற்று, மெய்யியல் கல்வியை அம்பிட்டிய தேசிய குருமடத்தில் கற்று, மெய்யியல்மாணிப் பட்டமும், இறையியல் கல்வியை யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர்குருமடத்தில் கற்று, இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

'அன்னை' இல்லத்திலே உளவளத்துணையாளராகத் தியாக்கோன் பணி புரிந்தார். (தவிர்க்க முடியாத காரணத்தால் இவருடைய விபரங்களை சென்ற மன்னா இதழில் வெளியிடமுடியாமல் போனமைக்காக வருந்துகிறோம்.)

- பதிப்பாசிரியர்

### குருக்களின் உருவாக்கத்தில் பங்கேற்ற

## ஜெராட் அடிகளாரின் தாயார் திருமதி சவிரிமுத்து இறைபதம்!



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஜெராட் சவிரிமுத்து அடிகளாரின் தாயார் திருமதி மாகிரேட் சவிரிமுத்து அவர்கள் கடந்த 08.06.2006 அன்று காலமானார். கடந்த 14.06.2006 அன்று யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் ஜெராட் அடிகளாரின் தலைமையில் இரங்கல் கூட்டுத்திருப்பலி ஒப்புக் - கொடுக்கப்பட்டது.

யாழ் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையின் இளைப்பாறிய உப அதிபரான இவர், யாழ் புனித மடுத்தீனார் சிறிய குருமடம், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ஆங்கிலக் கற்பித்தலில் நீண்ட காலம் ஈடுபட்டு குருக்களை உருவாக்கும் பணியில் துணை புரிந்தவர்.

தமது மகனை யாழ். மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்த இந்த அன்புத் தாயாரின் ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னார் மறைமாவட்டக் குருக்களின் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்.

### சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்

## செடக் அமைப்பின் மாநாடு




கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் செடெக் அமைப்பின் சமாதான மாநாடு நடைபெற்றது.

அதில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு மாரி செனாரி ஆண்டகை, இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்கள் பேரவைத் தலைவர் மேதகு வியானி பெர்ணாண்டோ, பதுளை ஆயர் மேதகு வின்ஸரன்ற், உகண்டா நாட்டின் பேராயர் மேதகு கணா, சிலாபம் பேராயர் பிராங்மார்க்கஸ், கரிற்றாஸ், இலங்கை செடெக் நிறுவன தேசிய இயக்குனர் அருட்பணியாளர் டேமியன் பெர்ணாண்டோ ஆகியோர் திருப்பலி ஒப்புக்கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# பங்குத்தள சங்கதிகள்

### பள்ளிமுனையில் பல்வேறு நிகழ்வுகள்

1. பள்ளிமுனைப் பங்கில் 27.04.2006 அன்று அருட்தந்தை விக்ரர் சோசையின் வழிநடத்தலில், அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் புதிய அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

2. தூய ஆவியின் பெருவிழாவை முன்னிட்டு 03.06.2006, மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை திருவிழிப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அதைத்தொடர்ந்து, ஞாயிறு காலை அன்பிய ஊக்குவிப்பாளர்கள் பரிசுத்த ஆவியின் ஏழு கொடைகளையும் பிரதிபலிக்கும் ஏழு கொடிகளை ஏற்றி, அன்பிய வாரத்தை ஆரம்பித்ததுடன் அன்று அருட்தந்தை நேசன் அடிகளாரினால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

5. கடந்த 18.06.2006 அன்று இயேசுவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவுடன் சேர்த்து திருப்பாலத்துவ சிறார்களினால் பாப்பரசர் தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

*திருமதி. ஜே. ஷமிலா, பள்ளிமுனை.*

### தலைமன்னாரில் பீடப்பணியாளர் தினம்

தலைமன்னார் பங்கில் புனித ஞானப்பிரகாசியார் திருநாளில் பீடப்பணியாளர் தினம் 21.06.2006 அன்று நினைவுகூரப்பட்டது. ஆனால் இந்த நாள் பாடசாலை வேலை நாளாக இருந்தபடியால் இத்தினமானது, 24.06.2006 அன்று சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. காலை 6.30 மணிக்கு சிறப்புத் திருப்பலி பங்குத்தந்தை அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் அனைத்து நிகழ்வுகளையும் பீடப்பணியாளர்கள் பொறுப்பேற்று நடத்தினர். இதில் 25 பீடப்பணியாளர்கள் இணைந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து, சிறு விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. இதன் முடிவில் மதிய உணவு அனைத்துப் பீடப்பணியாளர் வீட்டில் இருந்தும் வரவழைக்கப்பட்டு பகிர்ந்து அளிக்கப்பட்டது. பி.ப. 2.30 மணிக்கு நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற்றன.

*தகவல் : பொறுப்பாளர், தே. ஜெகன் பீரிஸ், தலைமன்னார் மேற்கு.*

### மீண்டும் கைவிடப்படும் நிலையில் ஓமந்தைப் பங்கு!

கடந்த மூன்றாண்டுகளாக புத்துயிரளிக்கப்பட்டு வந்த ஓமந்தைப் பங்கு மீண்டும் வனம் சூழ்ந்து, மக்களும் - குருவும் வெளியேறும் நிலையில் உள்ளது. சிலர் வெளியேறியும் உள்ளனர். அனைத்திற்கும் காரணம் முனைப்புப்பெற்று வரும் யுத்த ஆயத்தம் தான். மிகுந்த மனக்கவலையுடன் பங்குக் குருவும், பங்கு மக்களும் காணப்படுகின்றனர்.

ஏற்கனவே ஏற்பட்ட யுத்த அனர்த்தம், அதனால் விளைந்த இடப்பெயர்வு என்பவற்றின் காயங்கள் இன்னமும் முழுமையாக மாறாதபோது, மீண்டுமொரு சமர் வெடித்தால், நிலைமை என்னாகும் என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். தமிழ் பேசும் ஒரே இனமக்கள் வாழும் பங்கு ஓமந்தைப் பங்கு. இனிமேலும் உண்டாகும் துயரத்தின் நீளம் இன்னமும் எத்தனை வருடமோ என்று சகல தரப்புக்கும் கேள்வி எழுப்பி, துயர வினா விடுக்கின்றனர் பங்கு மக்கள்.

*மன்னாவின் வவுனியா செய்தியாளர், அ. பேணாட்.*

### முதற் திருவிழாக் கண்ட ஆச்சிபுரம் புனித அந்தோனியார் ஆலயம்

பெரிய கோமரசன்குளம் பங்கில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆச்சிபுரம் கிராமத்தில், புனித அந்தோனியார் ஆலயம் அமைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்காலிகக் கொட்டகையில் இயங்கி வரும் இவ்வாலய முதல் திருநாள் திருவிழா கடந்த 15.06.2006 வியாழக்கிழமை, பங்குத்தந்தை அருட்திரு சகாயநாதன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் ஆயத்த வழிபாடு நடைபெற்றன.


நற்கருணை நாள் அன்று வந்திருந்த வவுனியாப் பங்குத்தந்தை அருட்திரு பெப்பி சோசை அடிகளார், தியாகத்தின் மேன்மைபற்றி மறையுரை ஆற்றினார். 18.06.2006 காலை 7.30 மணிக்கு, பங்கு மக்கள்சூழ திருநாள் திருப்பலியை சிறப்பிக்க மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களான குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளாரும் மற்றும் ஜே. பி. தேவராஜா அடிகளாரும் வருகை தந்திருந்தனர். - *ஜே. பி. நவீன்குமார்.*

### விடத்தல்தீவில் புதிய குரு வரவேற்கப்படுகிறாா



விடத்தல்தீவுப் பங்கின் புதிய அருட்பணியாளர் எ. டெனி கலிஸ்ரஸ் தமது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுக்க வருகை தருவதையும், பங்கு மக்கள் சார்பில் மேய்ப்புப்பணிச் சபைச் செயலாளர் திரு. பீ. இராயப்பு (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்பதையும் படத்தில் காணலாம்.

### ஆச்சிபுரம் அந்தோனியார் திருவிழா நிகழ்வுகள்



வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா

# ஆயர்த்துவப் பணியில் இருபத்தைந்தாண்டுகளை நிறைவு செய்யும்

# மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை

## வளர்ந்து வரும் மன்னார் மறைமாவட்டத்திற்கு தளர்ந்துபோகா அடித்தளம் இட்ட ஆயர் பெருந்தகை !

### மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை

யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தனது ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்வதையிட்டு அன்னாருக்கு எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியோடு தெரிவித்து நிற்கின்றேன்.

ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்வதென்பது உண்மையிலேயே ஆண்டவருக்கு நன்றிப் பண் பாடவேண்டிய ஓர் அருமையான - அற்புதமான நிகழ்வு!

திருச்சபையில் ஆயர்கள் எனப்படுவோர் யார் என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் இரத்தினச் சுருக்கமாக பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

"மறைமாவட்டம் என்பது திருப்பணியாளர்களின் ஒத்துழைப்புடன் கண்காணிக்கப்படுவதற்காக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களின் ஒரு பகுதி. இவ்வாறு ஆயரோடு இணைந்திருப்பதாலும் நற்செய்தி வழியாகவும் நற்கருணை வழியாகவும் அவரால் ஒன்றுகூட்டப்படுவதாலும் அஃது ஒரு தனிப்பட்ட சபையாக உருப்பெறுகிறது. அதில் கிறிஸ்துவின் ஒரே, தூய பொதுவான, திருத்தூதுத் திருச்சபையாகவே உள்ளது, செயலாற்றுகிறது. ஒவ்வோர் ஆயரும் கண்காணிப்பதற்காகத் தனிப்பட்ட சபை ஒன்று அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. திருத்தந்தையின் அதிகாரத்தின்கீழ் ஆயர்கள் இச்சபைகளுக்கு இயல்பான, பணிசார்ந்த அதிகாரமுடைய நேரடியான அருட்பணியாளர்களாக இருந்து ஆண்டவரின் பெயரால் தம் ஆடுகளை ஊட்டி வளர்க்கின்றனர். இவ்வாறு *கற்பித்தல், தூய்மைப்படுத்தல், வழிகாட்டுதல்* ஆகியவற்றை உள்ளடக்கிய தமது பணியைத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் குழுவைப் பொறுத்த மட்டில் அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்." (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபையில் ஆயர்களின் அருட்பணி பற்றிய விதித் தொகுப்பு எண். 11)

ஒரு ஆயருக்கு திருச்சபை வரையறுத்துள்ள இந்த முப்பணிகளையும் மிகுந்த பொறுப்போடும், பொறுமையோடும் செய்து வருபவர் ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள்.

"இறைவார்த்தையை அறிவி, வாய்ப்புக் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு. கண்டித்துப் பேசு, கடிந்துகொள், அறிவுரை கூறு, மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு" (2 திமொத்தேயு 4:2) எனப் பவுலடியார் திமொத்தேயு என்ற ஆயருக்கு எழுதிய வார்த்தைகளை தம் வாழ்வாக்கி வாழ முயற்சித்தவர் தோமஸ் ஆண்டகை அவர்கள்.

ஈழ மண்ணில் தமிழர் விடுதலைப் போராட்டம் முனைப்புப்பெற்று, தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் போர்ச்சூழல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் இருந்துதான் இவருடைய ஆயர் பணியும் ஆரம்பமாகியது.

கடந்த 25 ஆண்டுகளாக அதுவும் தமிழர்களின் வரலாற்றில் மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்திலே தமிழ் தலத்திருச்சபையின் ஆயராக இருந்து திருச்சபை சார்ந்த தனது பொறுப்புக்களையும் நாடு சார்ந்த தன் கடமைகளையும் மிகுந்த பொறுமையோடும் பொறுப்புணர்வோடும் நிறைவேற்றி வருகின்றார்.

ஆயர் பணி என்பது எத்துணை சவால்களும் சுமைகளும் நிறைந்தது என்பதை எனது அனுபவத்தில் இருந்து நான் கண்டுணர்ந்த ஒன்று. இவருடைய ஆழமான செப வாழ்வே இந்த சவால்கள், சுமைகள் மத்தியில் மனம்தளராமல் இவருடைய பணிவாழ்வில் இவர் தொடர்ந்து நடைபயில உதவியுள்ளது என நான் கருதுகின்றேன்.

தோமஸ் ஆண்டகை அவர்கள் கடந்த 13 ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயராகப் பொறுப்பேற்று இந்த இளம் மறைமாவட்டத்தைத் தந்தைக்குரிய அக்கறையோடு வழிநடத்தியதை நினைவுகூர்ந்து மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக நான் அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

புதிய மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு உறுதியான அடித்தளத்தைத் தனது பணிக்காலத்தில் அவர் இட்டிருக்கின்றார். தூர நோக்கோடு அவர் இட்ட அடித்தளத்தில் இருந்து தொடர்ந்து இம்மறைமாவட்டத்தை பல்வேறு துறைகளிலும் கட்டியெழுப்பி, வளர்த்தெடுக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம்.

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் உடல் உள ஆன்மீக நலம் பெற்று, நீடூழி காலம் வாழ இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**மன்னார் மறைமாவட்டக் குருக்கள் இறைமக்கள் சார்பாக எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் உளமாரத் தெரிவித்து நிற்கின்றேன்.**

புதிய மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு தோமஸ் ஆண்டகை உறுதியான அடித்தளத்தைத் தனது பணிக்காலத்தில் இட்டிருக்கின்றார். தூர நோக்கோடு அவர் இட்ட அடித்தளத்தில் இருந்து தொடர்ந்து இம்மறைமாவட்டத்தை பல்வேறு துறைகளிலும் கட்டியெழுப்பி, வளர்த்தெடுக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம்.

மன்னார் ஆயர்
மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை



## பிரிவின் துயரும் ........!
## உறவின் மகிழ்வும் .........!



1992ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் தோமஸ் ஆண்டகை மன்னாரிலிருந்து மாற்றலாகிச் செல்கின்றார். மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராகிய யோசேப்பு ஆண்டகை மறைமாவட்டத்தின் ஆயர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அவ்வேளையில் மன்னார் மறைமாவட்டக்குருக்களோடு சேர்ந்து இரண்டு ஆயர்களும் எடுத்துக்கொண்ட படம்.

## மன்னார் மறைமாவட்டத்திற்கு தோமஸ் ஆண்டகை ஆற்றிய சேவையை மன்னார்க் குருக்களும், இறைமக்களும் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்

### அருட்தந்தை அ. சேவியர் குரூஸ் அடிகளார்

1981ம் ஆண்டு, வைகாசித் திங்கள், 29ம் நாள் மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் மன்னார் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் கூடியிருந்த மன்னார் மறைக்கோட்டக் குருக்கள், மற்றும் பெருந்தொகையான மக்கள் மத்தியில் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதும், மகிழ்ச்சி நிறைந்ததுமான செய்தியான மன்னார் மறைமாவட்டத்தின் உதயத்தையும், இதன் முதல் ஆயராக மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் திருத்தந்தை 2ம் யோண் பவுலினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியையும் வெளியிட்டார். இந்தச் செய்தியானது, மன்னார் வாழ் மக்கள் அனைவராலும் மிகுந்த மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் வரவேற்கப்பட்டது.

புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல் சடங்கு, 1981ம் ஆண்டு, ஆடித் திங்கள் 30ம் நாள், மன்னார் பிரதேச மக்களால் மட்டுமல்ல, எமது நாட்டு மக்கள் அனைவராலும் மிகுந்த அன்புடனும், பக்தியுடனும் பூஜிக்கப்படும் மடு அன்னையின் திருத்தலத்தில் இடம்பெற்றது. மறக்க முடியாததும், பிரமிக்கத்தக்கதுமான இந்த நிகழ்வில் பல ஆயர்கள், பெருந்தொகையான குருக்கள், நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்தும் வருகை தந்த ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். புதிய ஆயரின் பதவியேற்பு வைபவம் ஆவணித் திங்கள், 2ம்நாள், புனித செபஸ்ரியார் பேராலயத்தில் இடம்பெற்றது. தொடர்ந்து, மன்னார் மக்களால் புதிய ஆயருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இது புதிதாகப் பதவியேற்ற புதிய ஆயருடன் கூடிய, புதிய மறை மாவட்டமாகையால், புதிய மேய்ப்பருக்கு தனது மேய்ப்புப்பணியை ஆரம்பிப்பது என்பது இலகுவான காரியமல்ல. புதிய மறைமாவட்டத்தினதும், அதன் மக்களினதும் உண்மை நிலையைக் கவனத்திலெடுப்பதற்கு ஒரு தெளிவான தூரநோக்குத் தேவைப்பட்டது. இதனால், புதிய ஆயர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டை ஒழுங்குசெய்து, குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் இதில் பங்குகொள்ள அழைப்பு விடுத்தார். இதில் இருநூறுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.

இந்த மாநாட்டின்போது, புதிய மறைமாவட்டத்திற்கான ஒரு புதிய நோக்கும், வேலைத் திட்டங்களும் முன்மொழியப்பட்டன. விசேடமாக இறைவார்த்தையால் ஊட்டம் பெற்ற சிறிய கிறிஸ்தவ குழுமங்களைக் கட்டியெழுப்புதல், அர்ப்பணிப்பு மிக்க பொதுநிலைத் தலைவர்களை உருவாக்குதல், மக்களின் சமூக மேம்பாட்டிலும் விசேடமாக சிறுவர்களதும், இளைஞர்களதும் கல்வியில் கூடிய கவனமெடுத்தல்,போன்ற வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டன.

முன்மொழியப்பட்ட நோக்கங்களைக் குறைந்தளவான வளங்களுடன் முன்னெடுத்துச் செல்வது புதிய ஆயருக்கு ஒரு பாரிய பணியாயிருந்தது. ஒரு சில குருக்களுடனேயே (அவர்களில் சிலர் யாழ் மறைமாவட்டத்தைச் சார்ந்தவர்கள்.) தனது மேய்ப்புப் பணியை ஆரம்பித்தார். தேவைப்பட்ட இடங்களில் புதிய பங்குகளை உருவாக்கினார். இதன் மூலம் சிறிய சமூகங்களில் கூடிய அக்கறை காட்டக் கூடியதாயிருந்தது. தனது மந்தையையும், அவர்களது வாழ்க்கை நிலைகளையும் அறிந்துகொள்ளும் முகமாக அனைத்துப் பங்குகளையும் தரிசிக்க ஆரம்பித்தார்.

துரதிஷ்டவசமாக நாட்டுப் பிரச்சினை தலைதூக்கி, போர் வெடித்தபோது, அப்பொழுதுதான் தனது உயிரோட்டமுள்ள வாழ்வில் தடம்பதித்த மன்னார் தலத்திருச்சபைக்கு அது ஒரு மாபெரும் சோதனைக் களமாய் இமைந்தது.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களில் கணிசமான தொகையினர் 1988ல் மீண்டும் திரும்பி வரத் தொடங்கியபோது, அவர்களைத் தமது சொந்த இடங்களிலும், பங்குகளிலும் மீளவும் குடியமர்த்துவது மிகவும் கடினமான பணியாயிருந்தது. ஆயர் ஒரு செபத்தின் மனிதர். எனவே இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டவராக, தமது குருக்களின் உதவியுடனும், மறைமாவட்டத்தின் சமூகக் கரமாகத் திகழும் வாழ்வுதயத்தின் ஊடாகவும் பொறுமையுடன் புனர்வாழ்வுப் பணிகளை ஆரம்பித்தார்.

மன்னார் மறைமாவட்டத்திற்குத் தனது சேவையை அளிப்பதற்குப் புதிய ஆயர் தன்னை அர்ப்பணித்த காலமானது, ஆரம்பத்திலிருந்தே அமைதியான காலமாயிருக்கவில்லை. நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினையால் அவர் விபரிக்க முடியாத துன்பங்களுக்கு ஊடாகப் பயணம் செய்ய வேண்டியேற்பட்டது.

1992ம் ஆண்டு, அவர் யாழ் மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றதால், தனது பொறுப்பை ஏற்பதற்காக மன்னாரைவிட்டுச் செல்ல வேண்டியேற்பட்டது. ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் பதினொரு ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்திற்கு ஆற்றிய சேவையை இம்மறைமாவட்டத்தின் குருக்களும், இறைமக்களும் நன்றியுடன் நினைவு கூருகின்றனர். அவரது திருநிலைப்படுத்தலின் வெள்ளி விழா நாளில், நாம் அனைவரும் எமது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களையும் - செபங்களையும் நிறைவாய் அளித்து நிற்கின்றோம்

**எமது அன்னையாகிய மடு அன்னை அவரை ஆசீர்வதித்து என்றும் பாதுகாப்பாராக.**

# சிறுவர் பொழிவு



## பணம் படுத்தும் பாடு
### – சிறுவர் கதை –

"பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் ஒருவருக்கும் உன்னைத் தெரியாது."

சேகரும், மோகனும் சிறு வயது முதலே நண்பர்கள். இருவருமே ஏழைகள் என்றாலும் மோகன் சேகருக்கு எத்தனையோ சமயங்களில் உதவி செய்திருக்கிறார். சேகரின் தங்கை டெரன்சி திருமணத்திற்காகத் தன் சொந்தான ஒரே வீட்டை அடைமானமாக வைத்துப் பணம் வாங்கிக்கொடுத்து உதவியிருக்கிறார். சேகரின் தந்தை அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருந்தபொழுது தன் இரத்தத்தைக் கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறார். சேகருக்கு மலேரியாக் காய்ச்சல் வந்து படுத்த படுக்கையாய் எந்த உறவினர்களும் எட்டிப் பார்க்காமல் இருந்தபொழுது, தன்னுடைய வீட்டுப் பாத்திரங்கள் சிலவற்றை விற்று வைத்தியம் செய்து குணப்படுத்தியிருக்கிறார். சேகர் வீட்டில் உணவு சமைக்கவில்லை என்று கேள்விப்பட்டால் உடனே தன் வீட்டுச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு அன்று தன் குடும்பத்தோடு பட்டினி கிடந்திருக்கிறார்.

"மோகன்! நீ எனக்கு எத்தனையோ உதவிகள் செய்துகொண்டு வருகிறாய். ஆனால் இதற்கெல்லாம் நான் உனக்கு எப்படி நன்றி செலுத்துவேனோ தெரியவில்லை...." என்று சொல்லி சேகர் அடிக்கடி உணர்ச்சிவசப்படுவார். "நண்பனுக்காக இந்த உதவிகள்கூடச் செய்யவில்லையென்றால் நண்பன் என்று இருந்து என்ன பிரயோசனம்? உனக்கொரு கஷ்டம் வந்தால் நான் உதவுவதைப்போல நாளை எனக்கொரு கஷ்டம் என்றால் நீ உதவாமலா போய்விடுவாய்? நமக்குள் எதற்கு நன்றியெல்லாம்?" என்று மோகன் கூறிவிடுவார்.

ஒருநாள் சேகருக்கு லொட்டரி ரிக்கெட்டில் பத்து லட்சம் ரூபாய் விழுந்தது. அதனால் சேகர் புதுப்பணக்காரன் ஆனார். அவருக்குப் புதுப்புது உறவினர்களும், நண்பர்களும் திடீரென்று உருவானார்கள். கார், பங்களா என்று ஆடம்பரமாக வாழ ஆரம்பித்தார். அதனால் தன் உயிர் நண்பன் மோகனை மறந்து விட்டார். முன்புபோல மோகனுடன் பழகுவதைத் தவிர்த்தார்.



ஒருநாள் மோகனின் மகன் ராஜாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. இரண்டு நாட்களில் சத்திர சிகிச்சை செய்தால்தான் பிழைக்க வைக்க முடியும் என்ற நிலை! அதனால் மோகன் பணத்திற்காக எங்கெங்கோ அலைந்து திரிந்தும் எந்தப் பணமும் கிடைக்கவில்லை.

கடைசியாகச் சேகரிடம் சென்று பணம் கடன் கேட்கலாம் என்று நினைத்துக்கொண்டு வந்து கேட்டார். சேகரோ, "நண்பன் என்று சொல்லிக்கொண்டு என்னிடம் வராதே." என்று மோகனை அவமதித்தார்.

சேகருக்கு ஜெகன் என்ற ஒரு புது நண்பன் கிடைத்தார். ஆனால் ஜெகனோ சேகரை ஏமாற்றிவிட்டுக் கிடைத்த பணத்தைச் சுருட்டிக்கொண்டு மறைந்துவிட்டார். சேகருக்குக் கடன் தொல்லைகள் தாங்க முடியவில்லை. கடன் கொடுத்தவர்கள் அவரை அரிக்கத் தொடங்கினார்கள். அதனால் நண்பர்களிடம் உதவி கேட்டுப் போனார். "நீ யாரென்றே தெரியவில்லை" என்று எல்லோரும் கூறிவிட்டனர். பிச்சைக்காரனைப்போல் அலைந்தார். எல்லோரும் சிரித்தனர். அவ்வழியே வந்த மோகன் அவரைக் காப்பாற்றினார்.

சேகரின் தாடி, மீசை அவர் இருந்த நிலை இவற்றால் சேகரை மோகனால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. மோகனின் உயர்ந்த குணத்தையும், தேடிவந்து உதவும் குணத்தையும் புரிந்துகொண்டார் சேகர். எத்தனையோ ஆபத்துக்களில் உதவிய உயிர் நண்பனுக்காகத் தான் சிறிய உதவிகூடச் செய்ய மறுத்து அவமானப்படுத்தியதற்காக மனதுக்குள் வருந்தினார். "நீங்க யார்?" என்று மோகன் கேட்டபோது சேகர் எதுவும் சொல்லவில்லை. அவரிடம் சொல்லாமலே தலை குனிந்து கிளம்பிப் போய்விட்டார்.

"பணம் இருந்தபோது நம்மையே நமக்குத் தெரியவில்லை. பணம் இல்லாதபோது யாருக்கும் நம்மைத் தெரியவில்லை" என்று நினைத்துக்கொண்டே நடந்தார் சேகர்.

*பீ. இருதயமேரி வியோன், அரிப்பு, சிலாவத்துறை, 7ம் வட்டாரம்.*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-21



81. சிறிது நேரத்தில் நகரெங்கும் செய்தி பரவியது. அவரைப் பார்க்க ஏராளமான மக்கள் மடத்திற்கு ஓடி வந்தனர். அங்கு வந்த நோயாளிகள் சிலர் அவரது உடலைத் தொட்டுக் குணமானார்கள். அடுத்த நாள் அவரை அடக்கம் செய்தார்கள். அனைவரும் அவரைப் புனிதராகக் கருதி வணங்கினர்.


82. அவரை நோக்கிச் செபித்தவர்கள் பெற்ற வரங்கள் கணக்கிலடங்கா. எவ்வளவு புதுமைகள் நிகழ்ந்தனவென்றால் அவர் இறந்த ஒரு வருடத்திற்குள் திருத்தந்தை அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

83. ஏராளமானவர்கள் ஏதாவது பொருட்கள் காணாமற் போனால், புனிதரிடம் வேண்டிக்கொள்வார்கள். புனித அந்தோனியார் அவர்கள் விண்ணப்பங்களை ஒருநாளும் மறுத்தது கிடையாது. ஆனால் புனிதரிடம் வேண்டும்போது, ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்து உதவுவதாக அவருக்கு வாக்களிப்பது சாலச் சிறந்தது. ஏனென்றால் அவர் ஏழைகளை அவ்வளவு அதிகம் நேசித்தார்.

84. ஆம். புனித அந்தோனியார் காணாமற்போன கடிகாரம், பேனா போன்ற பொருட்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதில் சிறந்தவர். ஆனால், அனைத்துக்கும் மேலாக, விலை மதிக்க முடியாத ஒன்றைக் கண்டுபிடித்தார். இறை இயேசுவைக் கண்டார். நற்செய்திப் படிப்பினையையும் கண்டார். அதனை நாம் கடைப்பிடிக்கும்போது, அது மோட்சத்தின் திறவுகோல்போல இருக்கிறது.

## மெல்லச் சிரிங்க...!





நண்பர்: உமக்கு என்ன வயது?
முல்லா: நாற்பது வயது.
நண்பர்: ஐந்து வருடங்களுக்கு முன்னர் கேட்டபோதும் நாற்பது என்றீர் இப்போதும் அதே வயதுதானா?
முல்லா: என்னிடம் நேற்று ஒரு பேச்சு நாளையொரு பேச்சு கிடையாது. எப்போதும் ஒரே பேச்சுத்தான்!

*அ. ஜெனி, பெரியமுறிப்பு, முருங்கன்.*

மஞ்சு: எனக்கு கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் எல்லாம் பிடிக்கும்.
கெஞ்சு: உன் காதலருக்கு?
மஞ்சு: அவர் அரசியல்வாதியாச்சே "பித்தலாட்டம்" தான் பிடிக்கும்.

**************

ஒருவர்: தலைவருக்கு ஆத்துமீன் பிடிக்குமா? கடல் மீன் பிடிக்குமா?
மற்றவர்: ஜாமீன்தான் பிடிக்கும்

**************

*ஒருவர்:* உங்க மனைவி ஒரு கன்னதில் அடித்தால் ஏன் மறு கன்னத்தையும் காட்டுனீங்க சார்?
*மற்றவர்:* எனக்கு கன்னம் வலிச்சாலும் பரவாயில்ல. அவளுக்கு கை வலிக்கணும்.

*எஸ். மேர்சி தனுஜா, பாலையடிப் புதுக்குளம்.*

*நீதிபதி :* என்ன தைரியம் இருந்தா, நீதிபதி வீட்டிலேயே திருடியிருப்பே?
*குற்றவாளி :* இது எனக்கு 100வது திருட்டு சார்! கொஞ்சம் விசேஷமா இருக்கட்டுமேன்னுதான்....!

*சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்*

ஆசிரியர்: அன்பு என்றால் என்ன? காதல் என்றால் என்ன?
மாணவன்: அன்பு என்றால் நீங்கள் உங்கள் மகள்மீது வைப்பது. காதல் என்றால் நான் உங்கள் மகள்மீது வைப்பது.

*அ. விமல றஜனி, பெரியமுறிப்பு. முருங்கன்..*

ஆசிரியர்: ரிப்போட்டில் அப்பாவிடம் கையெழுத்து வாங்காமல் உன் அம்மாவிடம் ஏன் வாங்கிக்கொண்டு வந்தாய்?
மாணவன்: குடும்பத் தலைவரின் கையெழுத்தை வாங்கிக் கொண்டு வரவேண்டும் என்றுதானே நீங்க சொன்னிங்க...!

*அ. றொபின்சன், பெரியமுறிப்பு, முருங்கன்.*

தந்தை: பரீட்சை மண்டபத்தில நித்திரை கொண்டேன் எண்டு சொல்ல உனக்கு வெட்கமா இல்லையா?
மகன்: என்னப்பா! நீங்கதானே சொன்னிங்க... விடை தெரியாட்டி முழுச்சுக்கொண்டு இருக்காதே எண்டு.

**************

கண் வைத்தியர் : நீங்கள் கண்ணாடி போட வேண்டி வரும்.
மற்றவர்: அதெப்படி சார், செக் பண்ணாமலே சொல்றிங்க...?
ஒருவர்: கதவு இருக்க நீங்கள் ஜன்னல் வளியே வாறீங்க அதுதான்.

*மி. ஜான்சி, ஆட்காட்டிவெளி.*

### ஓட்டுனரும் இருக்கையைக் கொடுத்திருப்பார்....

ஒரு பேரூந்தில் வயதானவர் ஒருவர் ஏறினார். உட்கார இருக்கை இல்லை. நடத்துனர் இருக்கை மட்டும் காலியாக இருந்தது. அதில் உட்கார்ந்தார். நடத்துனர் "ஏய் கிழவா! இது என் இருக்கை எழுந்திரு" என்றார். வயதானவரும் அவமானத்துடன் எழுந்தார்.

அடுத்த நிறுத்தத்தில் ஓர் அழகான இளம் பெண் பேரூந்தில் ஏற நடத்துனரும் எழுந்து தமது இருக்கையை அவளுக்குக் கொடுத்தார். அதைப்பார்த்த அந்த வயதான மனிதர், "நல்ல வேளை ஒரு பெண் மட்டும் ஏறினாள், நடத்துனர் தமது இருக்கையை அவளுக்கு கொடுத்துவிட்டார். இன்னொரு பெண்ணும் ஏறியிருந்தால் ஓட்டுனரும் எழுந்து தமது இருக்கையை அவளுக்குக் கொடுத்திருப்பார்" என்றார். பயணியரின் சிரிப்பலையில் பேரூந்து நிறைந்தது.

*மேரி கொண்சிற்றா, இல- M8, மடுக்கோவில், மடு.*

## கவிதைப் பூக்கள்

### அன்னை



தாயே உன் தயவில்
நோய் இன்றிப் போனதம்மா
வாயார உன் புகழை
வாழ்த்தித் தினம் வணங்கிடுவேன்.

தயவின்றி பயமின்றி
தரணியிலே தலை நிமிர்ந்து
தவழ்ந்து வந்து உன் புகழை
நித்தம் நான் உரைத்திடுவேன்!

*வ. ஜான்சி மேரி, தரம் - 08, மன். தலைமன்னார் அ.த.க.பாடசாலை, தலைமன்னார்.*

### மனிதன் மனிதனாக இருக்க



தோற்றத்தில் அடக்கம் வேண்டும்
செல்வத்தில் எளிமை வேண்டும்
வறுமையில் வாய்மை வேண்டும்
சினத்தில் பொறுமை வேண்டும்
தொழிலில் நேர்மை வேண்டும்
கடமையில் நாணயம் வேண்டும்
வாழ்க்கையில் கட்டுப்பாடு வேண்டும்
பழகுவதில் கண்ணியம் வேண்டும்
வாக்கில் உண்மை வேண்டும்
சிந்தனையில் தெளிவு வேண்டும்
செயலில் மனிதம் வேண்டும்
முயற்சியில் தூய்மை வேண்டும்.

*சி. ரி. மாசில்லா, நாவற்காடு, மாம்புரி, புத்தளம்.*

### அன்பு



ஒளியானது அன்பு - அது
ஓங்கி வளரும் அன்பு
இனிமையானது அன்பு - அது
இருளை நீக்கும் அன்பு
அமுதம் போன்ற அன்பு - அது
அடித்து அணைக்கும் அன்பு
பொறுமையுள்ள அன்பு - அது
பொங்கி வழியும் அன்பு
துணையாய் வரும் அன்பு - அது
தூய்மையான அன்பு.

*தே. இமாக்குலேற் லெம்பேட் (சோபா), கொவ்வங்குளம், நானாட்டான்.*

### மனித மனம்

எண்ணத்தின் இருப்பிடம் அறிவுரையின் பொதுவிடம்
அறிஞர்களின் தொகுப்பிடம் கவலையின் பதிவிடம்
எதிர்பார்ப்பை அடக்குமிடம் ஆசைகளின் புகலிடம்
நினைவுகளின் சேமிப்பிடம் மனிதர்களின் சிறு இடம்.

*எஸ். வினோதினி, மன். பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை.*

### மணம் வீசும் மல்லிகையே

மல்லிகையே மல்லிகையே மணம் வீசும் மல்லிகையே
மங்கையரின் உள்ளத்தை மகிழவைக்கும் மல்லிகையே!

மாலையில் மலர்வாய் மகிழ்வுடன் பார்க்க
வீட்டினில் வளர்த்தேன் மகிழ்வுடன் மலர்ந்தாய்.

மாமியாரின் கொண்டையிலே சாமியாரின் அறையினிலே
மருமகளின் கூந்தலிலே மகிழ்வாய் வீற்றிருப்பாய்.

உனக்காகப் பந்தலிட்டு உயிர்போல உனை வளர்த்து
உறவாடி மகிழ்ந்திருந்தேன் உயிர்கொடுத்தாய் நீ எனக்கு!

*இந்துஜா (றூபினி), தரம் 8, மன்/நானாட்டான், மகா வித்தியாலயம், நானாட்டான்.*

### அன்பின் வெளிபாடு

அன்னையை நேசித்தேன் அன்பு வெளிப்பட்டது
தந்தையை நேசித்தேன் அறிவு வெளிப்பட்டது
சகோதரனை நேசித்தேன் ஒற்றுமை வெளிப்பட்டது
நண்பனை நேசித்தேன் நட்பு வெளிப்பட்டது
இயற்கையை நேசித்தேன் உணர்வுகள் வெளிப்பட்டது
இறைவனை நேசித்தேன் இறை அன்பு வெளிப்பட்டது!


*பத்திநாதன் வதனா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

### தேடி வரும் மதிப்பு

முட்டிக் குனியும்முன் முடிவை எடு
முழுதும் அறிந்தபின் துணிந்து நில்
வட்டிக் கடனுக்கு விடை கொடு
வரையறை வாழ்வுக்கு வழி வகு
நமக்குத் தேவை கல்வி. தேடிவரும் மதிப்பு

*டே. டல்சி, தரம் 7, அச்சங்குளம், நானாட்டான்.*

### சை ... சை...



மீசைக்கார சூசையப்பர்
மேசைமீது தோசை வைக்க
ஆசை கொண்ட மோசப்பூனை
ஓசையின்றி தோசை தின்ன
சூசை கண்டு பூசை போட
ஓசை இன்றி ஓடியது!

*அ. அருள்ராஜ், தரம் 10, வ/ செட்டிகுளம், மகாவித்தியாலயம், செட்டிகுளம்.*

வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா

# குருமுதல்வர் பணியில் இருபத்தைந்தாண்டுகளை நிறைவு செய்யும்

# அருட் தந்தை சேவியர் குரூஸ் அடிகளார்

## எனக்கு நல்ல வழிகாட்டியாகவும், அரிய ஆலோசனையாளராகவும் திகழ்ந்துள்ளார்

**மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை, மன்னார் ஆயர்**

அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகள் மன்னார் மறைமாவட்டம் தொடங்கிய காலம் தொடக்கம் கடந்த 25 ஆண்டுகளும் மறைமாவட்ட குருமுதல்வராகத் திகழ்ந்து அரும்பணியாற்றி சாதனை புரிந்தமை மறக்க முடியாத ஓர் இறை அருளாக எல்லோருடைய மனங்களிலும் பதிந்திருக்கின்றது.

போர்க்காலச் சூழலிலே உருவாகி இன்றுவரை அதே சூழலில் பயணித்துக்கொண்டிருக்கும் மன்னார் மறைமாவட்டத்திலே மறைமாவட்ட ஆயருடன் சேர்ந்து குருக்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து இறைமக்களுக்கு காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அரிய பணியை அருட்தந்தை அவர்கள் ஆற்றியுள்ளார்கள்.

பன்னிரண்டு மறைமாவட்டக் குருக்களோடு ஆரம்பித்த மறைமாவட்டத்தின் முதற்தேவையாக இருந்த, சொந்த மண்ணின் குருக்களை உருவாக்கும் பாரிய பணியைத் தந்தையவர்களே தமது குருமுதல்வர் பணியோடு சேர்த்துப் பொறுப்பேற்றுச் செய்து வந்தார்கள். இவருடைய இந்த உருவாக்கத் திறனால் இன்று மறைமாவட்டம் 55 மறைமாவட்டக் குருக்களைக் கண்டு பெருமை அடைகின்றது.

குருக்களுக்கெல்லாம் என்றுமே ஓர் குன்றாத தீபமாக விளங்கி அவர்களைத் தந்தைக்குரிய இதயத்தோடும்; ஓர் நண்பனுக்குரிய பாசத்தோடும் அணுகி, அவர்களின் தொடர் உருவாக்கப் பணியிலே இன்றும் தந்தை அவர்கள் ஈடுபாட்டுடன் உழைத்து வருவது எமது மறைமாவட்டம் பெற்ற ஒரு பெரும் பேறாகும். போரின் அனர்த்தங்களால் பல்வேறு அல்லல்களுக்கு உள்ளாகித் தவித்த மக்களுக்கு வாழ்வுதயத்தின் வழி நல்ல மேய்ப்பனுக்குரிய அர்ப்பணத்தோடு அரும்பணியாற்ற வழிகாட்டி நின்றதோடு, தாமாகவே, மன்னார் மக்களின் துயர் துடைக்க ஓர் அமைப்பை ஏற்படுத்தி ஏழைகளுக்கு அரியதோர் பணியை ஆற்றி வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.



மறைமாவட்டத்தின் சகல அருட்பணிகளையும் ஒருமுகப்படுத்த, மறைமாவட்ட மக்கள் எல்லோரும் தமக்குள்ளே ஒரே மனமும், ஒரே உள்ளமும் கொண்டு உறவிலே வளர்ந்து, பங்கேற்கும், பகிர்ந்து வாழும் அன்புச் சமூகமாக மலரத் தந்தை அவர்கள் அர்ப்பணிப்போடு அரும்பாடுபட்டு வந்துள்ளார்கள்.

எனக்குத் தனிப்பட்ட விதத்திலே, கடந்த 14 ஆண்டுகளாக நல்லதோர் வழிகாட்டியாகவும், அரிய ஆலோசனையாளராகவும் திகழ்ந்து, எனது ஆயர் பணியிலே சேர்ந்து பயணித்தமைக்காக நான் அருட்தந்தை அவர்களுக்கு எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

இவருடைய அர்ப்பண வாழ்வும், அரிய பண்புகளும், ஆன்மீக ஆழமும் மன்னார் மறைமாவட்டத்தைத் தொடர்ந்து வளர்க்க இவரை நற்சுகத்தோடு இறைவன் தொடர்ந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென வேண்டி எனது அன்பையும் - நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## தனது பண்பான பேச்சினால் அனைவரையும் மகிழ்விப்பதில் வல்லவர்

**மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, திருமலை மட்டுநகர் ஆயர்**

வேதசாட்சிகளின் மண்ணாகிய மன்னார் மறைமாவட்டம் தொடங்கப்பட்ட காலம் தொடக்கம் அதன் குருமுதல்வராகப் பணியாற்றி இவ்வாண்டில் வெள்ளிவிழாக் காணும் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரை வாழ்த்திக் கௌரவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரைக் குறித்துப் பேசுவதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. சிறிய குருமட காலம் தொடக்கம் எனது சக மாணவர், மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர். குருத்துவ உருவாக்கத்தில் மெய்யியல் கல்வியை மேற்கொள்ள உரோமை நகர் சென்றார். அங்கேயே இறையியலையும் கற்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

மன்னார் மாவட்டம் வங்காலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்தந்தையவர்கள் சிறுவயது முதலே நன்றாகப் பாடக்கூடிய வல்லமை பொருந்தியவர். இதுவே குருத்துவ வாழ்வில் அவரது பலம் என்று சொன்னால்கூட மிகையாகாது.

கடந்த 45 ஆண்டு கால குருத்துவ வாழ்வில் யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபராகவும், பல இடங்களில் பங்குத் தந்தையாகவும் கடமையாற்றியுள்ளார். தனது குருத்துவ வாழ்வின் அரைவாசிக்கு மேற்பட்ட காலத்தை புதிதாக உதயமான மன்னார் மறைமாவட்டத்தின் முதல் குருமுதல்வராகப் பணியாற்றி எல்லோருடைய மனங்களிலும் நீங்காத இடத்தினைப் பிடித்துள்ளார்.

அனைவருடனும் பழகுவதில் இயல்பான தன்மையுடைத்தான பண்பாளர். அவரது பேச்சினால் அடுத்தவரை மகிழ்விப்பதில் வல்லவர். அவரது சிறப்பான பணி சொல்லப்படும் இடமென்றால் அது மடு அன்னையின் திருத்தலமாகும். அன்னையின் திருவிழாக் காலங்களில் அங்கேயே தங்கியிருந்து, வழிபாடு, நிர்வாகம் சார்ந்த பணிகளில்தனது ஆழமான பிரசன்னத்தைப் பதித்திடுவார். அவரது பிரசன்னம் அங்கே பிரிக்கமுடியாத ஓர் அங்கம் என்றால் மிகையாகாது.



*"புயல் வீசும் போதும் கடிகாரம் தன் போக்கிலேயே ஓடுகிறது. அதைப்போல சாந்தமடைந்த மனம் இன்பமென்றாலும் துன்பமென்றாலும் தன் இயல்பான தாள கதியிலேயே நடக்கும்."*

மேற்சொன்ன வார்த்தைகள் அருட்தந்தை. சேவியர் குரூஸ் அடிகளாருக்கு அப்பட்டமாகப் பொருந்தும். எத்தகைய சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு மனம் கோணாது தனக்கே உரித்தான இயல்பான புன்னகையுடன் தீர்த்து வைக்கக்கூடிய பெருமைக்குரிய இறைவனின் புதல்வர்தான் அருட்தந்தையவர்கள்.

வெள்ளிவிழாக் கொண்டாடும் இத்தருணத்தில், இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். அன்னாரை அடையப்பெற்ற மன்னார் மறைமாவட்டம் பெரும் பாக்கியம் பெற்றதே. அவரின் சிறப்புமிக்க பணி மென்மேலும் அத்திருச்சபைக்கு கிடைக்கவும், இறைவன் அவரைத் தொடர்ந்தும் தனது ஆசீர்வாதங்களால் வழிநடத்தவும் பிரார்த்திக்கின்றேன்.

## கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்கும் மரபுரிமைகளுக்கும் சிறந்த முறையில் உருக்கொடுத்துள்ளார்

***அருட்தந்தை யோ. பெ. தேவராஜா, (மூத்த குரு)***

கடந்த பல வருடங்களாக மிக நெருங்கிய விதத்தில் என்னுடன் ஒன்றித்து, வாழ்ந்து, பணிபுரிந்த அருட்பணி அ. சேவியர் குரூஸ் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தின் முதல் குருமுதல்வராக இவர் பொறுப்பேற்று, கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பிரமாணிக்கத்துடன் பணிகளை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

அருட்தந்தை சேவியரை எமக்கு ஒரு கொடையாகத் தந்த இறைவனுக்கு மன்னார் வாழ் மக்களுடன் இணைந்து நன்றி கூறுகின்றேன். மன்னாரைச் சார்ந்த ஒருவர் என்ற வகையில், மன்னாரின் கிறிஸ்தவ பாரம்பரியங்களுக்கும், மரபுரிமைகளுக்கும் சிறந்த முறையில் உருக்கொடுத்துள்ளார்.

மறைமாவட்டத்தின் மட்டிலான இவரது அர்ப்பணிப்பும், பிரமாணிக்கமும் மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்கள் மட்டில் இவர் கொண்டுள்ள மதிப்பும், இவரது குருத்துவ நிலைகளும், பல சவால்களுக்கு மறைமாவட்டம் முகம் கொடுத்தபோது, இவரது இத்தகைய குணவியல்புகள் மறைமாவட்டத்தின் செயற்பாடுகளை இலகுபடுத்தி, அதற்கு ஒரு பக்கபலமாய் இருந்துள்ளது.

அன்பும், மகிழ்ச்சியான சுபாவமும் கொண்ட இவர், தைரியத்தையும், நன்னெறி சார்ந்த விழுமியங்களையும் அளிக்கும் ஒரு வெளிப்படையான தலைவராகத் திகழ்ந்தார்.

ஒரு குருமுதல்வர் என்ற வகையில் இவர் குருக்கள், துறவிகளுக்கிடையேயான உறவை விசேடவிதத்தில் வளப்படுத்தியுள்ளார். குருத்துவக் கல்லூரி மாணவர்கள் மட்டிலான இவரது, என்றும் நிலைத்து நிற்கும் அன்பும், அக்கறையும் அவர்களது நம்பிக்கையை வென்றெடுத்துள்ளது.

ஏழைகளுக்கும், தேவையிலுள்ளோருக்கும் அவர்களது கஷ்டங்களிலும், தாங்கொண்ணா ஏழ்மையிலும் கைகொடுத்து உதவும் அர்ப்பணிப்பு, இவரது வெளிப்படையான குணவியல்புகளில் ஒன்று. ஏழைகளுக்கும், இடம்பெயர்ந்தோருக்கும் உதவும் பொருட்டு, உருவாக்கப்பட்ட மன்னார் துயர் துடைப்புச் சங்கம், இவரது பணிகளுக்கு மகுடம் சூட்டியது போன்றது.



மனித உரிமைகள், நீதி போன்றவற்றிற்கான முன்னெடுப்புக்களில் இவரது ஆர்வத்தையும், முயற்சியையும் இனங்கண்டுகொண்டவர்கள், அருட்தந்தை சேவியரை ஸ்ரீலங்காவின் அமைதிக்கான கண்காணிப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக இணைத்துக்கொண்டனர்.

தந்தை சேவியர் தற்பொழுது குருமுதல்வரான தனது பணிக்காலத்தை நிறைவுசெய்து, அதிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவரது உயிர்த்துடிப்புள்ளதும், ஊக்க மூட்டுவதுமான தலைமைத்துவத்திற்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். மன்னார் மக்கள் அழுத்தங்களுக்கும், பதட்டங்களுக்கும் முகம் கொடுத்த வேளைகளிலெல்லாம், அவர்களுக்குப் பக்கபலமாயிருந்து ஆற்றிய பணிகளையும், மற்றும் இவரது எளிமை, உண்மை, தன்னலமற்ற தன்மை ஆகிய குணவியல்புகளையும் என்றும் நினைவில் கொள்வர். அடிகளாருக்கு ஆசி கூறி, எனது வாழ்த்துக்களையும், செபங்களையும் நிறைவாய் அளித்து நிற்கின்றேன்.

## எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பவர், பிறரும் மகிழ்ச்சியில் வாழ விரும்புகிறவர்

***அருட்தந்தை ஜே. நீக்கிலஸ், குருமுதல்வர், யாழ் மறைமாவட்டம்.***

அருட்திரு சேவியர் குரூஸ் அடிகள் மன்னார் மறைமாவட்டத்தின் முதல் குருமுதல்வராய் நியமனம் பெற்று கடந்த 25 ஆண்டுகள் இந்தப் பொறுப்பை ஏற்று அரும்பணி ஆற்றியுள்ளமை அனைவருக்கும் வியப்பைத் தருகின்றது.

இவர் யாழ்ப்பாணத்திலே புனித மாட்டினார் சிறிய குருமட அதிபராகவும், பின்பு யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பங்குத் தந்தையாகவும் பணியாற்றிய காலங்களிலே அவரை அறிந்து பழகும் வாய்ப்பு எனக்கு எட்டியது. இவர் பல பண்புகளையும் ஆற்றல்களையும் கொண்டவர். அவற்றுள் சிலவற்றை மட்டும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

1. இவர் எப்போதும் மகிழ்ச்சியாய் இருப்பவர். பிறரும் மகிழ்ச்சியில் வாழ விரும்புகிறவர். இவர் இருக்கும் இடம் கலகலப்புள்ளதாய் இருக்கும். பிறர்மீது அக்கறையுள்ளவர். அவர்களின் தேவைகளை அறிந்து பணிபுரிகின்றவர்.

2. தனது பொறுப்புக்களை கண்ணியமாய் நிறைவேற்றுபவர். தன் கடமைகளைப் பொறுப்புணர்வோடும், அர்ப்பணத்தோடும் செய்பவர்.

3. குருக்களின் நண்பர், குருக்களின் வாழ்விலும் பணியிலும் ஈடுபாடு உள்ளவராய்த் தனது அக்கறையை வெளிப்படுத்துபவர். குருக்களை உற்சாகப்படுத்துவதில் முன்னிற்பவர். குருக்களின் குழும உறவில் ஆர்வம் கொண்டவராய் அவர்களின் இன்ப துன்பங்களிலே என்றுமே பங்குகொள்கின்றவர்.

4. இவர் குருமட மாணவர்களின் வாழ்விலும் அவர்களின் உருவாக்கத்திலும் அதிக ஈடுபாடு உள்ளவராய் இருந்துள்ளார். அவர்களின் கல்வி வளர்ச்சியிலும், ஒழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் அதிக கவனம் செலுத்தி வந்தவர்.



5. துறவிகள் மட்டில் நன்மதிப்புக் கொண்டவராய் அவர்களோடு நல்லுறவைப் பேணி வளர்க்கின்றவர். அவர்களைச் சந்தித்து அவர்களின் நலன்களில் அக்கறைகொண்டு அவர்களின் பணி வாழ்விலே ஊக்கமளிப்பவர்.

ஒட்டு மொத்தமாக இவர் எல்லோருக்கும் எல்லாமாகத் - தன்னை ஒரு சகோதரனாக, நண்பனாக, தந்தையாக, மாற்றிக்கொள்ளும் பண்புள்ளவர். தனது உடல் நலக்குறைவிலும் தன் பணியே முக்கியமானதென உணர்ந்து தியாக மனப்பாங்குடன் செயலாற்றுபவர். இத்தகைய ஒரு அருட்தந்தைக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள். இவருக்கு வேண்டிய உடல் உள சுகம் கிடைக்க இறை ஆசீர் வேண்டி நிற்கின்றோம்.

**"நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்."** (யோவான் 10 : 11)



# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### சமாதானப் பாதையில் நாளும் நடப்போம் ....!

உரிமைகள் மறுக்கப்பட்டபோது
உரத்துக் குரல் கொடுத்தோம்.
உரிமைக் குரல்கள் ஓய்ந்தன!
ஓயாத அலைகள் பாய்ந்தன!

தன்மானம் இழந்த தமிழனுக்கு
தரணியில் வாழப் பிடிக்கவில்லை.
அதிகார வெறியால் வளங்கள் அளிந்தன.
உள்ளங்கள் ஊமையாயின!

ஊனமுற்ற மனித மனங்கள்
உரம் பெற்று எழுந்தன - இனி
வாய்ப்பேச்சிற்கு இடமில்லை
கைவரிசை காட்ட வேண்டிய
காலமும் கனிந்து வந்தது.

ஆயுதம் ஏந்திப் போர்க்களம் புறப்பட ...
யுத்தம் தொடர்கிறது ஆண்டாண்டாக ..
போர் வெறியாலும் வன்முறையாலும்
உயிர்கள் அழிந்தன.. உறவுகள் பிரிந்தன...

மனித மாண்பு கலைந்தது
அகதி நாமம் வந்தது
மோதலின் பிரதிபலன்
மனிதத்துவம் அழிந்ததுதான்!

வேண்டாம் இனி நமக்கு
இந்தப் பொல்லாத போர் முழக்கம்!
பிளவுபட்ட கொள்கைகளை
நிவர்த்தியாக்கி வாழ்வோம்.

யுத்தத்தால் இரத்தம் சிந்தியது போதும்
சமாதானம் வேண்டிக் குரல் கொடுப்போம்
வன்முறையை வெறுப்போம்
சமாதானத்தை வாழ வைப்போம்.

நாம் வாழும் தேசத்தை வளமாக்குவோம்
மனித மாண்பை உறுதிப்படுத்துவோம்
அணி திரளுவோம் சமாதானம் வேண்டி
எதிர்கால சமுதாயம் வளம்பெற்று வாழவே.

நமக்கினி வேண்டாம் என்றுமே போர்க்களம்
சமாதானப் பாதையில் நாளும் நடப்போம்
நாயகன் யேசு நமக்குத் துணை செய்வார்.

*திருமதி. ஏ. ஆபிரகாம் சோசை,*
*வங்காலை.*



### ஒரு பெண்ணின் ஆதங்கம்

பெண் என்றால் தெய்வம் என்றார்
போதுமையா உங்கள் வார்த்தை
பேதைகளாய் எம்மை பேதலிக்க – வைக்க
பேசா மடந்தைகளா நாம்?

ஆண்டவன் படைத்த அற்புத படைப்பு – என
கதைகளிலே எம்மை காசாக்கினீர்கள்
அடுப்படியில் எம்மை அடிமைப் படுத்த
ஆராய்ச்சி எதற்கு நடத்துகிறீர்கள்?

பெண் என்றால் பூ எனப் பேசாதீர்கள் - நாம்
ஒரு நாள் மலர்ந்து வாடி விட்டோம்
எமக்குள்ளும் ஏக்கங்கள் ஏராளமாய்
உள்ளன உணர்ந்து கொள்ளுங்கள்.

நாம் பிறந்ததுமே எம் முகம் பார்க்க
வெறுத்து முகத்தைச் சுளிக்கிறீர்கள்
நாம் இங்கு இல்லை என்றால்
நானிலமே இல்லை என்பதை மறந்து விட்டீர்களா?

பள்ளிப் பருவமதைப் பாதியிலே நிறுத்திவிட்டு
பானை சட்டிகளை கைகளிலே தந்துவிட்டீர்
கல்வி என்பது ஆண்வர்க்கத்துக்கு மட்டுமா?
எமக்கு இல்லையா?

எம் மனங்கள் கற்களல்ல – எதையும்
கண்ணீரில் கரைய வைக்க
காசு பணம் வேண்டாம் உங்கள்
கருணையும் வேண்டாம்.

எங்களை நீங்கள் தெய்வமாக்காதீர்கள்
எங்களை மனிதராக மதியுங்கள்
எம் ஏக்கங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்
எம் எதிர்பார்ப்புக்களுக்கு வழிகாட்டுங்கள்.

*மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி,*
*முருங்கன்.*

## சிறுகதை

# நட்பு

சி. கீர்த்தனா, ஆலங்குளம்,
வட்டக்கண்டல்



தன் நண்பன் சங்கரைக் கண்டதும் ரவியின் நெஞ்சு துணுக்குற்றது. "எப்போது அவன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தான்..?" என எண்ணிக் கொண்டான்.

தனது நண்பன் சங்கர் முன்னர் ஊரில் செய்த குறும்புகள் ஒன்றன்பின் ஒன்றாக ரவியின் மனத்திரையில் அலைகள்போல் விரிந்தன.

ரவியும், சங்கரும் முதலாம் வகுப்பிலிருந்து க.பொ.த. உயர்தரம் வரை ஒன்றாகவே படித்தனர். சிறுவயதிலே சங்கர் பல குழப்படிகள் செய்வான்.

ஒரு நாள் சங்கர் பாடசாலையில் றபர் பாம்பு ஒன்றை ஒருவருக்கும் தெரியாமல் ஆசிரியரின் கதிரைக்கு கீழே வைத்து விட்டான். ஆசிரியர் அதை உண்மைப் பாம்பு என நினைத்து "பாம்பு பாம்பு" என அலறியடித்துக்கொண்டு வகுப்பை விட்டு வெளியே ஓடினார். பெரிய வகுப்பிலிருந்த மாணவர்கள் ஓடிவந்து பார்க்கும்போது பாம்போ அசையாமல் கிடந்த இடத்திலேயே கிடந்தது. பின்புதான் அது றபர் பாம்பு என்ற உண்மை தெரிய வந்தது. ஆசிரியர் சங்கருக்கு நல்ல பிரம்படி கொடுத்தார். இவ்வாறு சங்கரின் குறும்புகள் நாளுக்கு நாள் அதிகரித்தன.

அவனது உற்ற நண்பன் ரவி ஓர் அமைதியான சுபாவம் கொண்டவன். தனது நண்பன் சங்கரை எப்படியாவது திருத்தி மனம்மாறச் செய்யவேண்டும் என முயல்வான்.

இருவரும் படிப்பை முடித்தும் வேலை கிடைக்கவில்லை. சங்கருக்கோ தந்தையுடன் சேர்ந்து விவசாயம் செய்யவும் மனமில்லை. வெளிநாடு போய் பிழைக்க வேண்டும் என்று விரும்பினான். சங்கரின் தகப்பனார் கடன் பட்டு சங்கரை அவனது நண்பன் ரவியுடன் சேர்த்து வெளிநாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். இருவரையும் சங்கரின் தகப்பன் அந்தோனி கொழும்புக்கு அழைத்துச் சென்றார். கொழும்பில் அவர்கள் சங்கரின் தகப்பனாருடைய நண்பன் வீட்டில் தங்கினார்கள்.

தனது நண்பருக்குத் தெரிந்த ஒருவர் மூலம் கனடா செல்வதற்கான ஏற்பாடுகளை அந்தோனி செய்திருந்தார். முயற்சிகள் வெற்றியடைந்தமையினால் சங்கரையும் ரவியையும் கனடா அனுப்பிவிட்டு அந்தோனி வீடுவந்து சேர்ந்தார். அவர்கள் இருவரும் கனடா மண்ணில் காலடி எடுத்து வைத்தனர்.

காலங்கள் கடந்தன. சங்கரின் கடிதமோ, தொலைபேசி அழைப்போ எதுவும் இல்லை. அந்தோனியின் குடும்பத்தார் இங்கு வறுமையில் வாடினர். சங்கரின் தம்பி மிகவும் கெட்டிக்காரன். பல்கலைக் கழகம் செல்ல அனுமதி கிடைத்தும் கஸ்ர நிலையினால் செல்லவில்லை. தங்கை லலிதாவும் கெட்டிக்காரி. ஆனால் வறுமையே அவர்களின் ஆற்றல்கள் திறமைகளை மழுங்கடித்தன. கடன்காரரோ அந்தோனியின் வீட்டிற்கு வந்து தொல்லை கொடுக்கத் தொடங்கினர்..!

சங்கரின் குறும்புகள் கனடாவிலும் தொடர்ந்தது. தனது நண்பன் ரவிக்கும் பல குறும்புகள் செய்தான். ஆனால் ரவி பொறுமையுடன் இருந்தான். கனடா சென்று ஒரு மாதமாகியும் வேலை கிடைக்கவில்லை. பின்பு ரவியின் முயற்சியினால் தொழிற்சாலை ஒன்றிலே இருவரும் வேலை செய்யத் தொடங்கினார்கள். இருவரும் அங்கு கடும் குளிரில் கஸ்ரப்பட்டு வேலை செய்தனர்.

ஒரு நாள் சங்கரின் குறும்புத்தனத்தால் தொழிற்சாலை இயந்திரத்தினுள் கை அகப்பட்டு சங்கரின் கை முறிந்து விட்டது. அவன் மயங்கி கீழே விழுந்து விட்டான். இதைக் கண்ட ரவி அவனைத் தூக்கி வைத்தியம் செய்து ஒருமாதம் பராமரித்தான்.

பின்பு சங்கரின் மனம் படிப்படியாக பல மாற்றத்துக்கு உள்ளாகின. தனது நண்பனின் தியாகத்தை உணர்ந்தான். தனது தந்தையின் வறுமையை உணர்ந்தான். தம்பி, தங்கை, தாய் அனைவரையும் நினைத்தான். அப்போது அவனது மனம் ஆறுதல் அடையவில்லை. தனது தங்கையின் படிப்பை உணர்ந்தும் தம்பியின் பல்கலைக்கழக செய்தியை கேள்வியுற்றும் அவர்களுக்குத் தான் உதவி செய்து படிப்பிக்க வேண்டும் என முடிவெடுத்தான். மீண்டும் இருவரும் வேறொரு வேலையில் சேர்ந்தனர். 2 வருடங்கள் அங்கு வேலை செய்து நிறையப் பணம் சம்பாதித்தனர்.

அந்தோனி கடனாளிகளின் தொல்லை தாங்காமல் கஸ்ரப்பட்டுக் கூலி வேலைக்குச் சென்று காற்பங்கு கடனைக் கொடுத்து முடித்திருந்தார். அப்போதுதான் மகன் சங்கரின் கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோசம் அடைந்தார். பணமும் அனுப்பிவைத்திருந்தான். சங்கரின் வீட்டார் கடனை அடைத்தனர். சங்கரின் சகோதரர்களும் கல்வியைத் தொடர்ந்தனர்.

இவ்வாறு ரவியும் சங்கரும் கனடாவில் வாழ்ந்து வந்தனர். ரவியின் தாயோ ஒரு இருதய நோயாளி. அதனால் அவள் திடீரென இறந்துவிட்டாள். இதைக்கேட்ட ரவியும் சங்கரும் கனடாப் பிரஜை என்ற நிலையில் உடனே இலங்கைக்கு வந்தனர்.

ரவி தனக்குச் செய்த உதவியை நினைத்து சங்கர் ரவிக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினான். கனடாவில் இருந்து கொண்டுவந்த பணத்தில் தனது நண்பனின் நினைவாக தனது ஊர்ப் பாடசாலையில் ஒரு கட்டிடம் கட்டிக்கொடுக்க முன்வந்தான். பின் தாயின் ஒருவருட நினைவு நாளன்று நூறு ஏழைகளுக்கு உடைகள், உணவுகள் வழங்கினான். பின் அனாதை மடம் ஒன்றைக் கட்டி தனது நண்பனுடைய தாயின் பெயரை அதற்கு வைத்தான்.

பல குறும்புகள் செய்து எல்லோராலும் தூற்றப்பட்ட சங்கரை உண்மை நண்பனான ரவி மனம்மாறச் செய்து இன்று ***ஊருக்கு உழைத்த உத்தமன*** என்று எல்லோராலும் போற்றப்படும் அளவுக்கு திருத்தி எடுத்தான். இதற்காக சங்கரும் அவன் குடும்பத்தினரும் ரவிக்கு தாம் கடமைப்பட்டிருப்பதாக உணர்ந்தனர்.

ரவியின் வாழ்க்கைக்கு சங்கரும் அவரது குடும்பத்தவரும் பல உதவிகள் செய்தனர். ஈற்றில் சங்கரின் தங்கைக்கே ரவியைத் திருமணம் செய்துவைத்து ரவிக்குப் புது வாழ்வு ஒன்றை அமைத்துக் கொடுத்தான் சங்கர். ●

தொடர் கட்டுரை – அங்கம் 40

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

## பகுதி II தவக்கால பன்முக மரபுகள்



### 17. உயிர்ப்பு நாடகங்கள்: தோற்றமும் வளர்ச்சியும்

சடங்கே நாடகத்திற்கு ஊற்று. அரங்கியல் மிக வேகமாக வளர்ச்சிகண்டு, தொடர்ந்து மிகத் தீவிரமாக வளர்கின்ற ஒரு துறையாக விளங்குகின்றது. நவீன நாடகத்தின் தோற்றுவாய் அல்லது ஊற்று கத்தோலிக்க திருச்சபையின் மத்திய கால வழிபாடுகள் அல்லது சடங்குகள் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. கத்தோலிக்க திருச்சபை மத்திய காலங்களில் நிகழ்த்திய சடங்குகள் அதிகளவில் நாடகப் பண்புகளைக் கொண்டிருந்தன.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திருச்சபை நிகழ்த்திய *திருப்பலி*யைக் குறிப்பிடலாம். திருப்பலியின்போது இடம்பெறும் சடங்குகள், உரையாடல்கள், (செபங்கள் - பதில்கள்), பாடல்கள், பாடகர் குழாமின் பங்களிப்பு, இசைக் கருவிகள் மீட்டல், மக்கள் பாடல்கள் அனைத்தையும் நோக்கும்போது, திருப்பலியில் நிறைந்துள்ள நாடகப் பாங்கின் தன்மைகள் புலப்படுகின்றன. திருவிழாக்களின்போது இடம்பெறும் சடங்குகள் வழிபாட்டில் காணப்படும் நாடகப் பாங்கான பண்புகளைச் சிறப்புடன் பிரதிபலிக்கின்றன. ஏனைய நாட்களில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் காணப்படும் சடங்குகளிலும் பன்மடங்கு அதிகமான சிறப்பான சடங்குகள் திருவிழாத் திருப்பலிகளில் இடம்பெறுவதுண்டு.

இவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கிறிஸ்து பிறப்பு விழா, பாஸ்குச் சடங்குகள், புனிதர்களின் திருவிழா என்பவற்றைக் குறிப்பிடலாம். திருவிழாத் திருப்பலியிலும், சடங்குகளிலும் அதிக பாடல்கள், உரையாடல்கள், அசைவுகள், செய்கைகள் இடம்பெறுகின்றன. மேலும், ஆயரின் முடியும், அவர் தாங்கும் செங்கோலும் நாடகப்பாங்கின் தன்மைக்கு மேலும் வலுவூட்டுகின்றன. ஆயர் தலைமை தாங்கும் சடங்கின்போது, அதிகப் பீடப்பணியாளர்களும், குறிப்பிட்ட தொகையிலான குருமாரும் பங்கு கொள்வது சடங்கில் காணப்படும் நாடகப் பண்பை மேலும் சிறப்பித்துக் காண்பிக்கின்றது. சடங்கின் போது, பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களும், பாடகர் குழாம் இரண்டு, மூன்று குழுக்களாகப் பாடும் சிறப்பும், பலிப்பீடம் அலங்கரிக்கப்படும் முறையும் வழிபாட்டில் இடம்பெறும் நாடகப்பாங்கான பண்பிற்கு மேலும் மெருகூட்டின.

திருவிழாவின்போது இடம்பெற்ற சடங்குகளும், வழிபாடுகளும் புறநிலைத் தோற்றப்பாட்டிற்கு நாடகப்பாங்கான பண்புகளை அதிகம் கொண்டிருந்தாலும், பாஸ்கா சம்பவங்களின் நினைவு கூரல் மீண்டும் அர்த்தமுள்ள வழியில் வழிபாட்டின் வழியாக இடம்பெறுதல், அதாவது, இதில் அடங்கியுள்ள மறையுண்மை பற்றிய விடயம் எந்த வகையிலும் மென்மைப் - படுத்தப்படவில்லை அல்லது நலிவுறவில்லை.

கிறிஸ்தவ வழிபாடுகளினதும், சடங்குகளினதும் முழுமையான இலக்கு விசுவாச உண்மைகளைப் பொருள் பொதிந்த முறையில் மீண்டும் கொண்டாடுவதாகும். வழிபாடுகளுடனும், சடங்குகளுடனும் இணைந்தவையாக, இவற்றிற்கு வலுவூட்டுபவையாக நாடகங்கள் தோற்றம் பெற்றாலும், வழிபாடுகள், சடங்குகள் புறநிலைத் தோற்றப்பாட்டிற்கு நாடகப் பாங்கான பண்புகளைக் கொண்டிருந்தாலும், வழிபாடுகளினதும், சடங்குகளினதும் கருப்பொருளாகக் கொள்ளப்பட்ட மறையுண்மைகளின் முக்கியம் முதன்மையானது என்பது இங்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

ஐரோப்பிய நாடகங்களினதும், கிறிஸ்தவ நாடகங்களினதும் தோற்றம் உயிர்ப்பு ஞாயிறு, பெரிய வெள்ளி ஆகிய தினங்களில் பயன்படுத்தப்படும் சடங்குகளாகும். உயிர்ப்பு ஞாயிறு தினத்தில், கிறிஸ்துவின் கல்லறைக்கு வந்த பெண்களுக்கும், வானதூதருக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடல், வழிபாட்டு உரையின் அணிநயச் சொற்றொடராக அமைகின்றது. இப்பகுதி 10-18 ஆம் நூற்றாண்டுகளில் பாவனையிலிருந்த வழிபாட்டு நூல்களில் காணப்படுகின்றது.

பெரிய வெள்ளிக்கிழமை காலை வழிபாட்டின் பின்பு ஒரு சிலுவை துணிகளால் சுற்றப்பட்டு, பீடத்திற்கு அருகாமையில் இதற்கென தயார் செய்யப்பட்ட கல்லறை போன்ற இடத்தில் வைக்கப்படும். உயிர்ப்பு ஞாயிறு தினம் காலை வரையும் இது அங்கேயே விடப்படும். உயிர்ப்பு ஞாயிறு காலையில் குருமாரில் ஒருவர் அல்லது இருவர் ஒலிவக் கிளையுடன், பெரிய வெள்ளிக்கிழமை தயார் செய்து சிலுவை வைக்கப்பட்ட கல்லறைக்குச் சென்று, அருகே அமர்ந்து, (வானதூதரைப் பிரதிபலித்து) காத்திருப்பர். தொடர்ந்து வேறு மூன்று குருக்கள் கோப் ஆடை அணிந்து, தூபக்கலத்தையும் ஏந்தி கல்லறைக்கு வந்த மூன்று பெண்களையும் பிரதிநிதித்துவம் செய்பவர்களாகக் கல்லறைக்கு வருவர். இவர்கள் வந்தவுடன் வானதூதர் (குரு), "யாரைத் தேடுகிறீர்கள்?" என பாடல் வடிவத்தில் கேட்பார். பெண்கள் (மூன்று குருக்கள்) 'இயேசுவை' எனக் கூற, வானதூதர் பெண்களிடம், "அவர் உயிர்த்துவிட்டார். சென்று எல்லா இடமும் இச்செய்தியை அறிவியுங்கள்!" எனக் கூறுவார்.

இதைத் தொடர்ந்து பாடகர் குழாம் உயிர்ப்புப் பாடலை மகிழ்வுடனும், பெருமித உணர்வுடனும், பக்தியுடனும் ஆர்ப்பரித்துப் பாடுவார்கள். இச்சடங்கை Quemquenitis அல்லது Trope சடங்கு என அழைத்தனர்.

(தொடரும்)

வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா

## குருமுதல்வர் பணியில் இருபத்தைந்தாண்டுகளை நிறைவு செய்யும்

# அருட் தந்தை சேவியர் குரூஸ் அடிகளார்

### ஆன்மீகத்தின் வெளிப்பாடுகள் வாழ்வில் விளங்குகிறது

*அருட்சகோதரி கார்மலீற்றா. தி.கு.*

அருட்பணியாளர் சேவியர் குரூஸ் அடிகளார், குருமுதல்வர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்வது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இவரின் எளிமையான உறவு முறையும், ஏழைகள் மட்டில் தனிப்பட்ட கரிசனையும், சமூகப் பணியில் பூரண ஈடுபாடும் இவரின் ஆன்மீகத்தின் வெளிப்பாடாகும். அத்தோடு, கீழைத்தேச, மேலைத்தேச சங்கீதக் கலை ஞானத்தையும் கொண்டவர். அடிகளாரின் வெள்ளிவிழா மகிழ்வில் கலந்து நானும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

### எளிமையான தோற்றமும், அமைதியான சுபாவமும் கொண்டவர்

*- அருட்சகோதரி ஜேம்ஸ் தி.கு -*

வங்காலையின் முத்தாகி, மன்னார் மறைமாவட்டத்தின் வித்தாகிய அருட்திரு சேவியர் குரூஸ் அவர்களின் அருள் வாழ்வினை எழுதுவதென்றால், இதழ்கள் போதாது.. இருப்பினும், இறைவனின் சாட்சியாய் இகமதில் பூத்துக் குலுங்கும் அடிகளாரது வாழ்க்கைச் சிறப்பியல்புகளில் சிலவற்றை இங்கு கூறுகின்றேன்.

சேவியர் குரூஸ் அடிகளார் என்றால், சேவையின் செம்மலாகவே நாம் அவரைக் கண்டோம்.

எளிமையான தோற்றமும், அமைதியான சுபாவமும் கொண்ட அடிகளார் அவர்கள், வானம் இடிகிறது, பூமி அதிர்கிறது என்றாலும் எல்லாம் இறைவனின் சித்தம் என இலகுவாக எடுத்துக் கொள்ளும் இறைப்பற்றுக் கொண்டவர். வழிபாடு வாழ்வாக வேண்டும் என்று திருச்சபையின் தலைவர்கள் அயராது உழைக்கும் இக்கால கட்டத்திலே, அருட்திரு சேவியர் குரூஸ் அவர்களின் இறையியல், மெய்யியல் கருத்துக்களுக்கு உயிரூட்டம் கொடுக்கும் வழிபாட்டிலே கலந்துகொள்வோர் அடிகளாருடன் இணைந்து, பக்திப் பிரவாகத்திலே மூழ்கி, தன்னிலை மறந்தவர்களாக, வழிபாட்டை வாழ்வாக்கும் மனப்பக்குவத்தைப் பெறுகின்றனர்.

### வத்திக்கான் பாடகர் குழுவின் இயக்குனர்

*அருட்சகோதரி. மேரி வீஜினி (தி.கு)*

மன்னார் மறைமாவட்டத்தின் முதற் குருமுதல்வர் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளார் புகழோடு தோன்றினார். இவரைக் கடந்த 25 ஆண்டுகளாக அல்ல. – அதற்கு முன்னதாகவே நான் அறிந்துள்ளேன்.

இவர் ஆழ்ந்த இறைப்பற்றும்; விசுவாசமும் உள்ள ஒரு குடும்பத்திற் பிறந்தவர். ஆண்டவர் அழைப்பை ஏற்றுக் குருத்துவ இறை குடும்பத்தில் இணைந்தார். அருட்சகோதரராக இருந்த காலத்தில் உரோமாபுரியில் குருத்துவப் படிப்பை மேற்கொண்டார். விளையாட்டு வீரனாகவும், சிறந்த சங்கீத வித்துவானாகவும் மிளிர்ந்தார். இவரின் சங்கீத ஆற்றலால் இவர் உரோமாபுரியில் வத்திக்கானில் பாடகர் குழாமின் இயக்குனராகச் செயற்பட்டதன் மூலம் எம் மறைமாவட்டத்திற்கு மட்டுமல்ல, இலங்கைத் திருச்சபைக்கே பெருமையைத் தேடிக் கொடுத்தார்.

இளம் குருக்களை ஆன்மீகத்தில் நெறிப்படுத்தி, மகிழ்ச்சியாக இறைபணி புரிய ஆலோசகனாகவும், நண்பனாகவும், மூத்த சகோதரனாகவும் வாழ்ந்துள்ளார். இவர் ஆற்றிய – ஆற்றும் பணி சிறிதாயினும் சரி, பெரிதாயினும் சரி அர்ப்பணத்துடன் செயற்பட்டுவருவது பாராட்டுதற்குரியது.

மன்னார் மறைமாவட்டம் உருவான காலம் தொடக்கம், இற்றைவரை குருமுதல்வராகக் கடமையாற்றி, கால்நூற்றாண்டைக் கடந்து, வெள்ளி விழாவைக் கொண்டாடும் அடிகளாரை வாழ்க! வளர்க! என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். இறைவனின் ஆசீர் என்றும் அவருடன் தங்குவதாக.

### அன்புள்ளம் கொண்ட தந்தை

*அருட்சகோதரி. கஸ்மிர் (தி.கு)*

சேவியர் குரூஸ் அடிகளார், நான் அறிந்த நாட்தொடக்கம் இன்று வரை ஒரு நல்ல அன்புத் தந்தையாக, சகோதரனாக, தாழ்மை, அன்பு, இரக்கம், பொறுமை என்னும் நற்பண்புகளைக் கொண்டவராக, வாழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

நான் மன்/ பறப்பாங்கண்டல் மடத்தில் இருந்த காலத்தில், அருட்தந்தை அவர்கள் முருங்கன் பங்குத்தந்தையாகவும், இளைஞர்களின் பாதுகாவலராகவும் இருந்து அளப்பரிய பணிகள் ஆற்றியுள்ளார். ஓர் அன்புள்ளம் கொண்ட தந்தையாக எம்முடன் உறவாடுவார். குருமுதல்வராகப் பணியேற்றதும், "பணி புரியவே வந்தேன்" என்னும் கிறிஸ்துவின் வாழ்வைப் பின்பற்றி, எமது மாவட்டங்களில் விசேஷமாய் மன்னார் மறைமாவட்டத்தில், மக்கள், அருட்தந்தையர்கள், ஏனைய துறவற சபையினருக்கும் சிறப்பான பணிகளை ஆற்றி, ஆயர் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து, மன்னார் மறைமாவட்டம் வளர்ச்சி பெற உழைத்துள்ளார்.

இன்னும் குருமாணவர்களைச் சிறந்த முறையில் உருவாக்கி, பயிற்சி அளித்து, குருத்துவ வாழ்வில் நிலை நிற்க வழிநடத்தியுள்ளார்.

### அருட்சகோதரிகளின் பார்வையில் தந்தையின் வாழ்வும் பணியும்



### வங்கப் பதியீன்ற தங்க மகன்

*அருட்சகோதரி அமலி (தி.கு)*

வங்கப் பதியீன்ற தங்க மகன் பொங்கு மகிழ்வுறு – விண்
வெள்ளியென குருமுதல்வராம் வெள்ளி நிறை விழாவை
அருளன்ன நிறைவாகக் கொண்டு மகிழ்வும் கண்டு
பூரிக்கும் வருடமாம் இந்நாளில் வளமுடன் வாழ்த்துகிறேன்.

இறைவனின் சேவைதனை விரும்பியேற்று அதன்படி வழிநடந்து
இயேசுவின் புனித போதகமறை அருங்கொடையென மகிழ்ந்து
வேதவிசுவாச நெறிதனில் ஊன்றிநின்று ஆன்மீகப் பாதையதை
அசையாது பிசகாது காத்து நின்றாய்.

நல்ல தாய் தந்தையரை நானிலத்தில் கண்டு மகிழ்ந்தாய்
குரு முதல்வராய் மன்னார் திருச்சபையின் அருள் முதல்வராய்
ஆற்றிட்டாய் சேவை மறப்போமோ இதனை இல்லவே இல்லை.
கனிவான பேச்சு காரியத்தில் வீச்சு நிர்வாகத்தில் முழுமூச்சு
வளரட்டும் உன் சேவை விண்மீனென மிளிரட்டும்
வாழ்வெல்லாம் ஒளிரட்டும் உம் உள்ளம் குளிரட்டும்.

### மறுவாழ்வுப் பணிமன்றம் மன்னாரில் மலர்வித்தாய்

*- அருட்சகோதரி நசரேத், தலைமன்னார். -*

வங்கக் கடல் தங்கும் வங்காலை
பொங்கும் கலைக்கல்வி நிறைந்திடும்
தங்கம் நிறை குணச் சேவியர் மலர்ந்தனன்
தந்தை அந்தோனிக் குரூஸ் தவப் புதல்வனாய்.

ஆபத்துக் காலத்தில் ஆண்ட திருச்சிலுவை
தோளிலே சுமந்தும் துயர் நீக்க துயர் துடைப்பு
மறுவாழ்வுப் பணிமன்றம் மன்னாரில் மலர்வித்தாய்
மக்கள் தம் துயரம் கண்டு மடு அன்னை பவனி வர
மறைமாவட்டம் தன்னில் மனித நேயம் பூண்டு நின்றாய்.

வங்கத்தின் வங்காலையில் பிறந்த
வண்மை நிறை சிங்கமே சேவியர் குருசே
சிந்தைதனில் நாம் மறவோம் உம்
சீரிய பணிதனையே என்றுமே வாழ்த்துகின்றோம்.
இறைவனைப் போற்றி நின்றோம்
இன்போடு நீடு வாழ்ந்திடவே இறைவனை வேண்டி நின்றோம்.

### வந்ததே யூபிலி வருவீர் மகிழ்ந்து

அருட்சகோதரிகள், ஓசானம், மட்டுநகர்.

அமைதியின் பேழையோ ஆண்டவன் அழைப்பிலே
பொறுமையின் பூவகமோ பொங்குதே உள்ளம்
மன்னார் மண்ணின் குருத்துவத் திலகமோ
யாம் கண்ட குருமுதல்வரோ காலங்கள் உருண்டு ஓட
யாம் கண்ட வெள்ளி ஓடமோ வெள்ளி விழா நாயகரே
வெண்மனதை வாழ்த்துகின்றோம்

உறவை வளர்த்த தலைவனே உள்ளத்தில் உயர் கலைஞனே
மென்மையாகப் பேசி மெருகூட்டுவீர் வாழ்வை
ஆயரின் துணையாளராக ஆவியில் அரும்பணியாற்றும்
குரு முதல்வராக குருகுல வாரிசுக்கு ஞானப்பால் வார்த்து
ஞானத்தின் ஒளி ஏற்றிய ஞானத் தந்தையே
ஆதவன் கண்ட அம்புயம் போல் ஆனந்தப் பாடல் பாடுகின்றோம்
வெள்ளிமலர்கள் பூத்திடவே வெண் புகையும் எழுந்திடவே
திருப்பலியில் இணைந்து நாம் திருப்பாடல் பாடி மகிழ்கின்றோம்
ஆண்டுகள் ஐம்பதும் கண்டுமே ஆண்டவன் ஆசியும் நீண்டுமே
அன்பனும் நண்பனும் ஆயனுமாக ஆண்டவன் அன்புக் கரமாக
மங்காத ஒளியில் மன்னார்ப் புதல்வராக வாழ்க வாழ்க
வெள்ளி விழா நாயகரே வாழ்க.

### பெற்றோரின் சிறப்புக்கள் பிள்ளையிடமும் இருந்தது

*அருட்சகோதரி மில்றெட் பேதுருப்பிள்ளை (தி.கு)*

நானாட்டான் மண்ணில் முதல் குருமணிகளாக இறைவனால் அழைக்கப்பட்டவர்கள், அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் அருட்பணியாளர்கள் விக்ரர் குரூஸ், சேவியர் குரூஸ் அடிகளார் என்று நன்றியுணர்வுடன் கூறுகின்றேன்.

இவர்களின் தந்தையார் நானாட்டான் தபால் அலுவலகத்தில் அதிபராகக் கடமையாற்றினார். தாய் அமைதி, அடக்கம், அழகு வாய்ந்த பெண்மணி. இறைவன் நான்கு புத்திரரைக் கொடுத்தார். நால்வரும் குருவாக வரவேண்டும் என்பது தாயின் வேண்டுதல். காலகதியில் இருவர் இறைபணிக்கும், இருவர் இல்லறப் பணிக்கும் தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

பள்ளிப் பருவத்திலே, நானாட்டான் பாடசாலையில் கல்வி கற்றதை, அவரின் முன்மாதிரியான போக்கை, தாய்தந்தையரின் வளர்ப்பை சேவியர் குரூஸ் அடிகளாரின் வாழ்வில் காணக் கூடியதாக இருந்தது. சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்தார். ஆண்டு 6 வகுப்புக்கள் மட்டுமே அன்றைய பாடசாலையில், கல்வி கற்க வசதி கிடைத்தது. எல்லாப் பிள்ளைகளுடனும் மரியாதையுடன் பழகுவார். பாடம் சொல்லிக் கொடுத்து, பகிரும் தன்மை இவருக்கிருந்தது. அமைதியான போக்குடையவர். ஆசிரியர்கட்கு மரியாதை கொடுப்பவர். பேச்சுத் திறன் நிறைந்தவர். எதற்கும் முன்னின்று, மாணவர்களை வழிநடத்தும் தலைமைத்துவப் பண்பையும் காணக்கூடியதாக இருந்தது. பாட்டுப் பாடுவதில் அப்பாவுக்கும் மேலான வல்லமையை இறைவன் இவருக்குக் கொடுத்திருந்தார். எல்லோரையும் சமமாக மதிப்பவர்.

"ஆண்டவரின் பேரன்பை, அருட்தந்தைக்கு இறைவன் செய்த வியத்தகு செயல்களை நினைந்து இறைவனுக்கு நன்றி கூறி, தொடர்ந்து இறைவனின் பராமரிப்பு, பாதுகாப்பு, வழிநடத்தல் குறைவின்றி பெற்று, நீடூழி வாழ, வரம் கேட்டு யூபிலி வாழ்த்துக் கூறுகின்றேன்.

### தட்டிக்கொடுத்துப் பாராட்டுபவர்

*அருட்சகோதரி மரிய கிளாறா, (தி.கு.க.)*

வங்கம் தங்கும் வங்காலை எம்பதியில், மண்ணின் மைந்தனாய், திரு. திருமதி அந்தோனிக் குரூஸ் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக வந்துதித்தார் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளார். இவர் ஒரு இசைப் பிரியர் மாத்திரமல்ல. இசைக் கருவிகளை மீட்டுவதில் வல்லுனர். நன்றாகப் பாடுவார். இவருடைய உருக்கமான வழிபாடுகள் உள்ளத்தை ஊடுருவிச் செல்லும். இறைபக்தி மிகுந்தவர். அன்னை மரியிடமும் விசேஷ அன்பு கொண்டவர்.

இலத்தீன் மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். விளையாட்டு வீரர். ஏழை, பணக்காரர் என்று வேறுபாடு காட்டாது, எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். ஏழைகளுக்கு மிகுந்த இரக்கம் காட்டுபவர். அள்ளிக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாவிட்டாலும், கிள்ளிக் கொடுக்கும்போது, அன்பான வார்த்தைகளால் அவர்களை ஆறுதல்படுத்துவார்.

"கருமமே கண்ணாயினார் மெய்வருத்தம் பாரார்" என்பதற்கொப்ப, நோய்வாய்ப்பட்டிருப்பினும் தனது கடமைகளைத் திறம்படச் செய்வார். ஆயர் இல்லாத சந்தர்ப்பங்களில் பங்குகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தலைமை தாங்கி சிறப்பிப்பார். எங்கள் துறவற இல்லங்களில் நடைபெறும் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றத் தவறமாட்டார்.

அருட்தந்தையர்களின் பணி வாழ்வில் மற்றவர்களைத் தட்டிக் கொடுப்பதில், பாராட்டுவதில், வழிகாட்டுவதில் குருமுதல்வராக மாத்திரமல்ல அன்புத் தந்தையாக, சகோதரனாக, உற்ற தோழனாக செயற்பட்டிருப்பதைக் கண்டிருக்கின்றேன். அத்துடன் சிறிய சிறிய ஒன்றுகூடல்களை ஏற்படுத்தி, குருக்களை மகிழ்ச்சிப்படுத்த சிற்றுண்டி வகைகளைத் தயார்செய்து, நல்ல பொழுதுபோக்கு சூழ்நிலைகளை ஏற்பாடு செய்வார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

அர்ப்பணிப்புடன் நற்பணியாற்றி வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இந்நன்நாளிலே, எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

### அண்டினோருக்கு ஆதரவு அளிப்பவர்

அருட்சகோதரி றெஜினா கூஞ்ஞ (தி.கு)

மறைசாட்சிகளின் புனிதத்தலமான மன்னார் மறைமாவட்டத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர் எம் சேவியர் குரூஸ் அடிகளார். இவர் மன்னார் மறைமாவட்டத்தில் குருமுதல்வராகப் பணிபுரிந்து, இறையாசியினாலும், மடுத்தாயின் அருளினாலும் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து இன்று யூபிலி விழாக் காணும் பாக்கியம் பெற்றுள்ளார்.

மன்னார் மக்களுடன் சேர்ந்து, நானும் யூபிலி நாயகருக்கு எனது வாழ்த்தை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ் மாவட்டத்தில் அடைக்கல அன்னை ஆலயத்தில் இவர் இறைபணி புரிந்த காலம். எனது சேவையும் யாழ். மாவட்டத்தில், ஓடிக் கொண்டிருந்ததனால், அடிகளாரின் நல்ல பண்புகளையும், அண்டினோருக்கு ஆதரவளிக்கும் பெருந்தன்மையையும், பரோபகார சிந்தனைகளையும் நன்றாய் அறிந்திருந்தேன். அடிகளாருக்கு எனது யூபிலி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.

# மன்னார் மறை
# ஆயர் தோமஸ் சௌந்தரநாயக
## சில பார்வைகளு
### - தமிழ்

விடுமுறைக்காலங்களில் அருட்சகோதரர்கள் தமது விடுமுறையை வித்தியாசமான சூழலில் கழிக்கவேண்டும் என்பதற்காக அவரே அவர்களை அரிப்பு சிலாவத்துறை போன்ற வெளி இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களோடு தங்கியிருப்பார். இந்த *விடுமுறை விடுதி (Holiday House)* அனுபவம் குருத்துவக் கல்லூரி மாணவர்கள் மனதில் என்றும் அழியாத நினைவலைகளாக நிலைத்திருக்கும். குருத்துவ மாணவர்களை நன்கு அறியவும் அவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவும் இது அவருக்கு சிறந்த வாய்ப்பைக் கொடுத்தது

மன்னார் மண் மறைசாட்சிகளின் இரத்தத்தினால புனிதமாக்கப்பட்ட புண்ணிய மண். மருதமடு அன்னை எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் அருள்நிறைந்த மண். இந்த மன்னார் மண் இலங்கைத் தீவில் கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டிக்காப்பதில் வீரத்தோடு போராடிய ***விசுவாசத்தின் விளைநிலம்*** எனக் கத்தோலிக்க வரலாற்றாசிரியர்கள் வரையறை செய்கின்றார்கள்.

இலங்கையின் திருமறை வரலாற்றில் யாழ்ப்பாண மறைமாவட்டம் நான்காவது முறையாகப் பிரிக்கப்பட்டு புதிய மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பிரிந்து மன்னார் மற்றும் வவுனியா ஆகிய இரண்டு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதான புதிய மன்னார் மறைமாவட்டம் 1981ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி அன்றைய திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரினால் உருவாக்கப்பட்டது. புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயராக யாழ் மறைமாவட்டக் குருவான அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டார். இவருடைய ஆயர் திருநிலைப்படுத்தல் நிகழ்வு 30.07.1981 அன்று மடுத்திருப்பதியில் வெகு சிறப்பாக நடந்தேறியது. அன்றைய யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இத்திருநிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். 02.08.1981 அன்று புதிய ஆயர் தனது புதிய மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார்.

புதிய மறைமாவட்டத்தின் முதல் ஆயராகப் பொறுப்பேற்ற மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் தனது 11 வருடகாலப் பணியின்போது (1981 -1992) பல்வேறு சவால்கள், சிக்கல்கள் மத்தியில் தூரநோக்குடனும் விடாமுயற்சியுடனும் இந்த இளம் மறைமாவட்டத்தை வழிநடத்தி வந்துள்ளார்.

இக்கட்டுரை மன்னார் மறைமாவட்டத்தில் ஆயர் தோமஸ் ஆண்டகையின் பணியையும் அவருடைய வாழ்வையும் மூன்று கோணங்களில் ஆராய முயல்கிறது.

1. இளம் மறைமாவட்டத்தின் துரித வளர்ச்சிக்கு உறுதியான அத்திவாரம் இட்ட அவரது ***மேய்ப்புப் பணிசார்ந்த பல்வேறு முன்னெடுப்புக்களை*** இனம் காண்பது,
2. அவருடைய பணிக்காலத்தில் அவர் எதிர்நோக்கிய ***பணிக்கள சவால்களை*** சுட்டிக்காட்டுவது,
3. அவருடைய ***ஆளுமையின் நலமான பண்புகளை*** அடையாளம் காட்டுவது என்பனவாகும்.

## 1. மேய்ப்புப்பணி சார்ந்த பல்வேறு முன்னெடுப்புக்கள்

புதிய மறைமாவட்டத்தில் பல்வேறு மேய்ப்புப்பணித் தேவைகள் காத்துக்கிடந்தன. புதிய ஆயர் அவற்றை ஏற்கெனவே அறிந்தவராய் இருந்தார். ஏனெனில் அவர் மன்னார்ப் பகுதியில் நானாட்டான், வங்காலைப் பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். எனவே மேய்ப்புப்பணிசார்ந்த பல்வேறு முன்னெடுப்புக்களை ஆரம்பிக்க அவர் துரிதகதியில் செயலாற்றினார். தனது பணிகளுக்குத் தன்னோடு இணைந்து கைகொடுக்க மன்னார் மண்ணின் மைந்தராகிய அருட்தந்தை ஏ. சேவியர் குரூஸ் அடிகளாரை குருமுதல்வராக நியமித்தார். "அனைத்தும் நற்செய்திக்காகவே" (1கொரிந்தியர் 9:23) என்ற புனித பவுலடியாரின் விருதுவாக்கைத் தனதாக்கிக்கொண்ட ஆயர் அவர்கள், தனது அனைத்து முயற்சிகளின் ஊடாக நற்செய்தி அறிவிப்பையே தனது தலையாய இலக்காகக் கொண்டிருந்தார்.

### புதிய மறைமாவட்டத்தின் முதல் மேய்ப்புப்பணி ஆய்வரங்கு

புதிய மறைமாவட்டத்தை பொறுப்பேற்றபின் புதிய மறைமாவட்டத்தின் களநிலையை கருத்தில்கொண்டு மறைமாவட்டத்தின் நோக்கையும் போக்கையும் வரையறை செய்ய எண்ணினார். புதிய ஆயர் தான் பணிப்பொறுப்பேற்ற கையோடு - அதாவது 1982 பெப்ரவரியில் மடுத்திருப்பதியில் *மறைமாவட்ட மேய்ப்புப் பணி ஆய்வரங்கு* ஒன்றை நடாத்தினார்.

மறைமாவட்டத்தின் குருக்கள் துறவியரோடு பல்வேறு பங்குகளிலும் இருந்து பொதுநிலைப் பிரதிநிதிகள் 300பேர் மட்டில் இதில் ஆர்வத்தோடு பங்கேற்றனர். அப்போது கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் இறையியல் விரிவுரையாளராக இருந்த அருட்பணியாளர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் புதிய மறைமாவட்டத்தின் பணிகளைத் திட்டமிடும் இவ்வாய்வரங்கில் சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். இம்மாநாட்டில் எட்டப்பட்ட முடிவுகள் தொகுக்கப்பட்டு அறிக்கையாக வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை ***மேய்ப்புப்பணி சார்ந்த மிகச்சிறந்த ஒரு கொள்கைப் பிரகடனம்*** என இதுபற்றி அருட்பணியாளர் எஸ். கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் கருத்துத் தெரிவித்தார்.

### புதிய அமைப்புக்கள் மற்றும் புதிய பங்குகளின் உதயம்

ஆய்வரங்கின் தீர்மானங்களுக்கு அமைவாக புதிய மறைமாவட்டத்தில் பல்வேறு மேய்ப்புப்பணி சார்ந்த அமைப்புக்களை - ஆணைக்குழுக்களை உருவாக்க வேண்டிய தேவை இருந்தது. மறைக்கல்விப் பணிகளை முன்னெடுக்கவென மறைக்கல்வி நிலையம், மனித முன்னேற்றத்தை மையமாகக்கொண்ட 'வாழ்வுதயம்' என்ற அமைப்பு, திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகள் - திருப்பாலத்துவ சபை, குடும்பப் பணி ஆணைக்குழு எனப் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

மலர்ந்த புதிய மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி சார்ந்த தேவையைக் கருத்தில்கொண்டு சில புதிய பங்குகள் உருவாக்கப்பட்டன. ஆட்காட்டிவெளிப் பங்கு, ஓமந்தைப் பங்கு, பெரியகட்டுப் பங்கு என்பன அவர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய பங்குகள் ஆகும். மறைமாவட்டத்தின் செய்தி ஏடாக அருட்பணியாளர் பிலிப் அடிகளாரினால் 'மன்னா' என்று மும்மாத இதழும் ஆரம்பிக்கப்பட்டது.

### பொதுநிலையினர் உருவாக்கப் பணிகள்

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் பொதுநிலையினரை உருவாக்குவதில் மிகுந்த அக்கறை காட்டினார். அவருடைய பணிக்காலத்தில் நிலவிய போர்ச்சூழல் அவருடைய முயற்சிக்கு இடையூறாக இருந்தாலும் அவர் தன்னுடைய சக்திக்கு உட்பட்டவகையில் பொதுநிலையினர் உருவாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் ஆரம்பகாலப் பொதுநிலைப் பணியாளராகிய திரு. ஜேக்கப் பெஞ்சமின் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார். "தோமஸ் ஆண்டகை பொதுநிலையினர் உருவாக்கத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 1987ம் ஆண்டு என்னை இந்தியாவில் உள்ள பெங்களூருக்கு அனுப்பி *திருவிவிலிய ஆன்மீகம்* (Biblical Spirituality) கற்க ஏற்பாடு செய்தார். இது இரண்டு மாதக் கற்கை நெறியாக இருந்தது. இப்பயிற்சியை முடித்து வந்த என்னைப் பல பங்குகளுக்கும் அனுப்பி பொதுநிலையினருக்குத் தேவையான இறையியல், மற்றும் வேதாகமக் கருத்தரங்குகளை நடாத்த ஊக்குவித்தார். மக்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் பொதுநிலைப் பணியாளர்களான திரு. யக்கோபு சேரம், திரு. அருளானந்தம் ஆகியோரைக்கொண்டு மக்களுக்குப் பல்வேறு உருவாக்கத்தைக் கொடுத்தார்.

சேவியர் குருஸ் அடிகளாரின் பொறுப்பில் வேதாகமக் குழு (Bible Group) ஒன்றை மறைமாவட்டத்தில் ஏற்படுத்தி பொதுநிலையினர் கிரமமாக வேதாகமத்தை வாசித்துப் பகிர ஏற்பாடு செய்தார்."

### புதிய குருக்களை உருவாக்கும் முயற்சி

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் புதிய மறைமாவட்டத்தில் குருக்களின் பற்றாக்குறையை நன்கு உணர்ந்திருந்தார். இதை அவர் ஆயராக நியமிக்கப்பட்டவுடன் பாதுகாவலனுக்கு வழங்கிய ஓர் நேர்காணலில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். "புதிய மறைமாவட்டத்தில் பணிபுரிய இங்குள்ள குருக்கள் நிச்சயமாகப் போதாது. புதுப் பங்குகள் அமைக்கப்படவேண்டிய தேவை இருக்கின்றது. உதாரணமாக வவுனியாப் பகுதியில் புதிய பங்குகள் உருவாக்கப்படவேண்டிய தேவைகள் உள்ளன. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எமது மூத்த யாழ் மறைமாவட்டத்தையே நம்பியிருக்கிறேன். இருந்தும் மன்னார் மறைமாவட்டத்திற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. இம்மாவட்டத்தில் இருந்து பல குருமாணவர்கள் படிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது" என்றார்.

குருத்துவ உருவாக்கத்தில் ஆர்வம் கொண்டிருந்த ஆயர் அவர்கள் நல்ல கத்தோலிக்க குடும்பங்களில் இருந்து சிறிய குருமடத்திற்கு மாணவர்களை மிக நுணுக்கமாக அவரே தேர்வு செய்தார். மன்னார் மறைமாவட்டத்தில் ஓர் சிறிய குருமடத்தை உருவாக்கி அதற்குப் பொறுப்பாக குருத்துவ உருவாக்கத்தில் அனுபவம் உடைய குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளாரையே நியமித்தார். தனியான குருமடக் கட்டிடம் அப்போது இல்லாத நிலையிலும் பல்வேறு வசதிக்குறைவுகள் மத்தியிலும் ஆரம்பக் குருமட மாணவர்களை உருவாக்குவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

உயர் குருத்துவக் கல்லூரியில் குருத்துவ உருவாக்கம் பெற்று வந்த குருத்துவ மாணவர்கள் - அருட்சகோதரர்கள் மட்டிலும் அவர் மிகுந்த அக்கறையாக இருந்தார். அவர்கள் விடுமுறைக்காக மறைமாவட்டத்திற்கு வரும்போது விடுமுறைக்காலத்தில் இந்த அருட்சகோதரர்களோடு அவர் செலவிடும் நேரம் அதிகமாக இருந்தது. ஆயர் இல்லத்தில் அவர்களைத் தங்க வைத்து பல்வேறு பயிற்சிகளை வழங்கினார். பல்வேறு உரைகளைத் தானே தயாரித்து அவர்களுக்கு வழங்குவார். அவ்வுரைகளில் குருத்துவ வாழ்வுக்குத் தேவையான பல்வேறு நடைமுறைச் சாத்தியமான கருத்துக்கள் நிறைந்திருக்கும். விடுமுறைக்காலங்களில் அருட்சகோதரர்கள் தமது விடுமுறையை வித்தியாசமான சூழலில் கழிக்கவேண்டும் என்பதற்காக அவரே அவர்களை அரிப்பு சிலாவத்துறை போன்ற வெளி இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களோடு தங்கியிருப்பார். இந்த ***விடுமுறை விடுதி (Holiday House)*** அனுபவம் குருத்துவக் கல்லூரி மாணவர்கள் மனதில் என்றும் அழியாத நினைவலைகளாக நிலைத்திருக்கும். விடுமுறை விடுதியில் அருட்சகோதரர்களோடு தங்கியிருக்கும் அவருடைய இந்த நடைமுறை குருத்துவ மாணவர்களை நன்கு அறியவும் அவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவும் அவருக்கு சிறந்த வாய்ப்பைக் கொடுத்தது.

### மக்கள் நலன் காக்கும் பொதுப் பணிகள்

ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் மக்களின் நலன் கருதி சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த அனைத்துப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தினார். இரண்டாம் வத்திக்கான் சங்கம் "***இன்றைய உலகில் திருச்சபை***" என்ற தனது கொள்கை விளக்கத்தில் குறிப்பிடுவதுபோன்று "மனிதர் அனைவரின் மகிழ்வும், எதிர்நோக்கும், ஏக்கமும், கவலையும் திருச்சபையினுடையதே." (எண். 1) பல்வேறு சமய மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் திருச்சபை மக்கள் சார்ந்த அனைத்துப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்னும் கொள்கையில் ஆயர் அவர்கள் உறுதியாகச் செயற்பட்டார். 'வாழ்வுதயம்' அமைப்பின் ஊடாக மனிதநேயப் பணிகளில் முன்னின்று உழைத்தார்.

அவருடைய மக்கள் பணி சார்ந்த ஈடுபாட்டைக் குறித்து மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத் தலைவர் திரு. செ. சி. இராமகிருஷ்ணன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "மன்னார் மாவட்டத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் இருந்தும் அவை யாவும் ஒன்றிணைந்து செயல்படாத காரணத்தினால் மக்கள் அவர்களது சேவையை முழுமையாகப் பெற முடியாதிருந்தது. ஆயர் அவர்கள் இந்த நிறுவனங்களை எல்லாம் ஒன்றிணைத்து ***மன்னார் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தை*** 1986ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். இவ்வொன்றியத்தின் ஆளுனராக இருந்து ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து ஒன்றியத்தின் சேவைகள் மக்களுக்கு சென்றடையக்கூடியதாக



செயல்பட்டு வந்தார். தனது பணி
ஒதுக்கித் தந்து ஒன்றியத்தினைச்
எனக் குறிப்பிடும் அவர் தொட
உணர்வை வெளிப்படுத்துகிறார்
தொண்டுகளை ஆயர் அவர்கள
வேளையில் 1992ம் ஆண்டு
பணிசெய்ய அழைக்கப்பட்டார்.
மறைமாவட்டம் ஆயர் தோ
ஆண்டகையின் சேவை
பெற்றுக்கொள்ள முடியவில்
கருதுகிறேன்" என்கிறார்.

'மேய்ப்புப்பணி மனநிலைகெ
Minded Bishop) என அ
மறைமாவட்டத்தின்
முன்னெடுப்பதற்கென
கொண்டிருந்தாலும் அவர் கால
போர்ச்சூழல் அதற்கு இடம்
உண்மை. தனது 11 வருடப்
மேய்ப்புப்பணித் திருமுகங்க
காலத்திற்குக் காலம் எழு
கிராமங்களுக்கும் மேய்ப்புப்ப
மேற்கொண்டு பங்குகளில் கு
பங்கு மக்களதும், குருக்கள
கேட்டறிந்தார்.

## 2. ஆயர் எ
## பணிக்கள

### நாட்டின் இன
### சூழலோடு ஆரம்பி

ஆயர் தோமஸ் ஆண்டகை
வன்முறைச் சூழல் உருவாகிய
தனது ஆயர் பணியையும் ம
ஆரம்பித்தார். 1983ம் ஆண்
இந்த நாட்டின் கறைபடிந்த
இக்கலவரம் அகில உ
இலங்கையின் பக்கம் திருப்
நிகழ்வு ஆகும்.


இந்த இனக்கலவரத்தை
விடுதலை இயக்கங்கள் தோன்
உரிமைகளை வென்றெடுக்க மு
அது. இலங்கை அரச படைக
தாக்குதல் சம்பவங்கள்
பயங்கரவாதத் தடைச்சட்டம்,
அன்றைய ஆட்சியாளர்களா
இயற்றப்பட்டு தமிழ் மக்களி
கைதுகளும், சித்திரவதைகளு
உள்ளூரிலும் வெளிநாடுகளி
அடைந்தனர். இன்றைய வன்மு
அன்றும் - இற்றைக்கு 25 வ
இங்கு நிலவியது. இது த
தொடர்கதையாகிப் போன ஒ
காட்டுகின்றது.

ஆகவே இத்தகைய வன்முறை

# றைமாவட்டத்தில் பகம் ஆண்டகையின் பணிகள் ளும் பதிவுகளும்

நேசன் -

"போர்ச் சூழல் நிறைந்த அக்காலத்தில் ஆயருக்கே உரிய சிவப்புநிறப் பட்டியை சிலவேளை அணியாமல் குருக்கள் அணியும் கறுப்புப் பட்டியை அணிந்துகொண்டு துவிச்சக்கர வண்டியில் பட்டித்தோட்டம் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் நகருக்கு அவர் வருவார். வரும் வழியில் தான் காணும் அனைவரோடும் கதைத்துச் சுகம் விசாரிப்பார். குழாய் நீரில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும் பெண்களோடும், சிறுவர்களோடும் பகிடிவிட்டுக் கதைத்து சிரித்து மகிழ்வார்"



து பணிமனையில் ஒரு பகுதியை
தினைச் செயல்பட வைத்துள்ளார்"
தொடர்ந்து தனது உள்ளத்து
துகிறார், "இவ்வாறாகப் பல்வேறு
அவர்கள் செய்துகொண்டிருக்கும்
ஆண்டு யாழ்ப்பாண ஆயராகப்
பட்டார். உண்மையில் மன்னார்
தோமஸ் சௌந்தரநாயகம்
சபையை முழுமையாகப்
யவில்லை என்றுதான் நான்

லைகொண்ட ஆயர்' (Pastoral
ன அழைக்கப்பட்ட இவர்
மேய்ப்புப்பணிகளை
ன பல திட்டங்களைக்
காலத்தில் மன்னாரில் நிலவிய
இடம்கொடுக்கவில்லை என்பதே
ருட பணிக்காலத்தில் பல்வேறு
டங்களை (Paastoral Letters)
எழுதினார். பங்குகளுக்கும்
ப்புப்பணி சார்ந்த பயணங்களை
ில் குருக்களோடு தங்கியிருந்து
ருக்களதும் குறைநிறைகளைக்

## எதிர்நோக்கிய சவால்கள்

### இனவன்முறைச் ரம்பிக்கப்பட்ட பணி

ன்டகை அவர்கள் நாட்டில் இன
வாகிய ஒரு காலகட்டத்திலேயே
ும் மன்னார் மறைமாவட்டத்தில்
ஆண்டு யூலை இனக்கலவரம்
ந்த வரலாற்று நிகழ்வு ஆகும்.
உலகத்தின் பார்வையை
திருப்பவைத்த ஒரு துன்பியல்

தை அடுத்து உள்ளூரில் பல
தோன்றி தமிழ் மக்களின் அரசியல்
க்க முனைந்து நின்ற காலப்பகுதி
டைகளுக்கு எதிராகப் பல்வேறு
கள் நடைபெற்றன. நாட்டில்
ட்டம், அவசரகாலச் சட்டம் என
ர்களால் பல்வேறு சட்டங்கள்
களின் வாழ்விடங்கள் எங்கும்
தைகளும் தொடர்ந்தன. மக்கள்
களிலும் அகதிகளாகத் தஞ்சம்
வன்முறை நிறைந்த ஓர் சூழலே
25 வருடங்களுக்கு முன்னரும்
து தமிழ் மக்களின் துயரம்
ன ஒரு நிலையையே எடுத்துக்

முறைச் சூழலில் தனது பணியை

ஆரம்பித்த தோமஸ் ஆண்டகை அவர்கள் தனது உறுதியான ஆன்மீக ஆழத்தினால் இறை உதவியோடு எல்லாச் சவால்களையும் சந்தித்து தனது ஆயர் பணியை சளைக்காது - களைக்காது சிறப்பாக முன்னெடுத்துச் சென்றார்.

### மக்களின் இடப்பெயர்வுகளும் ஆயரின் அயராத பணிகளும்

ஆயர் தோமஸ் ஆண்டகையின் பணிக்காலமானது மன்னார் மறைமாவட்டத்தில் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் இடம்பெற்ற ஒரு காலகட்டமாக உள்ளது. மக்கள் தாம் வாழையடி வாழையாகக் கட்டிக்காத்து வந்த தமது வாழ்விடங்களை விட்டு அகதிகளாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இடம்பெயர்ந்த நிகழ்வு மிகுந்த வேதனைமிக்க நிகழ்வாக அமைந்திருந்தது. உள்நாட்டில் மடுத்திருப்பதியிலும் மன்னார் 'சனி விலேஜ்' என்ற இடத்திலும் மக்கள் ஆயிரக்கணக்காக அகதி முகாம்களில் தங்கியிருந்தனர். அதேபோன்று ஆயிரக்கணக்கான அகதிகள் தமிழ்நாட்டிற்கும் இன்னும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதி அந்தஸ்துக்கோரி இடம்பெயர்ந்து சென்றனர். இவர்கள் அனைவரின் நலனையும் மிகுந்த அக்கறையோடு கவனிப்பதை தனது முன்னுரிமைப் பணியாக ஆயர் அவர்கள் கொண்டிருந்தார்.

1990ம் ஆண்டு ஆயிரக்கணக்கான அகதிகள் மடுத்திருப்பதியில் தஞ்சம் அடையத் தொடங்கிய வேளையில் அங்கு உள்ளூரின் சில சிறிய அரச சார்பற்ற நிறுவனங்கள் தவிர (வாழ்வுதயம், மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் போன்றவை தவிர) வேறு எந்த நிவாரண அமைப்புகளோ, நிறுவனங்களோ இருக்கவில்லை. இந்நிலையில் ஆயர் அவர்கள் எடுத்த முயற்சி பற்றி மடுத்திருப்பதியில் அப்போது பரிபாலகராக இருந்த அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளார் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"யு.என்.எச்.சி.ஆர். எனப்படும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகர் அமைப்பிடம் அகதிகளைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டபோது அவர்கள் உள்ளூரில் இடம்பெயர்பவர்களுக்கு உதவிசெய்யும் ஒழுங்கு நடைமுறை தமது அமைப்பில் இல்லை என்றும், உள்நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு அகதிகளாகத் தஞ்சம் அடைபவர்களுக்குத்தான் நாம் உதவி செய்யும் நடைமுறை உள்ளது எனவும் கூறிவிட்டார்கள். ஆயினும் ஆயர் அவர்கள் அந்தக் கஸ்ரமான காலகட்டத்திலும் மிகுந்த சிரமங்கள் மத்தியில் கொழும்புக்குச் சென்று யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு இந்த நடைமுறையில் விதிவிலக்கை ஏற்படுத்தி உள்ளூரில் இடம்பெயர்பவர்களுக்கும் உதவிசெய்ய முன்வரவேண்டும் எனக் கொழும்பு அதிகாரிகள் ஊடாக ஜெனீவாவுக்கு அவசர வேண்டுகோள் விடுத்தார். அதன்பிறகே மடுவில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு பணி செய்ய முன்வந்தது. அதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டனர்." மடுவில் அகதிகளோடு தங்கியிருந்த அவர் அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்பார்வைசெய்து தேவையானபோது உரிய அதிகாரிகளோடு தொடர்புகொண்டு மக்களின் தேவைகளை நிறைவுசெய்வதில் முன்னின்று உழைத்தார்.

இந்தியாவுக்கு அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருந்த மக்களைச் சந்திப்பதற்காகவே அவர் பல தடவை இந்தியாவுக்குப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் அகதிகளாக தங்கவைக்கப்பட்டுள்ள தனது ஆடுகளை அக்கறையுள்ள நல்ல ஆயனாக அவர் சென்று பார்த்தார். அவர்களுடைய கஸ்ரங்கள் கவலைகளைக் கேட்டறிந்தார். அவர்களுக்கு ஆறுதல் கூறினார், நம்பிக்கை அளித்தார். தனது மறைமாவட்டக் குருக்கள் சிலரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி அகதிகள் மத்தியில் பணிசெய்ய வைப்பதற்கும் அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். ஆனால் அது சில காரணங்களால் கைகூடவில்லை.

### போர்ச்சூழல் காரணமாகப் பல பங்குகள் மூடப்பட்டன

முனைப்புப்பெற்ற போர்ச் சூழல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததால் பங்குகளும் மூடப்படவேண்டிய சூழ்நிலை தோன்றியது. வங்காலை, நானாட்டான், அரிப்பு, செட்டிகுளம், அடம்பன், ஆட்காட்டிவெளி, ஓமந்தை எனப் பல பங்குகள் மூடப்பட்டன. 1990ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் பல பங்குப் பிரதேசங்கள் மக்கள் அனைவருமே வெளியேறிய நிலையில் வெறிச்சோடிக் காணப்பட்டன. இந்த இடங்களில் காடுகளும், பற்றைகளுமே சூழ்ந்து காணப்பட்டன. மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்திருந்தவேளையில் ஆயர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு அவர்களைத் தேடிச் சென்றார். அவர்களுடைய ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிகளைக் குருக்களின் உதவியோடு தானே முன்னின்று மேற்கொண்டார்.

### பஸ்ரியன் அடிகளின் படுகொலை

மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலைப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிக்கொண்டிருந்த யாழ் மறைமாவட்டக் குருவான மேரி பஸ்ரியன் அடிகளார் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு ஈழத்துத் தமிழ்த் திருச்சபையை உலுக்கிய ஓர் துன்பியல் நிகழ்வாகும்.

1984ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம்பெற்ற இந்தப் படுகொலை ஆயரின் மனதை மிகவும் பாதித்த நிகழ்வுகளில் ஒன்றாக இருந்தது. படுகொலைசெய்யப்பட்ட அருட்தந்தையின் உடலைக்கூட இராணுவம் கையளிக்கவில்லை. அவர் இந்தியாவுக்குப் படகு மூலம் தப்பி ஓடிவிட்டார் என்று அரசாங்கம் வெளியிட்ட செய்தி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைந்திருந்தது. இந்தத் துன்பமான - பயங்கரமான காலகட்டத்தில் ஆயர் அவர்கள் துணிந்து உண்மையை இலங்கை அரசிற்கும், மக்களுக்கும், உலகத்திற்கும் எடுத்துரைத்து நீதி கேட்டு வாதாடினார். இப்படுகொலை தொடர்பான அவருடைய அறிக்கைகளை உள்ளூர் - வெளியூர் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுவந்தன.

இப்படுகொலை நிகழ்வு நடந்த உடனேயே வங்காலைக்கு விரைந்து சென்ற அவர் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இராணுவ முகாமுக்குச் சென்று கொலை செய்யப்பட்ட அடிகளாரின் உடலை நல்லடக்கம் செய்யத் தன்னிடம் கையளிக்குமாறு இராணுவ உயர் அதிகாரியிடம் வாதாடினார்.

### இராணுவத்தால் ஆயர் தாக்கப்பட்டார்

போர்ச்சூழல் காணப்பட்ட அக்கால கட்டத்தில் ஆயர் அவர்களுடைய வாழ்வில் துயர் மிக்க - மறக்க முடியாத ஒரு நிகழ்வு இடம்பெற்றது. அதாவது ஆயர் கொழும்பில் இருந்து பாஸ்கா விழாவுக்காக பாஸ்கா மெழுகுதிரிகளைத் தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மன்னார் நோக்கி வந்துகொண்டிருந்தார். வரும்வழியில் வவுனியாவுக்கு அருகில் ஓர் இராணுவச் சோதனைச் சாவடியில் இராணுவச் சிப்பாய் ஒருவர், தடைசெய்யப்பட்ட பொருட்களில் ஒன்றான மெழுகை இவர் எடுத்து வருகின்றார் என்ற காரணத்திற்காகத் தனது துவக்கு முனையால் ஆயரை அடித்துள்ளார்.

இச்செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவியது. இச்செய்தி அரசாங்க மற்றும் இராணுவ உயர் மட்டம் வரை எட்டியது. நடந்த துரதிஸ்ரவசமான நிகழ்வுக்காக இராணுத் தலைவர்கள் ஆயரிடம் மன்னிப்புக் கேட்டனர். ஆயரைத் தாக்கிய அந்தக் குறிப்பிட்ட இராணுவச் சிப்பாயை ஆயரிடம் நேரே அழைத்துவந்த இராணுவப் படை அதிகாரிகள் ஆயரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வைத்தனர். ஆனால் இந்நிகழ்வுக்கு முன்னரே ஆயர் அவர்கள் அந்த இராணுவச் சிப்பாயை தான் மன்னித்து விட்டதாக அறிக்கை விட்டிருந்தார். அவருடைய அந்த மன்னிப்பின் செய்தியை இலங்கையின் கத்தோலிக்க ஆங்கில வார ஏடாகிய மெசஞ்சர் (The Messenger) பத்திரிகை முன்பக்கத்தில் ஆயருடைய படத்துடன் பிரசுரித்திருந்தது.

## 3. ஆயருடைய ஆளுமைப் பண்புகள்

### எளிமையானவர், இனிமையானவர்

ஆயர் அவர்கள் எளிமையை நேசித்த ஓர் உன்னத இறைமனிதர். அவருடைய சொல் செயல் அணுகுமுறை ஒவ்வொன்றிலுமே எளிமை நிறைந்திருக்கும். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

எனது குருமடக் காலத்தில் விடுமுறையின்போது அருட்சகோதரராக இருந்த நான் ஆயரைச் சந்திப்பதற்காக ஆயர் இல்லத்திற்குச் சென்றேன். நான் அங்கே சென்றபோது கண்ட காட்சி எனக்கு சற்றே அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. ஆயர் அவர்கள் ஒரு பழைய - கிழிசலுக்குத் தையல் போடப்பட்ட உடையை அணிந்தவராக பைப்பில் வந்த தண்ணீரை வாளியில் பிடித்து பூங்கன்றுகளுக்கு ஊற்றிக்கொண்டிருந்தார். அவருடைய எளிமையைக் கண்டு நான் மலைத்துப்போனேன்.

"போர்ச் சூழல் நிறைந்த அக்காலத்தில் ஆயருக்கே உரிய சிவப்புநிறப் பட்டியை சிலவேளை அணியாமல் குருக்கள் அணியும் கறுப்புப் பட்டியை அணிந்துகொண்டு துவிச்சக்கர வண்டியில் பட்டித்தோட்டம் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் நகருக்கு அவர் வருவார். வரும் வழியில் தான் காணும் அனைவரோடும் கதைத்துச் சுகம் விசாரிப்பார். குழாய் நீரில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும் பெண்களோடும், சிறுவர்களோடும் பகிடிவிட்டுக் கதைத்து சிரித்து மகிழ்வார். இவ்வாறு அவர் மக்களின் நிலைக்கு இறங்கி வந்து மக்களோடு மக்களாகத் தன்னை இணைத்துக்கொள்வார். எனவே இவர் '***மக்கள் ஆயர்***' என்று அழைக்கப்பட்டதில் வியப்பில்லை." என மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா அடிகளார் ஆயர் பற்றிய தனது நினைவுகளை இரைமீட்கும்போது குறிப்பிடுகின்றார்.

தமிழ் மண்ணில் போர் உக்கிரமடைந்து மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு இடம்பெயர்ந்து மடுவில் தங்கியிருந்த காலப்பகுதி அது. அங்குள்ள மக்களுடைய குறைகளைக் கண்டறிவதற்காகவும் உடற்பயிற்சி செய்வதை நோக்கமாகக் கொண்டும் ஆயருக்குரிய சிவப்பு நிறப் பட்டியை அணியாமல் சாதாரணமாகக் குருக்கள் அணிகின்ற கறுப்புநிறப் பட்டியையே அணிந்துகொண்டு துவிச்சக்கர வண்டியில் ஒவ்வொரு மாலை வேளையிலும் மடுத்திருப்பதியை அண்மித்த பகுதிகளுக்கு அவர் சென்று வருவார். இது அவருடைய எளிமைக்கு ஓர் அடையாளம்.

தான் ஒரு அருட்சகோதரராக இடைக்காலப் பயிற்சிக்காக மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்தபோது (அப்போது ஆயர் இல்லம் இன்றைய பேராலயப் பங்குப் பணிமனையில் இருந்தது) தான் பார்த்த ஒரு சம்பவத்தை அருட்பணியாளர் தேவராஜா கொடுதோர் நினைவு கூருகின்றார். "கடுமையான காற்றும் மழையும் இருந்த ஒரு நாள் அது. ஆயர் மேல்மாடியில் உள்ள தனது அலுவலக யன்னலை மூடாமல் விட்டபடியால் தூவானம் அடித்து பெருவாரியான மழைநீர் அலுவலகத்திற்குள் வந்துவிட்டது. அப்போது ஆயர் ஒரு நீளக்காற்சட்டையையும் பெனியனையும் அணிந்தவராக சில பழைய பெட்சீற்களை எடுத்து அறையில் பரவியிருந்த தண்ணீரை ஒற்றி வாளியில் பிழிந்து எடுத்து வெளியில் ஊற்றிக்கொண்டிருந்தார்."

### ஆன்மீக ஆழம் நிறைந்த செப மனிதர்

ஆயர் அவர்கள் செப மனிதராக விளங்கினார். அவருடைய செப வாழ்வு இறைமக்களுக்கும் சக குருக்களுக்கும், குருத்துவ மாணவர்களுக்கும் ஒரு மேல்வரிச் சட்டமாக விளங்கியது. அவருடைய பணிவாழ்வின் சவால்களை அவர் எதிர்கொண்டது செப அனுபவத்தின் வாயிலாகவே என்றால் மிகையாகாது. ஒவ்வொரு நாளும் மாலையில் இரவு உணவுக்கு முன்னர் நற்கருணைப் பிரசன்னத்தில் அமைதியான செபத்தில் தன்னை ஈடுபடுத்துவார். தன்னோடு இருக்கும் குருக்கள் அருட்சகோதரர்களும் இதைச் செய்ய வேண்டுமென அவர் தூண்டுதல் அளிப்பார்.

ஒருநாள் காலை மடுத்திருப்பதியில் இருந்தபோது அவர் காலைச் செபத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். மரிய ராசா என்ற நபர் ஆயரைச் சந்திக்க வந்திருந்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா நாயகர்... வெள்ளிவிழா நாயகர்.... வெள்ளிவிழா

# குருமுதல்வர் பணியில் இருபத்தைந்தாண்டுகளை நிறைவு செய்யும்

# அருட் தந்தை சேவியர் குரூஸ் அடிகளார்

## நான் கண்ட சிறிய குருமட அதிபர்

அருட்பணியாளர் ஞா. பிலேந்திரன்

எந்த ஒரு மனிதனுடைய வாழ்விலும் வாழ்வின் பல்வேறு நிலைகளில் மறக்க முடியாத பல சம்பவங்கள் நிகழ்வதுண்டு. அதிலும் குறிப்பாக மாணவப் பருவத்தில் ஏற்படும் அனுபவங்கள் ஆழமான மனப்பதிவுகளை ஏற்படுத்துவதுண்டு. குருக்களின் வாழ்வு எந்த விதத்திலும் இதற்கு விதிவிலக்கானதல்ல. குருக்களின் வாழ்வில் சிறிய குருமடத்தில் ஏற்படும் அனுபவங்கள் மறக்க முடியாதவை. பசுமையானவை, சுவையானவை. நினைத்து, நினைத்து மகிழக் கூடியவை. எனினும் சிறிய குருமட வாழ்வு சவால்கள் அற்றது. பிரச்சனைகள் இல்லை, எல்லாமே இலகுவான, இன்பமயமான வாழ்வு என்பது பொருளல்ல.

அந்த நாட்கள் குருமட மாணவருக்கு பயிற்சியின் நாட்கள். இலட்சியம், இலக்கு நன்கு அறிந்து, அதை நோக்கி வாழ்க்கையை நகர்த்திய காலம். இலட்சியத்தை அடைவதற்கு ஏற்றதான முறையில் அமைக்கப்பட்ட வாழ்க்கை முறை, இறுக்கமான நேரசூசி, அதைக் கடைப்பிடிப்பதில் காட்டப்பட்ட கவனம், ஆன்மீகப் பயிற்சி, படிப்பு, வேலை, செபம், மௌனம், விளையாட்டு, குழும வாழ்வு, மாணவர் மத்தியில் ஏற்படும் பிணக்குகள், அதிபரின் கண்களில்படாதவாறு செய்த சிறு குறும்புகள் - இவற்றை இன்று நினைக்கும் போது ஏற்படுவது இனம் தெரியாத மகிழ்ச்சி.

எந்தக் குருவினுடைய வாழ்வை எடுத்து நோக்கினாலும், அதில் சிறிய குருமட அதிபரின் குண இயல்புகளின் செல்வாக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் சிறிய குருமடத்தின் அதிபரே, மாணவருக்கு அந்த வேளையில் இலட்சிய மனிதன் எடுத்துக்காட்டாகப் பின்பற்ற வேண்டியவர்.

நான் சிறிய குருமடத்தில் மாணவனாக 9ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த காலம். 1969ஆம் ஆண்டாக இருக்கலாம் என எண்ணுகின்றேன். சுமார் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய அதிபர் பணி மாற்றம் பெற்றுச் செல்ல, அவ்விடத்திற்கு புதிய அதிபராக வருபவர் சேவியர் குரூஸ் அடிகள் என அறிந்தோம். இவர் யார்? எப்படிப்பட்டவர்? இவரது போக்கு எப்படி இருக்கும்! என அறிய மாணவர்கள் மத்தியில் அதிக ஆவல். எதிர்பார்த்த அதிபரும் ஒரு நாள் வந்தாயிற்று.

ஆரம்பத்தில் புதிய அதிபரின் நடைமுறைகளைப் புரிந்துகொள்வது மாணவருக்குக் கடினமாக இருந்தது. காலையில் மாணவருக்குத் திருப்பலி ஒப்புக்கொடுப்பார். மற்றைய வேளைகளில் அதிபரை அறைக்கு வெளியே காண்பது குறைவு. அப்படி அறைக்கு வெளியே காணப்படும் வேளையிலும், பச்சை நிறக் கண்ணாடி அணிந்தவராகவே காணப்பட்டார். நாட்கள் செல்லச் செல்லத்தான் அதிபர் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டு வந்தவர் என்னும் விடயம் தெரியவந்தது.

கண் சத்திர சிகிச்சையின் பின்பு கடமையைப் பொறுப்பேற்றாலும், குருமட மாணவர்கள் தொடர்பான தமது கடமைகளைத் தொடங்குவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை. படிப்படியாக குருமட மாணவரின் உருவாக்கல் தொடர்பான பல ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இவர் அறிமுகம் செய்த சீர்திருத்தங்களை ஏற்பது மாணவருக்குச் சற்று கடினமாகத் தென்பட்டது. எனினும், வெகு விரைவில் மாணவர்களாகிய நாம் இவரையும், இவர் செயற்பாடுகளையும், மாணவர் நலனில் அக்கறைகொண்டு, மேற்கொண்ட நடைமுறைகளையும் புரிந்துகொண்டோம்.

இவரால் உருவாக்கம் பெற்ற மாணவர்கள் எல்லோரும் இவரிடம் பெற்ற உருவாக்கம் பற்றி இன்னும் திருப்தியும், பெருமையும் கொள்கின்றோம். இவரிடம் பயிற்சி பெற்ற பலர் இன்று யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் குருக்களாகப் பணியாற்றுகின்றார்கள். தம்மிடம் உருவாக்கம் பெற்ற மாணவர்களுக்குப் பல்பரிமாண சமநிலை ஆளுமைப் பண்புகளை அளிப்பதில் அதிபர் கூடிய கவனம் செலுத்தினார். இவர் மாணவர் உருவாக்கத்தில் அன்பு, கண்டிப்பு, அறிவுரை, வழிகாட்டல், ஊக்குவிப்பு என பல நிலையிலும் கவனம் செலுத்தினார்.

ஒவ்வொரு மாணவனிடத்திலும் தனிப்பட்ட கவனம் செலுத்தியமையை நாம் உணரக்கூடியதாக இருந்தது. கல்வி கற்பதற்கு வேண்டிய அக, புறச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தமையினால், மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் முன்னேற முடிந்தது. மாணவர் மத்தியில், பொது அறிவை வளர்க்கும் நோக்குடன், பொது அறிவு வகுப்புக்களை ஒழுங்குசெய்து, தாமே முன்னின்று பொது அறிவுப் போட்டிகளை நடத்தியதோடு, தமிழ், ஆங்கில மன்றங்களையும் மேற்பார்வை செய்து பேச்சு, எழுத்து ஆற்றல்களிலும் மாணவர் வளர்ச்சி பெறுவதற்கு வேண்டிய ஊக்குவிப்பும், உதவியும் வழங்கினார்.

சேவியர் குரூஸ் அடிகள் அதிபராகப் பணியாற்றிய காலம், அப்போதைய அரசு கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கை காரணமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை நிலவிய காலம். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி எடுத்துச் செல்லத் தடை வழக்கிலிருந்த காலம். பாண் விற்பனை நிலையங்களுக்கு முன்பாக மக்கள் அதிகாலை வேளை நான்கு மணிக்கே வரிசையில் நிற்பதுண்டு.

இப்படியான சூழ்நிலையில், 50க்கும் அதிகமான மாணவர்களுக்கு உணவளிப்பது இலகுவான விடயமல்ல. இக்காலத்தில் அடிகளார் அறிமுகம் செய்த பசுமைப் புரட்சி அவரிடம் உருவாக்கம் பெற்ற எந்தக் குருவினாலும் மறக்கப்பட முடியாதது. சிறிய குருமடம் நான்கு பெரிய கிணறுகளும், விசாலமான காணியும் உள்ள இடம். இதில் சிறுதுண்டுக் காணி முதலாக வீணாக விடப்படக்கூடாது என்னும் நிலையில் மரக்கறித் தோட்டம் செய்வதில் அதிபர் காட்டிய தீவிர ஆர்வமும், அதை நடைமுறைப்படுத்தியமையும் குருமட நுழைவாயிலில் அன்றாடம் மரக்கறி விற்கும் நிலைக்கு மரக்கறி செய்கை பண்ணப்பட்டது. இத்துறையிலும் மாணவர்களாகிய நாம் நிறைந்த அனுபவம் பெற்றோம். இவ்வாறு பெறப்பட்ட பணத்தைக் கொண்டு, வருடா வருடம் கிறிஸ்மஸ் ஒன்றுகூடலின்போது, மாணவருக்கு கனதியான பரிசில்கள் வழங்கியதோடு, காலத்திற்குக் காலம் கடற்குளிப்புக்கு சாட்டிக்கு அழைத்துச் சென்றமையும் மறக்க முடியாத நிகழ்வுகளே. பிற்பட்ட காலத்தில், பயிற்சி பெற்ற மாணவர்கள் தென்னிலங்கைச் சுற்றுலா செல்லும் வாய்ப்பையும் பெற்றனர். முழுநிலவு நாட்களில் குருமட விளையாட்டு மைதானத்தைச் சூழ்வுள்ள பகுதிகளில் மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட புதையல் வேட்டை (Treasure Hunt) எமக்கு ஒரு சுவையான அனுபவம்.

அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளிடம், அவரது மாணவர்கள் கற்ற முக்கியமான பண்பு எந்த விடயத்தையும் பலமுறை சிந்தித்து, அதன் நேர், எதிர் விளைவுகளை நன்கு சீர்தூக்கிப் பார்த்து, மிக மிக நிதானத்தோடு மாற்றங்களை அறிமுகம் செய்யும் பண்பாகும். எந்த விடயம் பற்றியும் தீர்மானம் எடுப்பதற்கு முன்பு மிக மிக நிதானமாகச் செயற்படுவார்.

ஆன்மீகத் துறையில் எம்மை உருவாக்குவதற்கு திருப்பலியின்போது அருளுரைகளும் வாராவாரம் இடம்பெறும். ஆன்மீக வழிகாட்டல் கருத்துக்களும் முக்கியமானவை. அவர் வழங்கிய கருத்துக்களுக்கு மேலாக, இவர் செயற்பட்ட விதமும், அன்றாடம் மாணவர்களை வழிநடத்திய முறையும் எமக்கு சிறந்த ஆன்மீகப் பாடங்களாக அமைந்தன.

அதிபராக இவர் பணியாற்றிய காலம் முழுவதும், இவருக்கு வசந்த காலமாக அமையவில்லை. மாணவர்கள் செயற்பாட்டால், இவர் உள்ளம் புண்பட்ட வேளைகளில் தம்மைத் தாமே தனிமையில் நொந்து கொள்வார். இன்று எம் அதிபர் குருமுதல்வராக இருப்பத்தைந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளமை குறித்து பேருவகை அடைகின்றோம். இறையரசின் மதிப்பீடுகளை பிரதிபலித்து நிற்கின்ற இவரது வாழ்வு திருச்சபையின் தலைவர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவர் இன்னும் பல ஆண்டுகள் மறைப் பணியிலும், மக்கள் பணியிலும் சிறந்த பங்களிப்புச் செய்ய இறையாசீர் வேண்டி இவரை வாழ்த்துகின்றோம்.

## சேவியர் குரூஸ் அடிகளாரின் குருத்துவ உருவாக்கற் பணிகள்

அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா

கடந்து சென்ற 25 ஆண்டுகளுக்குள் மன்னார் மறைமாவட்டம் ஆல்போல் தழைத்து பெருவிருட்சமாகியுள்ளது. இப்பெரும் விருட்சத்தை தாங்குகின்ற விழுதுபோல் நின்று, மறைமாவட்டத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து அயராது உழைத்தமைக்காக சேவியர் குரூஸ் அடிகளாரை மன்னார் மறைமாவட்டம் பெருமையோடு நினைவு கூருகின்றது.

குருகுல முதல்வராய், குருக்களின் எளிய இதயங்களை பக்குவத்தோடு புரிந்துகொண்டு, அன்னையாய் அணைத்து, செவிமடுத்து குருக்களுக்கு அடிகளார் ஆற்றிய தொண்டு எல்லாக் குருக்களின் மனதிலும் நீங்காத நினைவலைகளாக நிலைத்து நிற்கின்றன.

மன்னார் மக்களின் துயர் துடைக்க பேரழிவுகளின்பின், மறுவாழ்வு வழங்க, ஏழையின் அன்பராய், எளியோரின் நண்பனாய், நீதியை நிலைநாட்ட அடிகளார் ஆற்றிய பணிகள் அனைவரும் அறிந்ததே. ஆனால் அடிகளாரின் பணிகளுள் ஓர் ஒப்பற்ற உன்னதமான பணி மக்களால் அதிகம் அறியப்படாத பணி. எம் மண்ணில் குருத்துவ உருவாக்கத்திற்கு அவர் ஆற்றிய பணியே ஆகும். இந்த உன்னதமான பணிக்கு யாழ். மன்னார் தலத்திருச்சபை இன்று சிரம் தாழ்த்தி நன்றி கூறி நிற்கின்றது.

1954ம் ஆண்டிலிருந்து உரோமையில் குருத்துவப் பயிற்சி பெற்று அங்கேயே 1961 ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, தாயகம் திரும்பினார்.

முருங்கன் பங்கிலே அடிகளார் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, வயதில் குறைந்தவராகவும், ஆளுமையில் சிறந்தவராகவும், நிர்வாகத்தில் முதிர்ந்தவராகவும் அவர் இருந்தமையால், 1970ல் யாழ். புனித மாட்டீனார் சிறிய குருமடத்தின் அதிபராக முன்னாள் யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையால் நியமிக்கப்பட்டார். அவருடைய சிறிய குருமடப் பணிக்காலத்தில், அன்றைய யாழ் மறைமாவட்டத்தின் எட்டுத் திக்கிலுமிருந்து சிறிய குருமடத்திற்கு வந்து சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் மாட்டீனார் குருமடத்தில் அடிகளாரின் ஆன்ம பயிற்சியைப் பெற்று இன்று எம் தமிழ் மண்ணின் இறையரசுப் பணியில் முன்னின்று உழைக்கின்றனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் புதிய சிந்தனைகளுக்கும் - கொள்கைகளுக்கும் உருக்கொடுத்து, திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் எதிர்காலக் குருக்களின் உருவாக்கம் அமைய வேண்டும் என்பது அடிகளாரின் சிந்தனையாக இருந்தது. பல்வேறுபட்ட குடும்பப் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களை இன்முகத்தோடு வரவேற்று, வீட்டுக் கவலைகளை மறந்து, மகிழ்ச்சியில் கலக்கச் செய்து, குருமடப் பயிற்சி வாழ்வுக்குப் பக்குவமாக முன்னேறிச் செல்ல உருவாக்கும் ஆற்றல் அடிகளாரின் தனித்துவமான ஆற்றலாகும்.

ஆங்கில அறிவு அறவே இல்லாமல், குருமடம் நுழையும் மாணவர்களுக்கு இலகுவாக அடிப்படை ஆங்கில அறிவை துல்லியமாகப் புகட்டும் திறமை படைத்தவர் அடிகளார். அடிகளார் எமக்கு ஆங்கிலம் புகட்டாவிட்டால், நாம் பெரிய குருமடம் நுழைந்திருக்கவே மாட்டோம் என்று இன்று எத்தனையோ குருக்கள் கூறுவதைக் கேட்கின்றோம்.



அடிகளாரின் தந்தை குரூஸ் மாஸ்ரர் திரு இசையில் கைதேர்ந்தவராகக் காணப்பட்டார். குரூஸ் மாஸ்ரர் வாரிசு என்பதால், திரு இசை ஆற்றலை ஒரு சிறப்புக் கொடையாக இறைவன் இவருக்குக் கொடுத்திருந்தார். அந்த ஆற்றலைக் கொண்டு, குருமட மாணவர்கள் பெற்ற பாடற் பயிற்சியினால் யாழ். பேராலய ஞாயிறுத் திருப்பலிகளில் கலந்திட விரும்பி, யாழ் பேராலய மக்கள் ஆர்வமாய் இருந்தனர் என்று மக்கள் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

கால மாற்றங்களுக்கேற்ற வகைகளில் குருமடப் பயிற்சியை நெறிப்படுத்தியமை குருத்துவ உருவாக்கத்தில் அவருக்கிருந்த அர்ப்பணிப்பை எடுத்தியம்புகின்றது. 1981 ஆம் ஆண்டு, மன்னார் ஒரு தனி மறைமாவட்டமாக மலர்ந்ததையடுத்து மன்னார் குருகுல முதல்வராகவும், பேராலயப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றிய காலத்திலேயே மன்னார் மண்ணில் ஒரு சிறிய குருமடம் உருவாக வேண்டும் என்பது இவரது தொலைநோக்குப் பார்வைக்குள் ஒன்றாக இருந்தது.

1982களில் மன்னாரிலே ஒரு சிறிய குருமடம் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தோடு அடிகளார் செயற்பட்டு வந்தார். ஆனால் நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பங்கள் காரணமாக 1989வரை மன்னார் குருமட மாணவர்கள் யாழ். புனித மாட்டீனார் சிறிய குருமடத்திற்கு அனுப்பப்பட்டு அங்கேயே பயிற்சி பெற்று வந்தனர்.

மறைமாவட்டத்தின் எதிர்காலத்திற்கு ஓர் சிறிய குருமடம் இன்றியமையாதது என்ற எண்ணத்தில் உறுதியாயிருந்த வேளையிலே 1989இல் தேவ அழைத்தலை ஊக்குவிக்கும் ஆவல் கொண்டிருந்த அடிகளாரையே மன்னார் சிறிய குருமடத்தின் முதல் அதிபராக எம் அன்றைய மன்னார் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நியமித்தார். மன்னார் மறைமாவட்டத்தின் பாதுகாவலியாம் மருதமடு அன்னையின் பெயரே புதிய குருமடத்திற்கு சூட்டப்பட்டது. அச்சிறிய குருமடம் ஒரு வாடகை வீட்டிலே தை, 7ம் நாள், 1989ம் ஆண்டு உதயமானது.

போர் காரணமாக மிகவும் இக்கட்டான ஒரு சூழ்நிலை அக்காலத்தில் நிலவியது. புதிய குருமடம் கட்டப்படுவதற்கான காணி வாங்கப்பட்டது. அக்காணி பெரும் காட்டுப் பகுதியாக இருந்த சாவற்கட்டு 100 வீட்டுத்திட்டத்திற்குள் இருந்தது. அக்காணியிலேயே இன்றைய அழகான குருமடக்கட்டிடம் கம்பீரமாக காட்சி அளிக்கின்றது. இக்கட்டிடத்திற்கான அடிப்படை ஆரம்ப வேலைகள் அனைத்தையும் செய்தவர் அடிகளாரே. நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக சீமெந்து, கட்டடப் பொருட்கள் இல்லாமலிருந்த வேளையிலே, அவற்றைக் கஷ்டப்பட்டு, தாழ்வுபாடு கடல் வழியாகக் கொணர்ந்து சேர்த்தார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)



மன்னார் சிறிய குருமடத்தில் புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட கட்டடத்தின் தோற்றம்

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



குறிப்பிட்ட ஓர் ஆசிரியர் தாம் கற்பிக்கின்ற பாடத்தை அடிக்கடி ஆயத்தப்படுத்தாமல் வந்து மாணவர்களை அறுத்துக் - கொண்டிருப்பார். இதனால் மாணவர்கள் மிகுந்த சலிப்படைந்தார்கள், அலுத்துக்கொண்டார்கள்.

ஒரு நாள் ஆசிரியர் கற்பித்துக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவன், "சேர்... ஒருவனைக் கொல்வது என்றால் உடனே கொல்வதா அல்லது படிப்படியாகக் கொல்வதா நல்லது?" எனக் கேட்டான். ஆசிரியரும் மிகவும் சிரத்தையோடு, "ஒருவரையும் நாம் கொல்லக்கூடாது. அது பெரிய தீமை. ஆயினும் கொல்லத்தான் வேண்டும்! அதைவிட வேறு தெரிவு இல்லையென்றால் உடனே கொல்வதுதான் சிறந்தது. தூக்குத் தண்டனை வழங்கப்பட்டவர்கள்கூட அப்படித்தானே கொல்லப்படுகிறார்கள்" என்று விடையோடு விளக்கமும் அளித்தார்.

மாணவன், "நல்லது சேர், ஒருவரையும் கொல்லக் கூடாது அப்படிக் கொன்றாலும் உடனே கொல்ல வேண்டும்!... அப்ப ஏன் சேர் எங்க இவ்வளவு பேரையும் கொல்லாமல் கொல்லுறீங்க..." எனத் தாழ்மையோடு கூறி அமர்ந்தான்.

என் பணியின் நிமித்தம் அடிக்கடி பயணம் செய்வது வழக்கம். ஒரு தடவை கொழும்பு செல்வதற்காக பஸ்சில் அமர்ந்திருந்தேன். எனக்கு அருகில் அப்பதான் வந்து உட்கார்ந்துகொண்ட ஒருவர் "பஸ் உடனே போகுமா அல்லது எடுக்க நேரம் எடுப்பானா?..." என என்னையும் அக்கம் பக்கம் அமர்ந்திருந்த ஏனைய பயணிகளையும் அடிக்கடி கேட்டு அலட்டிக்கொண்டிருந்தார்.

இன்னுமொருமுறை ஒரு விழாவுக்குப் போயிருந்தேன். எனக்கருகில் இருந்தவர், "இழுத்துக்கொண்டிருக்கிறாங்கள்... உடனே முடிக்க மாட்டாங்கள்போல கிடக்கு..." என அடிக்கடி சொல்லிக் கொண்டே, அந்நிகழ்வு முடியும் வரை நின்று அதன் பின்னர் எவ்வளவோ நேரம் அங்கு நின்றவர்களுடன் அரட்டை அடித்துவிட்டுச் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வயிற்றுக்குத்து என்று ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வெவ்வேறு வகையான சோதனைகளைச் செய்த மருத்துவர் அவற்றின் தரவுகளை வைத்துக்கொண்டு உமக்கு 'அப்பென்ரி சைட்.' அவசரப்பட்டு ஒப்பரேஷன் செய்யக்கூடாது, செய்யவும் முடியாது. திகதி தருவோம் வீட்ட போயிற்று இரண்டு கிழமையால 'ஒப்பரேசனுக்கு ஆயத்தமாக வாரும், ஒப்பரேஷன் செய்வோம். இரண்டு கிழமைக்குத் தருகிற மருந்துகளைக் கவனமாக எடும்." என நோயாளியிடம் தெளிவாக, விளக்கமாக விபரமாகக் கூறினார். அடுத்த கணமே, "அப்ப டொக்ரர் உடனே 'ஒப்பரேசன் செய்ய மாட்டிங்களோ?" எனக் கேட்டுக்கொண்டே இருந்தார்.

இவ்வளவும் பரவாயில்லை! மற்றொரு தடவை ஓர் ஆலயத்துக்கு திருப்பலி (Mass) நிறைவேற்றுவதற்காகச் சென்றிருந்தேன். பக்தன் ஒருவர் அவசர அவசரமாக வந்து "நீங்கள் பூசைய உடனே வச்சி முடிப்பிகளோ அல்லது கொஞ்சம் நேரம் எடுப்பிகளோ..?" எனப் பக்தியோடுதான் கேட்டார். முதலில் என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. எனினும் அந்நிலையை சுதாகரித்துக்கொண்டு "திருப்பலி நிறைவேற்றுவதில் 'கை மாஸ்' (High mass) என்று ஒன்று இருக்கிறது. இது வரையில் 'எக்ஸ்பிரஸ் மாஸ்' (Express Mass) என்று ஒன்று இல்லை. அதுபற்றி விபரம் ஏதும் வந்தால் உங்களுக்குச் சொல்லி அனுப்புகிறேன். அதுவரை 'நோமல் மாஸ்' (Normal Mass) களில் பங்கெடுங்கள்" என்றேன் மிகவும் நிதானமாக.

'இன்ஸ்ரன் ரீ (Instant tea) இன்ஸ்ரன் கோவ்வி' (Instant coffee) 'இன்ஸ்ரன் றிங்ஸ் (Instant drinks) போன்றவற்றைக் குடித்து குடித்து, 'இன்ஸ்ரன் நூடில்ஸ்' (Instant Noodles), 'இன்ஸ்ரன் லஞ்' (Instant Lunch) ஆகியவற்றைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு எல்லாம் Instant ஆக – உடனே நடைபெற வேண்டும் என்றால் 'ஜெற்'(Jet) இல்தான் பயணம் செய்யவேண்டும். நினைக்கின்ற வேகத்தில் எல்லாம் நிறைவேற வேண்டும் என்றால் எல்லாக் காரியங்களும் கைகூடுமா?

"திருமணத் தடையா? வேலை கிடைக்கவில்லையா? வெளிநாடு செல்ல வேண்டுமா? வீசா கிடைக்க வேண்டுமா? வாழ்க்கையில் விரக்தியா? பில்லி சூனியமா? நோய் நோக்காடா? உடன் நாடுங்கள்" எனப் போடப்படுகின்ற விளம்பரங்களைப் பார்த்துவிட்டு சோதிடம், சாத்திரம், குறி பார்த்தல், மை போடுதல் போன்ற வழிகளில் பிரச்சனைகளை உடன் தீர்க்கவும், வாழ்க்கைத் தீர்மானங்களை உடன் எடுக்கவும் முற்படுபவர்கள் இன்று பலர்.

உடனே படித்து, உடனே பரீட்சை எழுதி, உடனே 'பாஸ்' பண்ண வேண்டும் என்றால் அது எப்படி முடியும்? 'உடனே பேசி, உடனே திருமணம் செய்து உடனே பிள்ளைகளைப் பெற வேண்டுமென்றால்' அது சாத்தியமாகுமா? உடனே பேசி, உடனே திருமணத்தைச் செய்து வைக்கலாம்!... பிள்ளைப் பேறு ஒன்று மட்டும் அதே கால அளவில் இன்று வரை நடந்து - கொண்டிருக்கின்றது. நாளடைவில் அதற்கும் என்ன ஆகுமோ என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!....

"செய்ய வேண்டியதைக் காலம் தாழ்த்தாமல் உடன் செய்யுங்கள்" என்ற விருது வாக்கு (Vision Mission Statement) குறிப்பிட்ட ஒரு ஆண்டில் அமெரிக்காவின் தொழில்சாலைகளின் உற்பத்தித்திறனை பெருக்கியிருந்தது. நம் நாட்டுத் தொழிலதிபர் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் இவ்விருதுவாக்கை நம் நாட்டில் மிக நேர்த்தியாகத் தொழிலாளர்களிடையே நடைமுறைப்படுத்தினார். விளைவு: அத்தொழில்சாலையின் கணக்காளர் 50 இலட்சங்களோடு தலைமறைவானார். 10 தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி வழக்குத் தாக்கல் செய்தார்கள். 15 பேர் வேறு தொழில்சாலைகளில் இணைந்துகொண்டார்கள். ஏனையவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள். பத்திரிகையாளர்கள் இதற்கான காரணத்தை வினவியபோது 'செய்ய வேண்டியதைக் காலம் தாழ்த்தாமல் உடன் செய்திருக்கிறோம்" என்றார்கள். எதை, ஏன், எங்கு, எப்படி, எவ்வாறு செய்கிறோம் எனப் பொருள் அறிந்து செய்ய வேண்டும் அல்லவா!......

உடனுக்குடன் செய்யப்பட வேண்டிய காரியங்களை உடன் செய்து முடிக்க வேண்டும். உதாரணமாக ஒருவர் வீதி விபத்தில் சிக்கி காயமடைந்திருக்கிறார் என்றால், அவருக்கான முதலுதவியை விரைந்து செய்யவேண்டும். மேலதிக சிகிச்சைக்கு உடன் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்நேரத்தில் ஆ... வென்று வாய் பார்த்துக்கொண்டோ, விபத்துக்கான காரணங்களை ஆராய்ந்து கொண்டோ இருக்க முடியாது. விரைந்து செய்யப்பட வேண்டியவற்றை விரைவாகச் செய்யப்படவேண்டும். இதில் இரு கருத்து இருக்க முடியாது.

ஆனால் எதற்கும் அவசரம்!... எல்லாவற்றுக்கும் வேகம்!... அனைத்தையும் உடன் செய்ய வேண்டும். நினைத்ததை உடன் முடிக்க வேண்டும் என்றால் வாழ்க்கை என்னாகும்? பதறாத காரியம் சிதறாது. என்ன, நீங்கள் அவசரக் குடுக்கைகளா? ●

# வாகரைவாணன் வழங்கும்

## அந்தோனியார் காவியம்



காவியத் தொடர் – 4

### அசிசியார் கதை

இத்தாலி என்னும் அந்த எழில் மிகு தேசந்தன்னில்
முத்தெனக் குடும்பம் ஒன்று முந்தையர் பெருமையோடு
நித்தமும் அதனைக் காப்பான் நிகரிலாக் குடும்பத்தையன்
அத்தனின் அருளின் வெள்ளம் அகமெல்லாம் பாயுமாமே!

பீற்றர் என்றழைப்பார் அந்தப் பெருமகன் தன்னை! ஊரார்
போற்றுவதற்குரியோன் என்றால் புதினமே இல்லை! செல்வம்
ஊற்றெனப் பெருகும் ! அன்னோன் உறுதொழில் வாணிபத்தில்
காற்றினில் வாசம் போல கலந்திடும் பெருமை எங்கும்!

அவனது மனைவி உண்மை அழகினில் அரசியாவாள்
குவையெனச் செல்வம் நன்கு குவிந்திட்ட போதும் வீட்டில்
கவனமே கொள்ளாள்! என்றும் காட்சிக்கு எளிய மங்கை
புவனத்தில் இவளைப்போல புண்ணிய வதியே இல்லை!

மாதிவள் கர்ப்பமாகி மாதமும் வந்த வேளை
காதலன் இல்லை! நெஞ்சில் கருதியபடியே நல்லாள்
மேதகு இல்லம் விட்டு மெத்தவும் மகிழ்ச்சியோடு
ஆதரவில்லா அந்த ஆனது கொட்டில் சேர்வாள்

கடவுளின் விருப்பமின்றி காலது அசைதலில்லை
நடப்பன எல்லாம் அந்த நாயகன் ஆணை மீதே
திடமிதிற் கொண்ட மங்கை திருவுளப் படியே தந்த
கொடை என ஈன்றாள், சின்னக்குளிர் நிலாப் போலும் பாலன்!

காதலிற் பிறந்த செல்வன் கண்களில் நிறையக் கண்டு
மாதவள் களிக்கலானாள் மனமது குளிர்ந்து போகும்
தூதர்கள் வருவார் பட்டுத் தளிர் தனை மெல்லத் தூக்கி
சீதள முத்தம் கொட்டிச் செய்குவார் பணிகளெல்லாம்!

திருமகன் பிறந்து முற்றாய்த் திங்கள் ஒன்றான பின்னால்
அருளப்பன் என்று நாமம் அளித்தனர் முழுக்கின் போது
இருளப்பன் தன்னைப் பின்னால் எதிர்த்துமே ஓட்டப் போகும்
தெருளப்பன் என்றே நாளை தேசமும் சாட்சி சொல்லும்.

மைந்தனும் பிறந்த பின்னர் மாபொருள் ஈட்டச் சென்ற
தந்தையும் வந்தான்! அன்பு தான் மிகக் கொண்டதாலே
சுந்தர மகனைக் கொஞ்சி துலங்குமோர் நாமமொன்று
தந்தனன் பிரான்சிஸ் என்று தாரணி அழைக்கத் தானே!

### வசந்த காலம்


இளமையின் செழுமை! நல்ல இரத்தத்தின் ஓட்டம்! வாழ்வை
முழுமையாக கொள்ள வேண்டி முடிவில்லா முயற்சி! திட்டம்
பழமது இருந்திட்டாலும் பச்சையாய்க் காயைத் தின்னும்
அளவுக்குத் துடிப்பு! உண்மை ஆர்வத்தின் பிம்பம் இளைஞர்!

நிழலெனத் தொடரும் ஆசை நெஞ்சினில் கனவு கோடி
விழலுக்கு இறைத்த நீராய் வீணாகும் உழைப்பு! ஆற்றல்
பழமையை எதிர்க்கும் போக்கு பகட்டினில் மயங்கும் தன்மை
குழம்பிய கடலைப் போன்ற குலத்தினர் இளைஞராவர்!

எண்ணிய முடிக்கும் நெஞ்சம் எதிர்ப்பினில் நீந்தும் கொள்கை
விண்ணினைத் தானும் சாடி வில்லாக வளைக்கும் சக்தி
கன்னியர் சொன்னாற் போதும் கனலையும் விழுங்கும் கூட்டம்
மண்ணினில் இளைஞர் என்றால் மறுப்பவர் யாரும் இல்லை.

(காவியம் நீளும்)

# மன்னா விளம்பரப் பலகை



"ஜெருசலேத்திற்கு செல்வது மிகப்பெரிய காரியம் அல்ல. நல்ல முறையில் வாழ்ந்து வருவதுதான் மிகப்பெரிய காரியமாகும்." - துறவி ஜெரோம்
- தே. ஜெபமலர் (ஜெர்மா), சாளம்பன்.

"தீமையை அனுபவித்தவனைக் காட்டிலும் நன்மையைப் பற்றி அதிகம் அறிந்தவன் வேறு எவனும் இல்லை." (படித்துச் சுவைத்தது)
அன்ரன் கெனடி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

"துன்பம் இல்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவன் அடைந்த இன்பமே ஓர் நாள் அவனுக்குத் துன்பமாக மாறும்"
- திருமதி. சகாய நாதன் குலாஸ், பேசாலை.

"இன்பமான வாழ்க்கைக்கு மூன்று விஷயங்கள் தேவை பழையதை மறத்தல், நிகழ்வதைக் கவனமாய் நடத்துதல், வரப்போவதை நன்கு சிந்தித்தல்."
யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்.

"எரிச்சல் ஓர் அறுகம்புல் இதை அறிந்துகொண்டால் அன்றே அகலும் அல்லல்கள் பல."
இ.ஜெ. விஜானி, தரவன்கோட்டை, மன்னார்.

"நண்பர்களைவிட பறவைகள் மேலானவை. ஏன்? அவை பேசும் வார்த்தையில் பொய் இருக்காது."
- பு. மேரி நிஷா, இல. 118, வீரபுரம், நேரியகுளம்.

"வழக்கமான பேச்சுவார்த்தைகள் எல்லை மீறும்போது அது குற்றச் செயல்களுக்கு வழிவகுத்துவிடும்."
பா. றெஜிஸ், சூரிய கட்டைக்காடு.

ஒரு விசயத்தைத் தெரிந்துகொள்வதற்கும், அதை புரிந்து கொள்வதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. உலகம் ஒரு புத்தகம். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு பக்கத்தைத் திறந்து வைக்கும்.
ஜோ. ஜொய்சன் பிரதீப், 8ம் வட்டாரம், பேசாலை.

"துயரம் உனக்கு துடுப்பானால் உன் வாழ்க்கை மூழ்கும் படகாகும். நம்பிக்கை உனக்கு ஒளியானால் உன் வாழ்க்கை கலங்கரை விளக்காகும்." பீ. ஒகஸ்ரினா, இல.25/1, ராணிமில் வீதி, இறம்பைக்குளம், வவுனியா.

உனது எண்ணங்களை மறைக்காதே, அவற்றைச் சொல்வது வெட்கம் என நீ எண்ணினால் நினைத்தது அதைவிட வெட்கம் அல்லவா?
அ. ஜெயந்தி, வாழ்க்கைப் பெற்றான் கண்டல், முருங்கன்.

"நாம் தேடிச் சென்றது கிடைக்காவிட்டால் நம்மை நாடி வருவதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வோம்.."
- நா. சுபாசினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.

"நண்பனுக்கு நல்லது செய் நட்பு நிலைக்க, பகைவனுக்கும் நல்லது செய் அவனை நண்பனாக்க."
அ. அனிஸ்ரா (தர்சிலி), தரவன்கோட்டை, மன்னார்.

"பாலைவனம் பசுஞ்சோலையாக மாறாவிட்டாலும் பரவாய் இல்லை, பசும் சோலைகளையாவது பாலைவனமாக்காதீர்."- அ. விமலறஜனி, கிறிஸ்து அரசர் மாணவியர் இல்லம், முருங்கன்.

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக்' 'நறுக்' சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள். முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் பொழிவு

இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு வின்னி யோசப் அடிகளாரின் விறுவிறுப்பான பதில்

## என் கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** எல்லோரிடமும் ஒரு திறமை இருக்கிறது என்கின்றனர். தந்தையே, இதனை நாம் எவ்வாறு அறிந்து உணர்ந்து கொள்ளலாம்?

- மதன்ராஜ், மன்னார்.

பதில்:

மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் 10 இலிருந்து – 30 சதவிகிதத்திற்கு உள்ளாகத்தான் திறமைகளை வெளிப்படுத்துகின்றான். நம்மில் பல பேர் நம்முடைய திறமைகளை அறியாமலும், உபயோகிக்காமலுமே இறந்துவிடுகின்றோம். நம்முடைய திறமைகளை நாம் அறிவதற்குப் பலவகையான செயற்பாடுகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அச்செயற்பாடுகளில் நமக்குக் கிடைக்கின்ற அனுபவங்களைக் கொண்டும், நம்மை அதிகமாகக் கவர்கின்ற தனிப்பட்ட விருப்புகளைக் கொண்டும் நம்முடைய திறமைகளை நம்மால் எளிதாக இனங்காண முடியும்.

ஒரு செயலை நாம் திரும்பத் திரும்ப செய்கின்றபோது, நம்மை அறியாமலேயே அதில் ஒரு ஈடுபாடு தோன்றி அது நம்முடைய திறமையாக வெளிப்படுகின்றது. உதாரணமாக இசை ஞானி இளையராஜா தினமும் 14 மணிநேரம் இசைப்பயிற்சி செய்துதான் தன் திறமையை மேலும் வளர்த்துக்கொண்டார். ஆகவே நாம் அடிக்கடி ஈடுபடுகின்ற, நம்மை ஈடுபடத் தூண்டுகின்ற ஒரு செயலே நமது திறமையாக இருக்கக் கூடும். எவ்வாறாயினும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட திறமைகள் இருக்கத்தான் செய்கிறது. அதை நீங்கள் கண்டுபிடிப்பதுதான் உங்களுடைய தனித்திறமை!.

**கேள்வி:** எங்களைப் போன்ற சில மாணவர்கள் தேர்வில் வெற்றியடைய முடியாமல், தோல்வியைத் தழுவுவதால் பெற்றோர்கள் ஏசுகின்றனர். அறிவுரை கூற வேண்டியவர்களே எங்களை ஏசுவதால் மனமுடைந்த எங்களைப் போன்ற மாணவர்கள் என்ன செய்வார்கள்? இதற்கு ஒரு வழி கூறுங்கள், தந்தையே?

- மேரி தயாளினி, பேசாலை

பதில் :

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளை பிற்காலத்தில் நல்ல முறையில் வாழ்வதற்காக பல கல்விக்கூடங்களின் கதவுகளைத் தட்டி, கஷ்ரப்பட்டு இடம் வாங்குகின்றார்கள். பின்பு, படிக்க வைப்பதற்காகக் கடினப்பட்டு உழைத்து, சில நேரங்களில் கடன் வாங்கிக்கூட தேவையான புத்தகம், சீருடை, பள்ளிக் கட்டணம் என்று செலவு செய்கின்றார்கள்.



இந்த நிலையில் ஒவ்வொரு பெற்றோரும் ஒரு எதிர்பார்ப்பை வளர்த்துக்கொள்கின்றார்கள். அதாவது தங்களின் கடின உழைப்பின் பயனை உங்களிடம் (தேர்வில் வெற்றி பெறுவது) எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் அது நிறைவேறாமல் போனால் ஏமாற்றம் அவர்களுக்கு விரக்தியளிக்கின்றது. அதனால் ஏற்படுகின்ற மன உளைச்சலை ஏசுவதன் மூலமாக பிள்ளைகளிடம் காண்பிக்கின்றனர்.

உங்களை வெறுப்பதால் ஏசுவதில்லை. மாறாக உங்கள் நல் வாழ்வுக்குப் பங்கம் வந்துவிட்டதே என்ற ஆத்திரத்தில்தான் தங்களின் கவலையை வெளிப்படுத்துகின்றார்கள்.

இதையே நாம் மாணவர்கள் மனநிலையிலிருந்து பார்ப்போம். எல்லா மாணவர்களும் தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில்தான் தேர்வு எழுதுகின்றார்கள். ஆனால் பல காரணங்களால், தேர்வில் தோல்வியடைய நேரிடுகின்றது. முக்கியமான காரணம் தேர்வுக்கு நல்ல முறையில் தயாரிக்காததே என்று கூறலாம். நம்முடைய குறைபாடுகளை நாம் உணர்ந்து கொள்ளாமல் இருக்கக்கூடாது. நம்மை நாம் சுய ஆய்வுசெய்து, தோல்வியின் காரணத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையில் ஏமாற்றத்தை உருவாக்காமல் கடின உழைப்புக்கும் விடாமுயற்சிக்கும் இட்டுச்செல்ல வேண்டும். ஆபிரகாம் லிங்கன் போன்றோரின் வாழ்க்கையை எடுத்துக்காட்டாக அமைத்துக்கொள்ளுங்கள்.

இந்த நிலையில் நான் பெற்றோருக்குக் கூற விரும்புவது என்னவென்றால், உங்கள் பிள்ளைகளை அனுதாபத்தோடு நடத்துங்கள். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதீர்கள். ஒரு வருடம் தோல்வியடைவதால் வாழ்க்கையே முடிவடைந்து விடவில்லை. பிள்ளைகள் - பெற்றோர்கள் மனநிலையிலிருந்தும் - பெற்றோர்கள் பிள்ளைகளின் மனநிலையிலிருந்தும் இந்தப் பிரச்சினையைப் பாருங்கள். ஒருவர்மீது மற்றவருக்கு ஆழ்ந்த அன்புதான் ஏற்படும்.

# அதிகமான கவலைகளைத் தாங்குவது எப்படி?

எஸ். ஜே. யோகராசா, மட்டக்குளி, கொழும்பு



மனிதனுக்குப் பலவிதமான உணர்வுகள் உண்டு. எதிர்காலப் பாதுகாப்பு இல்லையேல், பய உணர்வு ஏற்படுகின்றது. உணவு இல்லையேல் பசி உணர்வு ஏற்படுகின்றது. ஓய்வு இல்லையேல் களைப்பு ஏற்படுகின்றது. மற்றவர்கள் கௌரவமாக எம்மை மதிக்கவில்லையேல் தாழ்வான புறக்கணிப்பு உணர்வு ஏற்படுகின்றது. சமுதாயத் தேவைகள் கிடைக்கவில்லையேல் தனிமை, புறக்கணிப்பு உணர்வு ஏற்படுகின்றது. சுயாதீனமாகச் செயற்பட முடியவில்லையேல் குறைவான, கலக்கமான உணர்வு ஏற்படுகின்றது. இந்த உணர்வுகள் மனிதனுடைய வாழ்வில் தாங்க முடியாத கவலையை ஏற்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக மனித உறவுகள் முறியும்போது எம்மால் அதைத் தாங்கவே முடிவதில்லை.

அதிகமான கவலை வந்தவுடன் மனம் சோர்வடைகின்றது. மனதின் சக்தி மின் வேகம் கூடும்போது, எமது வாழ்க்கை இயக்கமும் கூடுகின்றது. இந்த மனோ வேகம் சில சமயங்களில் தடைப்படுகின்றது. அதையே ஆழமான கவலை என்கின்றோம். எல்லாம் சமாளித்துக் கொள்ளக்கூடிய கவலையைத் தாங்கக் கூடிய கவலை என்கின்றோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எமது மனம் தவறான பாதைகளில் செல்ல வாய்ப்புண்டு. அறியாமையால் தீமையை நல்லதாகவும் - நல்லதைத் தீயதாகவும் மனம் கண்டு தடம் புரண்டோடுகின்றது. எந்த நிலையிலும் எமது உள்ளுணர்வுகள் உயர்ந்ததாகவே இருக்க வேண்டும். ஆக்கபூர்வமாகவே சிந்திக்கப் பழக வேண்டும். உயர்ந்த சிந்தனை மட்டும் எமக்குப் போதாது. அதை அடைவதற்கான மன உறுதியுடன் கடுமையாக உழைக்க வேண்டும். சலிப்படையக் கூடாது.

உடலின் உணர்வுகள் சக்தி வாய்ந்தவை. இவை மனதைப் பற்றி இழுக்கின்றன. இந்த இழுவைகள் ஆசைகளைத் தோற்றுவிக்கின்றன. ஆசைகள் மனதைத் தம்போக்கிலே செயற்படுமாறு இழுத்துக்கொள்ள முயலுகின்றன. ஆசையைப் பற்றிக்கொண்டு அதையே தொடர்ந்து மனம் அடிமை போல செல்லும்போது பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

எமக்கு அதிகமான கவலை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், எதன்மீதும் மிகுதியான பற்றுதலை வளர்த்துக் கொள்ளக்கூடாது. பற்று வைக்க வேண்டும். ஆனால் அதிக பற்று வைப்பது தவறு. ஒன்றை நேசிப்பது என்பது வேறு. நேசித்த ஒன்றை இழந்துவிட்டால் அதன்பின் வாழவே முடியாது என்று நினைப்பது வேறு. இது தவறாகும்.

ஒரு தாய்க்கு ஒரே மகன். அவன் திருமணமாகியதும் தாயுடன் ஒரே வீட்டிலே வாழ்ந்து வந்தான். தாய் மகன்மீது அதிக பற்று வைத்ததனாலே மகனைச் சுதந்திரமாகச் செயற்பட அத்தாய் விடவில்லை. மகனையும், மருமகளையும் தாய் கட்டுப்படுத்தி வாழ்ந்ததால் அக்குடும்பம் பிரியும் நிலைக்கு வந்தது. இங்கு தாயின் அதிக பற்றுதலால் தன்னில் பிள்ளையைத் தங்கப்பண்ணி வாழ்ந்தாள்.

மேலும் சிலர் பொருட்கள்மீது அதிகப் பற்று வைத்து வாழ்வார்கள். ஒரு வீட்டில் எலி ஒன்று விளக்கைத் தட்டி உடைத்துவிட்டது. உடைந்த விளக்கால் மனம் உடைந்தார் தந்தை. மனைவி ஓடி வந்து, "வேறு விளக்கு வாங்குவோம்" என்றாள். பிள்ளை ஓடி வந்து, "எனது திருமணத்திற்குப் பரிசாகக் கிடைத்த விளக்கைக் கொழுத்துவோம்" என்றாள். இப்பேச்சுக்கள் எல்லாம் தந்தைக்கு ஏறவில்லை. "இது பரம்பரையாகப் பாவித்த விளக்கு. இந்த விளக்கு உடைந்ததால் எனது வாழ்வே போய்விட்டது" என எண்ணினார் தந்தை. மனைவியும் - பிள்ளையும் இதனை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகவே எடுத்துக் கொண்டனர்.

ஒருவர் மீது, அல்லது ஒரு பொருள் மீது, சில கொள்கைகள் மீது அளவுக்கதிகமான பற்றுதல் வைக்கிறோம். அவற்றில் முறிவு ஏற்படும்போது, அதைத் தாங்காது மனம் சுக்குநூறாகின்றது. மூடத்தனமான பற்றுதல்களும், அளவுகடந்த மோகமும், இரத்தப் பாசப் பிணைப்புகளும் அதிகமான கவலைக்குக் காரணமாகின்றன. "கடமையைச் செய். பலனை எதிர்பாராதே!", "எல்லாம் நன்மைக்கே" என்ற கூற்றுக்கள் அதிகமான கவலையைத் தாங்கும் கூற்றுக்களே!.

ஆகவே, எமது வாழ்வில் ஆக்கபூர்வமான சிந்தனைகளை வளர்த்துக்கொள்வோம். காலம் மாறும்... சூழல் மாறும்.... எமது உடல் நிலை, வயது, அழகு எல்லாமே மாறும். இதற்கேற்ப வரும் மாறுதல்கள் இழப்புக்களைச் சமாளிப்பதாயின் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு எதிலும் அதிகளவு பற்று வைக்காது அளவோடு வாழ்ந்தால் மனதில் அதிகமான கவலையைத் தாங்க முடியும். உள்ளுணர்வுகளில் உற்சாகத்தை ஏற்படுத்தி வருகின்ற சூழலுக்கு முகம் கொடுத்துப் பழகுவோம். கவலையைத் தாங்கிக்கொள்ள வழி பிறக்கும்.

# உளியின் சிற்பிக்கு

திருமதி. டாலி, எழுத்தூர், மன்னார்.

வில்லை எடுத்தவன் எல்லாம்
வேட்டைக்காரனாகிவிட முடியாது,
உளியை எடுத்தவன் எல்லாம்
சிற்பியாகிவிட முடியாது,

உளியினால் உருவாக்கப்படும் சிற்பம் எப்படி அமைய வேண்டும் என்று ஓர் இலக்கில் சிற்பி தன் பணியைச் செய்ய முயற்சிக்கின்றான். ஓர் சிற்பி சிலையை வடிக்கும்போது, தன் இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கையில் கல்லை – மரத்தை சிலையாக வடிக்கின்றான்....

இங்கு சொல்ல வருவது என்னவென்றால், சிற்பி கல்லை சிலையாக செதுக்கும்போது, அது அவனது எண்ணத்தில் உருவான வடிவை எடுக்காவிட்டால் அச்சிலையை ஒதுக்கிவிடுவானா? அல்லது அது தற்போது எடுத்திருக்கும் வடிவத்திற்கு ஏற்ப, சிலையின் வடிவத்தையும், தன் எண்ணத்தையும் மாற்றி அமைத்துவிடுவானா? மாற்றுவதும் - அதாவது. அமையும் நிலையில் பெயரை - எண்ணத்தை மாற்றுவது மரத்துக்கும் - கல்லுக்கும் பொருத்தமாக இருக்கலாம். இல்லாமல்கூடப் போகலாம். ஆனால், மனம் என்னும் கல்லை உளியால் செதுக்கும்போது, அது உயிர் உள்ளது, உணர்வு மிக்கது. எனவே .... உளிக்கும் வலிமை வேண்டுமல்லவா!

மனிதன் பல முகங்களைக் கொண்டவன். அவனது மனம் எத்தனை முகங்களையும், பக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும். மனம் என்னும் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க பலர் முயன்றார்கள். முயன்றுகொண்டும் இருக்கின்றார்கள். இன்னும் முடிவு காண முடியவில்லை.

ஒருவன் தன் மனதிற்குப் பிடித்ததைச் செய்யும்போதுதான் அவன் மகிழ்கின்றான். சந்தோசமான வாழ்வைத் தொட்டுணருகின்றான்.

**'எந்த சின்னச் செயலிலும் ஈடுபட்டுழைத்தால் மனதுக்கு மகிழ்ச்சி ஐயா'** ஆம். இதுதான் உண்மை. இன்று ஒருவன் தன் பெற்றோர், உறவினர், நண்பர்களின் கட்டாயத்துக்காக கல்வியிலும் சரி, தொழில்துறை வேலைகளிலும் சரி. ஈடுபட்டால் அவன் வாழ்வு மகிழ்வானதாக, நிறைவானதாக அமையுமா? 'செய்யும் தொழில்தான் தெய்வம்' என்றால், மனதிற்குப் பிடிக்காத தொழிலைச் செய்தால் தெய்வத்தின் நிலை என்னாவது!

இன்று பெரும்பாலானோர் மற்றவர்களின் கட்டாயத்துக்காக வேலையில் ஈடுபடுகின்றார்கள். இதுதான் விரக்தி என்னும் விதை முளைக்கின்ற இடமாகின்றது.

"நில் - கவனி – முன்னேறு" என்ற கட்டுரைப் பகுதியில் ஒருவரின் மனதை ஓரளவுதான் புரிந்துகொள்ள முடியும். நிறைவான, மகிழ்வான வாழ்வு எப்படி அமையும் என்பதை விளக்குகின்றார் ஆசிரியர். குயில்தான் கூவ முடியும். மயில்தான் ஆட முடியும்.



இது இயற்கை. இறைவனின் கொடை. இதைவிட்டு, குயில் ஆடவோ, மயில் கூவவோ முயற்சி செய்யலாமா, அல்லது செய்தாலும் அதன் நிலை என்ன?

ஐந்தறிவு உள்ள ஜீவனுக்கே இந்நிலை என்றால் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு ஏன் அவன் மனம் விரும்பிய செயலில் ஈடுபட்டுழைக்க முடியாது? ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வகையான கொடைகளை இறைவன் கொடுத்துள்ளார். ஒருவன் தன்னிடம் உள்ள திறமையை, ஆற்றலை உணர்ந்து கண்டறிந்து வளர்க்க வேண்டும். அதற்குப் பெற்றோரும் - சமூகமும் விட்டுக் கொடுத்து உதவ வேண்டுமே தவிர, தங்களின் சுயநலத்துக்காக இளைஞர்களை மாற்றிவிட முயன்றால் பலன் என்பது பூச்சியம்தான். நிறைவான விளைவைப் பெறமுடியாது.

இன்றைய இளம் சமூகத்தில் முக்கியமாக வேலையில்லாத பட்டதாரிகள் அனைவரும் திண்ணையில் கற்பிக்கவும், பேச்சாளராகவும் மாற வேண்டும். மாறிவிட்டால், சமூகத்தின் வேடிக்கை பார்க்கின்ற கூட்டம்தான் இம்மக்கள் கூட்டம். இறைமகன் இயேசுவிற்கே இந்நிலை என்றால்?

இயேசு என்ன .... புத்தர், காந்தி என்ற எத்தனை பேர் வந்தாலும், நான் மாற வேண்டுமா! நீ யார்? எனக்கு சொல்வதற்கு! உன் தகுதி என்ன? என்று கேட்கும் உலகம். நான் மாற வேண்டும் என்று மனதால் நினையாவிட்டால், யார் வந்தும் பயனில்லை. **"நடக்கும்போது போதிக்க இயலாதவர்கள் ... போதிப்பதற்காக பயணம் செய்வது வீண்."** இதுதான் உண்மை. வீணாக, விருப்பமில்லாத பயணத்தை மேற்கொள்ள சமூகம் தூண்டுமானால், அதனால் பாதிக்கப்படுவது சமூகமே. எனவே மனதுக்குப் பிடித்த எந்தவொரு வேலையிலும் மகிழ்ச்சி நிறைவானதாக அமைந்திருக்கும். நிறைவான முழுமையான பயனையும், சமூகம் பெற முடியும். இவையில்லாவிட்டால் அமைதியின்மையும் - மகிழ்வின்மையும் - விரக்தியான வாழ்வுமே மிகுதியாகும். →

ஒருவன் தன் விருப்பத்திற்கு ஏற்பவும், அவனுக்குள்ள ஆற்றலையும் புரிந்துகொண்டு அதன் வழியில் கடுமையாக உழைப்பதனால் அவனது வாழ்வில் நிறைவு ஏற்படும். அவனது உழைப்பில் எவ்வளவு தோல்வி வந்தாலும், அது தோல்வியாக அமையாது. சோர்வு ஏற்படாது. உற்சாகத்துடன் உழைக்கத் தூண்டும். ஏனெனில் அவனது மனதிற்குப் பிடித்த தொழிலை செய்வதனாலாகும்.

எனவே ஓர் இளைஞனை விருப்பமில்லாத எதையும் செய்யத் திணிக்கக்கூடாது. அவர்களின் ஆற்றலை வளர்க்க வழிவகுத்துக் கொடுக்க சமூகம் முன்வர வேண்டும்.

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜேசுராஜா.


Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk

## சமாதானத்திற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றும்

## "வாழ்வுதயம்" சமாதானத் தூதுவர் விருதைப் பெற தெரிவாகாதது புரியாத புதிர்!

கடந்த வைகாசி மாதம் 31ம் திகதி கொழும்பு ரான்ஸ் ஏசியா கொட்டலில் மன்னாரைச் சேர்ந்த எழுவருக்கு உலக சமாதானத்திற்கான சர்வதேச சர்வமத அமைப்பினால் *சமாதானத் தூதுவர் விருது* வழங்கப்பட்டது. இவர்களை நாம் பெருமையோடு வாழ்த்துகின்றோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் வழிகாட்டலில் இயங்கிவரும் ஓர் தொண்டர் ஸ்தாபனம் வாழ்வுதயம். இந்நிறுவனம் கடந்த 24 வருடங்களுக்கு மேலாக மன்னார் மறைமாவட்டத்தில் பல்வேறு மனித நேய, சமூக, பொருளாதார, அபிவிருத்தி, சாமாதானம் தொடர்பான பணிகளை ஆயர் அவர்களின் வழிநடத்துதலிலும் இயக்குனர், மற்றும் பங்குத்தந்தையர்களின் திட்டமிடலிலும் மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றது.

ஆனால், இச்சமாதானத் தூதுவர் விருதுக்கு மன்னார் மாவட்டத்தில் நபர்களைத் தெரிவுசெய்தபோது வாழ்வுதயமும், வாழ்வுதயப் பணியாளர்களும் புறக்கணிக்கப்பட்டமை எமக்கு கவலையையும், விளக்கமின்மையையும், வியப்பையும் தருகின்றது.

இவ்விருது வழங்கும் வைபவத்திற்கு வாழ்வுதய அமைப்பின் ஊடாக சமாதான முன்னெடுப்புக்களை முன்நின்று நடாத்துபவர்களில் ஒருவராவது தெரிவுசெய்யப்படாமை தெரிவுக் குழுவினரின் கவனக் குறைவு அல்லது கவலையீனம் தான் காரணம் என கருதவேண்டி உள்ளது.

கடந்த பல வருடங்களாக பல்வேறு சமாதான முயற்சிகளை வாழ்வுதயம் முன்னெடுத்துள்ளது. குறிப்பாக, கடந்த காலங்களில் வாழ்வுதயம் மேற்கொண்ட சமாதான செயற்பாடுகளை நிரல்படுத்தும்போது பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. வடபகுதி தென்பகுதி மக்களுக்கான உறவுப்பால நிகழ்வுகளை 25 தடவைகளுக்குமேல் மேற்கொண்டது. வடபகுதி மக்கள் தென்பகுதி மக்களின் வீடுகளிலும், தென் பகுதி மக்கள் வடபகுதி மக்களின் வீடுகளிலும் மூன்று நாட்களைச் செலவழித்து தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் சூழலை உருவாக்கியமை. இந்நிகழ்வு மூன்று தடவைகள் மன்னார், அனுராதபுரம் மற்றும் குருநாகலில் இடம்பெற்றது.

(*தொடர்ச்சி 16ம் பக்கம்*)



தாழ்வுபாட்டில் சிறுவர் சமாதான விழிப்புணர்வுப் பாசறையினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகின்ற வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளார்.



வாழ்வுதய உதவிக்கர இணைப்பாளர் திரு. ஜோண் அவர்கள் சக்கர நாற்காலி ஒன்றினை பயனாளி ஒருவருக்கு வழங்குவதைக் காணலாம்.
அருகில் - வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களின் சிறு வியாபார அபிவிருத்திக்காக, வாழ்வுதய நிர்வாக அலுவலர் திரு. ஜெயதாஸ் அவர்கள் பயனாளி ஒருவருக்கு கடனாக பண உதவி வழங்குவதைக் காணலாம்.

## வாழ்வுதயத்தின் உடனடி நிவாரணச் செயற்பாடுகள்

வாழ்வுதய நிறுவனமானது, கடந்த யுத்தச் சூழலில் பலதரப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகளை மக்களுக்கு வழங்கி, மக்களின் உடனடித் தாகத்தைத் தணித்திருக்கின்றது. அதேபோல் சமகாலத்தில் யுத்தக் கெடுபிடிகள் எமது மண்ணில் தாண்டவம் ஆடி வருகின்றமையினால் மக்களின் இயல்பு வாழ்வு சீர்குலைந்து சின்னாபின்னமாகி வருகின்றது.

இவ்வாறான, திடீர்ச் சம்பவங்களினால் மக்கள் பாதுகாப்பு கருதி, தேவாலயங்கள், பாடசாலைகளில் ஒரு சில நாட்கள் தஞ்சம் புகும்போது, அவர்களின் உடன் உணவுத் தேவையை ஓரளவாவது பூர்த்திசெய்வதற்காக உலர் உணவுக் கொடுப்பனவுகள், மற்றும் வன்முறைச் சம்பவங்களால் உயிர் நீத்தவர்களுக்கான பூதவுடல் பேழை போன்றவற்றையும் வழங்கி, மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றது.

கடந்த வருட இறுதியில், மார்கழி 23ம் திகதி, பேசாலை 100 வீட்டுத்திட்டத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தால், பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்திற்கு இடம்பெயர்ந்த மக்களிற்கு 3 1/2 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுக்கு வாழ்வுதயம் நிதியுதவியினை பங்குத் தந்தையிடம் வழங்கியுள்ளது.

அத்தோடு திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து அதே ஆலயத்தில் தஞ்சமைடைந்த மக்களிற்காக 30000/= பெறுமதியான நிதியை வழங்கியது. பேசாலை வன்முறைச் சம்பவத்திற்கு பலியானவர்களுக்கான பூதவுடல் பேழைகள் 5 வழங்கப்பட்டன. பேசாலை, கரிசல், காட்டாஸ்பத்திரி, சிறுத்தோப்பு பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உடனடிக் காலை ஆகாரம் வழங்கப்பட்டது.

உயிலங்குளப் பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான சமையலுக்குரிய உலர் உணவும் வழங்கப்பட்டது. 12.07.2006 அன்று தோட்டவெளியில் 1,25000/= பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் பள்ளிமுனைக் கிராமத்தில் 1,50000/= பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் தொழில் வாய்ப்பின்றி அவதியுறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக, வாழ்வுதய நிறுவனப் பணியாளர்கள் மக்களின் இயல்புவாழ்வு பாதிப்படையும்போது, அவ்விடம் சென்று நேரடியாகத் தமது பணிகளை மக்கள் மத்தியில் ஆற்றி வருகின்றனர்.

## உளவளத்துணை தொடர்பான கருத்தமர்வு

வாழ்வுதயத்தின் ஆற்றுப்படுத்தல் பிரிவினால், கடந்த ஆடி மாதம் 4ம், 6ம், 7ம் திகதிகளில் அருட்சகோதரி கிறிஸ்ரபெல் தலைமையில் உளவளத்துணை தொடர்பான கருத்தமர்வு வாழ்வுதய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆரம்ப நாள் நிகழ்வினை வாழ்வுதய இயக்குனர் வண பிதா ஜேசுராஜா அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் 23 வாழ்வுதயப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் கிராமிய விழிப்பூட்டல் பிரிவுப் பணியாளர்களும், உதவிக்கரப் பிரிவுப் பணியாளர்களும், ஆற்றுப்படுத்தல் பிரிவுப் பணியாளர்களும் அடங்குவர்.
3 நாட்களும் காலை 8.30 தொடக்கம் - பிற்பகல் 5.00 மணிவரை இந்நிகழ்வு இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் ஆற்றுப்படுத்தல் பணியின் முக்கியம் பற்றிய விளக்கமும் ஆற்றுப்படுத்துனர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டன.

இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாக 'நான் யார்?' என்று முதலில் அறிந்து, தனக்குள் புதைந்துள்ள பிரச்சனைகளை இனங்கண்டு, தனக்குள்ள பிரச்சனையில் இருந்து விடுபடுவதன் மூலம் தனது குடும்பத்திலும், தனது சமூகத்திலும் சந்தோஷமாக வாழவும், மற்றவர்களைப் புரிந்துகொண்டு வாழவும் வழிசமைப்பதாகும். இதில் கலந்துகொண்ட அனைவரும் இக்கருத்தரங்கு தமக்குப் பயனுடையதாக அமைந்தது என்று ஒருமித்துக் கூறினார்கள். தொடர்ந்தும் மாதமொருமுறை இது போன்ற கருத்தமர்வை நடாத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## தாழ்வுபாட்டில் வாழ்வுதயச் சிறுவர் சமாதானப் பாசறை

ஒற்றுமை, அன்பு, சமாதானம், சமத்துவம் போன்ற நற்பண்புகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சிறுவயதிலிருந்தே வளர்க்கப்பட வேண்டும் என வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பி. ஜேசுராஜா அடிகளார் குறிப்பிட்டார்.

அண்மையில் மன்னார், தாழ்வுபாட்டுப் பங்கிற்குட்பட்ட கீரி, தாழ்வுபாடு கிராமங்களைச் சேர்ந்த வாழ்வுதயச் சிறுவர் சமாதானக் கழக உறுப்பினர்கள் 75 பேருக்கு தாழ்வுபாடு புனித வளனார் கேட்போர் கூடத்தில் சமாதான விழிப்புணர்வு கருத்தமர்வு நடாத்தப்பட்டபோதே அவர் மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் வளவாளர் திரு றோமன் குரூஸ் அவர்களால், குழு விளையாட்டுக்கள், கலைத்திறன் வெளிக்காட்டல் போன்றவை சிறப்பாக நடைபெற்றன. இச்சிறுவர் சமாதானக் கழக பாசறையில் வாழ்வுதயப் பணியாளர்களான, கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் திரு. அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) அவர்களும், ஊக்குவிப்பாளர்களான செல்வி. ஜே. அரினா, செல்வன் எஸ். ஆர். ராஜேஸ்வரன், செல்வன் வி. ஜே. பிரதீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இப்பாசறை திறம்பட நடைபெறுவதற்கு தாழ்வுபாடு முன்பள்ளி ஆசிரியர் சகோதரி சின்னத்தம்பி பாக்கியம் அவர்கள் உதவி புரிந்து ஒத்துழைப்பு நல்கியமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்வுதயத்தின் புனர்வாழ்வுப் புனரமைப்புப் பிரிவின்கீழ் 2006ம் ஆண்டு ஜனவரி முதல் நடைபெறும் கட்டுமானப் பணிகள்

| இல. | இடம் | கட்டடத்தின் பெயர் | நிதி வழங்குனர் |
|---|---|---|---|
| 01 | ம. கட்டையடம்பன் | வீட்டுத்திட்டம் (மாதிரிகிராமம்) | ஐரோப்பிய ஆணைக்குழு |
| 02 | முள்ளிக்குளம் | வீட்டுத்திட்டம் | கறிற்றாஸ் - சிறிலங்கா |
| 03 | துள்ளுகுடியிருப்பு | சிறுவர் இல்லம் | மன்னார் ஆயர், ஜேர்மனி நலன் விரும்பி |
| 04 | நானாட்டான் | சிறுவர் இல்லம் | பேறா நிறுவனம் |
| 05. | நானாட்டான் | சமையலறை (உணவகம்) | ஜேர்மனி நலன் விரும்பி |
| 06. | வாழ்க்கைப் பெ. கண்டல் | சமையலறை | மன்னார் ஆயர். |
| 07 | மன்னார் | வாழ்வுதய கொம்பிளக்ஸ் | மன்னார் ஆயர், வாழ்வுதயம். |
| 08 | சிலாவத்துறை | பங்குப் பணிமனை | மன்னார் ஆயர். |
| 09 | மடுக்கரை | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர். |
| 10 | தலைமன்னார் | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர். |
| 11 | தாஸ்கோட்டம் | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர். |
| 12 | கூமாங்குளம் | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர். |
| 13 | செட்டிகுளம் | பாலர் பாடசாலை | சீடா, மன்னார் ஆயர், வாழ்வுதயம். |
| 14 | பாப்பாமோட்டை | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர் |
| 15 | தோட்டவெளி | பாலர் பாடசாலை | மன்னார் ஆயர் |
| 16 | சிறுக்கண்டல் | பாலர் பாடசாலை | மனோ யுனிடாஸ் - ஜேர்மனி |
| 17 | பறப்பாங்கண்டல் | பாலர் பாடசாலை | மனோ யுனிடாஸ் - ஜேர்மனி |
| 18 | பெரிய பண்டிவிருச்சான் | பாலர் பாடசாலை | மனோ யுனிடாஸ் - ஜேர்மனி |
| 19 | இலுப்பைக்குளம் | பாலர் பாடசாலை | மனோ யுனிடாஸ் - ஜேர்மனி |
| 20 | தட்சனாமருதமடு | பாலர் பாடசாலை | சீடா |

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 31**

சொல்லின் செல்வர் அமுது

## உள்ளம் உருக்கும் வெள்ளப் பெருக்கு

1970 ஐப்பசியில் பருவக்காற்றின் மழை நின்றுவிட்டது கல்கத்தாவில். பின்னர் இடைக்கிடை மழைத்தூற்றல் காணப்பட்டபொழுது அது விரைவில் நின்றுவிடும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் பாட்டம் பாட்டமான மழை கூடிக்கொண்டே வந்தது. ஒரு கிழமையாக விடாப்பிடியாக மழை கொட்டத் தொடங்கியது. பாதைகள் தண்ணீரால் போர்த்து மூடிக்கொண்டன. போக்குவரத்துகள் தூக்கமாத்திரை அருந்திக் கொண்டன. நூற்றுக்கணக்கான தாழ்ந்த நிலக் குடியிருப்புகளில் மூடுவிழாக்காண வேண்டியதாயிற்று. அங்கு கூரைகளை வெள்ளம் சலவை செய்தது. அன்புப் பணியாளரின் குழந்தை இல்லத்திற்கு முன்னே நீண்ட வரிசையில் மக்கள் நின்றனர்.

அதன் முடிவைக் காண இயலவில்லை. பாஞ்சாலியின் சீலை போல் சென்றது. உணவுக்காக நாளாந்தம் அந்த வாசலுக்கு வருகிறவர்களுக்கு உணவுப்பொட்டலம் கொடுப்பது வழக்கம். பசியால் வருகிறவர்களுக்கு அன்னம் அளித்து வந்த கன்னியர்கள் நீண்ட வரிசையைக் கண்டு திகைத்தனர். எல்லோருக்கும் கொடுக்க அங்கே போதிய உணவு இல்லை. என்ன செய்யலாம் என்று அங்கலாய்த்த கன்னியர்கள் அமுத சுரபியான ஆண்டவனை வேண்டினர்.

அன்று வெள்ளப் பெருக்கினால் வீதிகளில் வாகனங்களின் நடமாட்டமே இல்லை. எனவே அன்று பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. 'கெயர்' (Care) நிறுவனம் இலவசமாகப் பாடசாலைகளுக்குப் புதுப் பாண் விநியோகம் செய்து வந்தது. அத்துடன் ஊட்டச் சத்துள்ள வேறு உணவுப் பொருட்களையும் கொடுத்து வந்தது.

அன்று இருப்பிலிருந்த பாணையும், உணவுப் பொருட்களையும் அன்னை திரேசாவுக்கு கையளிக்க அந்த நிறுவனம் தீர்மானித்தது ஆச்சரியமே! புரதமும் ஊட்டச்சத்தும் சேர்த்துச் சுவையூட்டப்பெற்ற பாண்கள் நீண்ட வரிசையில் நின்றவர்களின் முகத்தில் சுளுக்கெடுத்தன. ஆச்சரியத்தால், "இது ஒரு முதல் தரமான புதுமை" என்று அன்னை மகிழ்ச்சியுடன் கூறினார்.

அந்த நீண்ட வரிசையில் நின்ற ஒரு வங்காளி, அன்னை திரேசாவை அவசரமாகக் காண விரும்பினார். தனது வரலாற்றை அங்கே நின்ற கன்னியர் ஒருவருக்குக் கூறினார். "என் பெயர் சார்க்கர். எனது கிராமம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. பாடசாலைக் கூரையின்மீது மக்கள் விறைத்தபடி இருக்கிறார்கள். வெள்ளத்தில் மிதக்கும் அயல் கிராமத்தில் இப்போதுதான் ஒரு குழந்தை பிறந்தது. வேறு சில பெண்கள் பிரசவத்திற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். ஒருவரும் எங்களுக்கு உதவிபுரிய முன்வரவில்லை. அன்னை முன்னரும் உதவிக்கரம் நீட்டியவர். இப்போது நான் அவரைக் காணவேண்டும்" என்றார். அவ்வேளை அங்கு வந்த அன்னையார் அங்கு நின்றவரை உடனே அடையாளம் கண்டார்.

கலங்கிய அவர் முகத்தில் புன்னகை பூத்தது. அங்கே அருகில் நின்ற அமெரிக்க மங்கையைப் பார்த்து: "இவர் சார்க்கர் என்பவர். ஒரு ஆசிரியர். கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு இவர் தலைவராய் இருக்கிறார். கடும் உழைப்பாளி. இரண்டு கிராமங்கள் மழையில் மூழ்கிவிட்டன. உடனே அங்கு நாங்கள் போகவேண்டும். இளம் தாய்மாரைக் காப்பாற்றுவதற்கு நேரத்துக்கு அங்கே போய் உதவவேண்டும்" என்றார். ஒரு லொறி நிறைந்த கெயர் பாண்களையும் ஏற்றிக்கொண்டு, நடமாடும் மருத்துவ நிலையத்தோடு அன்னையரும் கன்னியர் அக்னேசும் இன்னும் சிலரும் மழை வெள்ளத்தைக் கிழித்துக்கொண்டு விரைந்தனர்.



நரை நிறமான ஒரு கட்டிடம் வந்ததும் அதனைச் சுட்டிக்காட்டி "அங்கே பலர் உறைவிடந்தேடி இருக்கிறார்கள்" என்றார் சார்க்கர். பக்கத்திலுள்ள ஆறு பெருக்கெடுத்ததால் வெள்ளத்தில் ஆடுமாடுகள் மிதந்தன. அன்னை முழங்காலுக்குமேல் பாயும் வெள்ளத்தில் அந்தரிக்கிறவர்கள் வாழ்வின் பல்லவியாக விரைந்து சென்று உள்ளே பார்த்தார். ஒரு சில மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தில் வாங்குகளின்மேல் ஒருவர்மேல் ஒருவரை நெரித்தவாறு அவ்விடத்தில் அடைக்கலந்தேடி நின்றனர். ஆண்கள் வெள்ளத்தை எதிர்த்துச் சென்று லொறியில் இருந்து நூற்றுக் கணக்கில் பாண்களைத் தலைச்சுமையாய்க் கொண்டுவந்து சேர்த்தனர். குழந்தைகளோடுள்ள தாய்மாருக்கு உயிர்ச்சத்துள்ள மாத்திரைகளும் கிடைத்தன.

தொடர்ந்து சார்க்கருடன் குறிப்பிட்ட கூரைக்குச் சென்றனர். கட்டடம் தெரியாதவாறு வெள்ளம் மூடியிருந்தது. ஒரு பெரிய வள்ளம் அப்போது அங்கே வந்து சேர்ந்தது. வேறு வள்ளங்கள் பின்னால் வந்தன. அவற்றில் அவர்களை அடைந்து ஒரு பிட்டிக்குக் கூட்டிச் சென்றார். பெண்களையும் பிள்ளைகளையும் குழந்தை இல்லத்துக்கு அனுப்பி வைக்குமாறு அன்னை பணித்தார். "மற்றவர்கள் இங்கேயே நில்லுங்கள். உங்கள் அனைவருக்கும் இடம் ஒழுங்குசெய்தபின் நான் உங்களை வந்து அழைத்துப் போவேன்" என்று கன்னியர் அக்னேசையும் அங்கே மழையில் நனைய விட்டபடி அன்னை சென்றார்.

குழந்தை இல்லத்துக்கு அருகே உயர்தரப் பாடசாலையை ஒழுங்குசெய்து திரும்பிவந்து வெள்ள அகதிகள் முன்னூறு பேரையும் அழைத்துச் சென்றார். வெள்ளம் வடியும்வரையில் உணவும் உடையும் கொடுத்துக் காப்பாற்றினார். மேலும் இவ்வாறான அபாயங்கள் வரும்போது கன்னியர்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. வெள்ள நிலைமை சீரடைந்தது. அன்னை அவர்கள் நீண்ட உலகப்பயணம் ஒன்றுக்கு ஆயத்தமானார். (கங்கை தொடர்ந்து பாயும்)

## சமாதானத்திற்காக அர்ப்பணிப்போடு ....

15ம் பக்கத் தொடர்ச்சி

2. மன்னார் மறைமாவட்ட இளைஞர்கள் கண்டி மறைமாவட்ட வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்வதற்கும், கண்டி மறைமாவட்ட இளைஞர்கள் மன்னார் வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்வதற்கும் வழிசமைத்தது. இரு இனங்களுக்கிடையேயான கசப்புணர்வுகளைக் களைந்து புரிந்துணர்வை உருவாக்க இந்நிகழ்வு உதவியது.

3. தென்பகுதி வைத்திய நிபுணர்களை மன்னாருக்கு இரு தடவைகள் வரவழைத்து மன்னார் ஆதார வைத்தியசாலையில் இலவச வைத்திய முகாம் நடாத்தியமை.

4. மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து 265 இளைஞர்களை மதவேறுபாடின்றி துவிச்சக்கர வண்டிகள் மூலம் கொழும்புக்குக் கொண்டுசென்று தென்பகுதி அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் சமாதானத்தின் அவசரத் தூதைக் கொடுத்தமை.

5. உள்ளூர் மனிதநேய அமைப்புக்களை ஒன்றுசேர்த்து சமாதானப் பேரணிகளை நடாத்தியமை.

6. தென்பகுதி, வடபகுதி சர்வமதத் தலைவர்கள் அமைப்புக்களை வரவழைத்து சர்வமத வழிபாடுகளை நடாத்தியமை.

7. யுத்தத்தினால் உயிர் நீத்தவர்களின் (பொது மக்களின்) மாமக்கள் தின அனுஸ்டிப்புக்கள் வருடாவருடம் மார்கழி 04ம் திகதி நடாத்தி வருகின்றமை.

8. சமாதானம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வுகளை வளர்ந்தோர், இளைஞர், மாணவர், சிறுவர்களுக்கு நடாத்தி வருகின்றமை.

9. கறிற்ராஸ் - சிறிலங்காவினால் (செடெக்கினால்) தேசிய மட்டத்தில் வருடாவருடம் ஒழுங்குசெய்து வரும் தேசிய சமாதான இளைஞர் மாநாட்டு நிகழ்வுகளுக்கு மன்னார், வவுனியாப் பிரதேசங்களில் இருந்து ஒவ்வொரு தடவையும் நூற்றுக்கும் அதிகமான இளைஞர் யுவதிகளை கூட்டிச் சென்றமை. (குருநாகல், பதுளை, மட்டக்களப்பு)

10. இன வேறுபாடில்லா கலை நிகழ்வுகளை இரு இனத்தவருக்குமிடையே மன்னாரில் இரு தடவைகள் அரங்கேற்றியமை.

11. மன்னார் மாவட்ட எல்.ரீ.ரீ.ஈ யினருக்கும் - மன்னார் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான உயர் மட்டப் புரிந்துணர்வு கலந்துரையாடல்களை இருமுறை வாழ்வுதயக் கேட்போர் கூடத்தில் நடாத்தியமை. உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பானதும், நிலக்கண்ணிவெடி தொடர்பானதுமான உயர்மட்டக் கலந்துரையாடல்களும் இவ்வொன்றுகூடலின்போது, கலந்துரையாடப்பட்டமை இங்கு குறிப்பிட வேண்டியது.

12. மன்னார், வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கட்கான ஒன்றிப்புக் கலந்துரையாடல் நிகழ்வினை வாழ்வுதயக் கேட்போர் கூடத்தில் நடாத்தியமை.

13. கிராம மட்ட சிறுவர் சமாதானக் கழக உருவாக்கங்கள், விழிப்புணர்வுப் பாசறைகள், கருத்தமர்வுகள், பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்வுகள் என்பன நடாத்தப்பட்டு வருபவை.

இவ்வாறு பலவாறாக சமாதானத்திற்காக அரும்பாடுபட்டு வரும் வாழ்வுதய நிறுவனம் இவ்வாறான சில சந்தர்ப்பங்களில் புறம் தள்ளப்படுவதும், ஓரங்கட்டப்படுவதும், மறக்கப்படுவதும் எமக்கு கவலையைத் தருவதோடு, எமது துடிப்பான உற்சாகத்துக்கும் களங்கம் ஏற்படுத்துகின்றது.

சமாதானத்துக்கான எமது முன்னெடுப்புக்களும் - முயற்சிகளும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு அனைவரும் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்பதற்கேயன்றி, எமக்குச் சமாதான விருது கிடைக்க வேண்டுமென்பதற்காகவல்ல என்பதனையும் தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருந்தும் இவை போன்ற தட்டிக்கழிப்புக்கள் இனிமேலும் ஏற்படாவண்ணம் காக்க வேண்டியது உயர் அதிகாரிகளினதும், பொறுப்பாளர்களினதும் கடமையாகும் என நான் வலியுறுத்துகின்றேன். எனவே, இத்தட்டிக்கழிப்புக்கு காரணமாக செயற்பட்டவர்கள் இனிமேலும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடாமல் உண்மையான சமாதானத்தை உருவாக்கும் சமாதான முன்னெடுப்புக்களை ஒழுங்குபடுத்தி நடாத்துபவர்களுக்கு உற்சாகம் ஊட்டுமாறு கேட்டுநிற்கின்றேன்.

*எஸ். ராஜகாரியர், (ராஜன்),*
*இணைப்பாளர், சமாதானப் பிரிவு, வாழ்வுதயம்*
*(கறிற்ராஸ் - மன்னார்) இல. - 17, பிரதான வீதி,*
*மன்னார்.*

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் பகுதி இல.39

இம்மாதத்திற்கான மறையறிவுப்போட்டிக்கான வினாக்கள் ஜுன் மாத மன்னாவிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

1. புனித பேதுரு பஸ்லிக்கா தேவாலயத்தின் 500 ஆண்டு நிறைவு இவ்வாண்டு நினைவுகூரப்படுகின்றது. கிறிஸ்தவ உலகில் இதுவே மிகப்பெரிய தேவாலயமாகும். இத்தேவாலயக் கட்டுமானப் பணியைத் தொடங்கிய I) திருத்தந்தை யார்? II) எப்போது இக்கட்டுமானப் பணியைத் தொடங்கினார்?

2. மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் உருவம் தாங்கிய யூரோ நாணயங்கள் வத்திக்கான் நாட்டில் எப்போது வெளியிடப்பட்டன?

3. திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுக்கான புதிய தேசிய இயக்குனராக அருட்பணி றெஜினோல்ட் சப்ரமாது தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 11 வருடங்களாகப் பணியாற்றிய முன்னாள் இயக்குனர் யார்?

4. மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய பணி நியமனங்களின்படி அருட்பணியாளர் இ. அகஸ்ரீன் புஸ்பராஜ் அவர்கள் பொறுப்பேற்கும் புதிய பங்கு எது?

5. மே மாதம் 13ந் திகதி, பற்றிமா நகரில் அன்னை மரியாள் மூன்று சிறுவர்களுக்கு காட்சி தந்த நாளாகும். இவ்வருடம் மே 13ம் நாள் அன்னை காட்சி தந்து எத்தனையாவது ஆண்டு நிறைவு நாள்?

6. 1981ம் ஆண்டு, மே மாதம், 13ம் நாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் வாழ்வில் மறக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நாளாகும். அன்று அவருக்கு ஏற்பட்ட துயரம் என்ன?

7. திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் வெளியிட்ட முதற் சுற்றுமடலின் பெயர் என்ன?

8. தற்போது மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக நியமனம் பெற்றிருக்கும் அருட்தந்தை அந்தோனி விக்ரர் சோசை அவர்கள் எப்போது? எங்கு? குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்?

9. "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு ... என் பாதைக்கு ஒளியும் அதுவே" இக்கூற்று வேதாகமத்தில் எங்குள்ளது?

10. புனித அந்தோனியார் கோடி அற்புதர் எனப் புகழப்படுபவர். கற்பு என்ற புண்ணியத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. கிறிஸ்துவை குழந்தை வடிவில் கரமேந்தும் பேறுபெற்றவர். இவர் எங்கே? எப்போது பிறந்தார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 37
இதற்கான கேள்விகளுக்கு 55 பேர்
விடை அளித்திருந்தனர்.
இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட

### அதிஸ்ரசாலி:

**அ. மேரி லூட்ஸ் (லக்சி).**
**நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.**

பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

### 10 அதிஸ்ரசாலிகள்

1. ஏ.ஜி. சாதனா, மன்/புனித சவே.பெண்கள் கல்லூரி, மன்னார்.
2. எஸ். வெனிஸ்ரன், பள்ளிமுனை, மன்னார்.
3. ம. லின்ரா, பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல்.
4. அ. மேரி அன்ரனியா (தர்சினி), முத்தரிப்புத்துறை.
5. ஆ. டயாளினி, மாதிரிக் கிராமம், வங்காலை.
6. ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
7. ஆ. லக்ஸனா, ஏ.07, மடுக்கோவில், மடு.
8. யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்.
9. பி. லூட்ஸ் அஞ்சலிக்கா, எமில்நகர், மன்னார்.
10. தே. குளோறியற் தேன்மொழி, மன்/ நானாட்டான். ம.வி.


## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்.
யோன்போல்
21.07.2006

மன்னார் முருங்கன் இசைமாலைத்தாழ்வைப் பிறப்பிடமாக கொண்ட திரு. திருமதி. லோறன்ஸ் (ரவி) சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் யோன்போல் தனது முதலாவது பிறந்தநாளை 21.07.2006 அன்று இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துவோர்: அன்பு அம்மா, அப்பா, ஞானப்பெற்றோர், லண்டனில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், கனடாவில் வசிக்கும் அன்ரி சுகந்தி குடும்பம், லண்டனில் வசிக்கும் ஜெறோ மாமி குடும்பம், இசைமாலைத் தாழ்வில் வசிக்கும் அம்மம்மாமார்கள், அம்மப்பாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், பெரியப்பா குடும்பம், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், அருட்தந்தை பெனோ, அருட்தந்தை ஜெயபாலன் ஆகியோர். இவர் புனித பிலிப்நேரியார் ஆசி பெற்று பல கலைகளிலும் சிறந்தவனாய் பல்லாண்டு காலம் வாழ்கவென இவர்கள் வாழ்த்தி நிற்கின்றார்கள்.

# குடும்பக் குவலயம்





## சமாதானம் உன் உள்ளத்தில் இருந்தா! அல்லது உலகில் இருந்தா உதயமாகும்!

திருமதி. எம். ஏ. எம். கபிரியேல் நீற்றா,
மன்/ மோட்டைக்கடை அ. த. க. பாடசாலை, நானாட்டான்.

வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம், ஊருக்கு ஊர், நகரத்திற்கு நகரம், ஏன்! நாட்டுக்கு நாடுகூட சமாதானம் எங்கே? சமாதானம் எங்கே? என்று அங்கலாய்ப்புத்தான். எங்கு பார்த்தாலும் இதே ஆதங்கம்! வானொலியிலும், தொலைக்காட்சியிலும் இதே நிலை!

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தடைப்படுகின்றதே, அது ஆட்டம்காணும் நிலையில் உள்ளதே, இந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி கிடைத்துவிடுமோ! என்ற அங்கலாய்ப்பு எல்லோர் உள்ளத்திலும் ஒரு பீதியை ஏற்படுத்தியுள்ளது. பழையபடி நாடு சீர்கெட்டு விடுமோ? பொருளாதாரத்தடை வந்துவிடுமோ? போர் முழக்கங்கள் மத்தியில் நாம் வாழப் போகின்றோமோ? போக்குவரத்து சீர்கேடு ஏற்பட்டுவிடுமோ? என்ற பல கேள்விகள், பலரின் உள்ளத்தில் எழுந்துகொண்டே இருக்கின்றன.

அன்பு வேண்டும், அமைதி வேண்டும், சமாதானம் வேண்டும், என்று ஓலமிடும் நீ, இந்த அன்பு, அமைதி, சமாதானம், ஒற்றுமை எங்கிருந்து வரும் என்று யோசித்தாயா? "எங்களுக்கு வேண்டும், நாங்கள் வாழ வேண்டும்" என்று கூறும் நீ, நான் என்ன செய்ய வேண்டும்? எனது கடமைகள் என்ன? எனது நிலை என்ன? நான் எவ்வாறு செயற்பட வேண்டும்? என்பதை உணர்ந்தாயா!

உலக சமாதானத்தை நாடும் நீ, உன் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்தாயா? உன் உள்ளம் கிறிஸ்தவ மதிப்பீடுகளை, கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடிக்கின்றதா? கிறிஸ்தவன் - கிறிஸ்தவள் என்ற முத்திரையில் வாழும் நீ, கிறிஸ்துவில் வாழ்கின்றாயா? எதற்கும், எந்நிலையிலும், எல்லாவற்றிற்கும் முதன்மையாக, அடிப்படையாக, ஆணிவேராக அமைவது இறைபக்தி. இந்த இறை எமக்குள் இருக்கின்றதா? இறைபக்தியில், இறைவிசுவாசத்தில் நீ வேரூன்றி இருந்தால், நீ தேடிக் கொண்டிருக்கும் சமாதானம் உன் உள்ளத்தில் - உன் இல்லத்தில் வரும். நம் உள்ளத்தை ஆராய்வோம். நாம் பிறருடன் அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ்கின்றோமா? அயலவர்களின் நலனில் அக்கறை எடுக்கின்றோமா? "உன்னைப்போல், உன் அயலானையும் நேசி" என்றார் இயேசு.

மற்றவர்களை நேசிக்கின்றோமா? அல்லது தூசிக்கின்றோமா? நாம் இறைவனுக்காகவும் - அயலவர்களுக்காகவும் என்ன செய்கின்றோம்?

தியாகிகளுக்கு முதற்சான்று, முதல் மனிதன் கிறிஸ்து. அந்தக் கிறிஸ்துவுக்காக நாம் செய்த தியாகம் என்ன? மற்றவர்கள் எம்மைத் தூற்றும்போது, பழிக்கும்போது நாம் ஆத்திரம் அடைகின்றோமா? பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல பண்பை ஊட்டுகின்றோமா? அவர்களை மன்னிக்க வேண்டிய நேரத்தில் மன்னிக்கின்றோமா? பிறர் நம்மிடம் ஆறுதல் தேடி வரும்போது, நாம் எப்படிச் செயற்படுகின்றோம்?

ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்கள் பேதங்களை மறந்து, பகிர்ந்துண்டார்கள். ஆதிக்கிறிஸ்தவர்களின் வழிவந்த நாம், அன்பியங்கள் ஊடாக, எம் அன்பைப் பகிர்கின்றோமா? பகிர்தல் என்ற பண்பை வளர்க்கின்றோமா? அல்லது ஊர்க்கதைகளைப் பேசித் திரிகிறோமா? உன்னையே ஆராய்ந்து கொள். எனக்குத்தான் எல்லாம் தெரியும். என்னை அறிவிலும், அந்தஸ்திலும் யாரும் வெல்ல முடியாது என்ற தலைக்கனத்தில் எத்தனை பேர் வாழ்கின்றோம்? மற்றவன் முன்னேறக்கூடாது. அவனை வீழ்த்த வேண்டும் என்று எத்தனை பேர் கங்கணம் கட்டிக்கொண்டு அலைகின்றோம்?

ஒற்றுமை இருந்தால் சமாதானம் கிடைக்கும். வேற்றுமை இருந்தால் என்ன கிடைக்கும்? போட்டி, பொறாமை, விட்டுக்கொடாமை, பழிக்குப்பழி வாங்கும் வெறி, ஏமாற்று வித்தை, மற்றவரை மதியாமை, தலைக்கனம், வெட்டுக் கொத்து இவை போன்ற வஞ்சகக் குணங்களைத்தான் வேற்றுமை மூலம் நாம் சம்பாதிக்கலாம்.

இவை அனைத்தையும் நாம் மனதில் சுமந்துகொண்டு, எவ்வாறு பிறரிடம், வேறு இனத்தவரிடம் சமாதானத்தை நிலைநாட்ட முடியும்? ஒவ்வொரு உள்ளமும் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். தன்னைத் திருத்தினால் சமூகம் தானாகத் திருந்தும். உன் உள்ளத்தில் சமாதானத்தை நிலைநாட்டு. உன் இனத்திற்கு, உலகிற்கு சமாதானம் கிடைக்கும். சமாதானம் உன் உள்ளத்தில் இருந்தா, உலகில் இருந்தா உதயமாகும்?

# விசுவாசத்தினால் வாழ்வு

அருட்பணியாளர் ம. நிர்மல்ராஜ் (செ.தா.)

உலகத்தில் வாழ்கின்ற மனிதன் ஏதோ ஒரு விதத்தில் விசுவாசம் உள்ளவனாக இருக்க அழைக்கப்பட்டுள்ளான். நம்பிக்கை இல்லையென்றால் எந்தவொரு துறையிலும் முன்னேற முடியாது. நிறைவான பயனை எதிர்பார்க்க முடியாது.

உதாரணமாகக் கணவன் மனைவியிடையே ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லையென்றால் குடும்ப வாழ்வு சிறப்படையாது. அவ்வாறே நாம் இறைவனில் உண்மையான விசுவாசம் கொள்ளவில்லை என்றால் எம் வாழ்வில் நிறைவாழ்வைக் காண முடியாது. விசுவாசம் என்ற சொல்லுக்கும் நம்பிக்கை என்ற சொல்லுக்கும் அதிக வேறுபாடு கிடையாது.

விசுவாசம் என்றால் என்ன என்பதைக் குறித்து, விவிலியம் இரத்தினச் சுருக்கமாக இவ்வாறு சொல்கிறது. "நாம் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி. கண்ணுக்குப் புலப்படாதன பற்றிய மனந்தளராத நிலை. (எபிரே. 11:1) என்று கூறப்படுகின்றது.

இன்றைய உலக வாழ்வில் மனிதனின் கொள்கைகள் திட்டங்கள் சீரிய பயனை கொடுக்காமைக்குரிய காரணம் விசுவாசமின்மையே. பரிசுத்த விவிலியத்தில் கடவுள்மேல் கொண்ட அளவில்லாத விசுவாசத்தினால் தூய வாழ்வை வாழ்ந்த வழிகாட்டிகள் எத்தனையோ பேர் உண்டு அவர்களுள் விசுவாசத்தின் தந்தையாக ஆபிரகாம் முதன்மை இடம் பெறுகின்றார்.

கிறீஸ்தவ விசுவாசம் என்பது இறைவனின் வார்த்தையையும் சித்தத்தையும் ஏற்றுக்கொள்ளுதல். கிறீஸ்து தம்மை முழுமையாகக் கையளித்ததுபோல் எம்மையே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிப்பது ஆகும்.

கிறிஸ்து தாம் வாக்களித்ததை தருவார் என்ற உறுதியான நம்பிக்கையே நமது விசுவாசமாகும். ஒரு கிறீஸ்தவனுக்கு விசுவசிப்பதென்றால் இறைவனில் தான் கொண்ட விசுவாசத்திற்கமைய தன் வாழ்வை அமைத்துக் கொள்வதாகும். விசுவாசத்தினால் நாம் எம்முடைய வாழ்வின் ஒழுக்க விதிகளை நெறிப்படுத்துகின்றோம்.

***விசுவாசம் என்பது ஒளி பிறக்கும் என்ற எண்ணத்தோடு இருளுக்குள் குதிப்பதாகும்.*** எனவே நாம் எந்த அளவுக்கு இறைவனில் நிறை விசுவாசம் கொண்ட வாழ்வை வாழ்கின்றோமோ அந்த அளவுக்கு நம் வாழ்வு விருட்சமாக வீறு நடைபோடும். விசுவாசத்தின் அச்சாணியாய் இருக்கும் ஆதாரங்கள்

1. விவிலியம்.
2. பாரம்பரியம், இவை எம் வாழ்வின் ஆதாரங்கள்.

மேலும் விசுவாசம் என்பது இல்லாத ஒன்றுக்காக ஏங்குவது அல்ல. இருக்கும் ஒன்றைத் தேடி அடைவது. இவை எம் வாழ்வின் முடிவு மட்டும் தொடரப்பட வேண்டியவை. உண்மையான விசுவாசம் நம்பிக்கையில் இருந்து பிறக்கின்றது. நம்பிக்கையோ மனிதன் பிறரோடு கொண்டுள்ள உறவில் இருந்து மலர்கின்றது.

ஆயினும் பிறக்கின்ற ஒவ்வொரு மனித உயிர்களும் விசுவாசத்தினால் நிறைவாழ்வைத் தேடி அடைகின்றார்கள். நம்முடைய இறை விசுவாசம் இதயத்தில் இருந்து புறப்பட வேண்டியது. இதை நாம் வெளிக்கொணர்வது எப்படியென்றால் நமக்கு ஏற்படும் சகலவித துன்ப துயரங்கள், வேதனைகள், சோதனைகள் நம்மால் சகிக்க முடியாத நிகழ்வுகள் அனைத்திலும் இறைவனின் சித்தத்தை ஏற்றுக்கொண்டு அவரை முழுமையாக விசுவசித்து ஆராதனை செய்து வாழ்வதாகும்.

# மருத்துவப் பொழிவு

## நன்மை செய்யும் உணவு வகைகள்

எல்லாவிதமான புற்றுநோய் வகைகளைத் தடுக்கவும், தலையில் பொடுகு ஏற்படாமல் பாதுகாக்கவும் செலினியம் என்னும் உப்பு மிகவும் தேவை. குறிப்பாக, ஆண்களுக்கு இந்தத் தாது உப்புத் தவறாமல் தேவை. இந்த உப்பினால் உடல் திசுக்கள் வலிமையுடன் இளமையையும் எப்போதும் நீடித்திருக்குமாறு பார்த்துக்கொள்ளும்.

இந்த உப்பானது நாடி, நாளங்களில் இறுக்கம் ஏற்படாமல் பாதுகாத்து மாரடைப்பையும் தடுத்துவிடும். தக்காளி, பால், வெங்காயம் (பச்சையாக), வெள்ளைப் பூண்டு, முட்டை, மீன், நண்டு முதலியவற்றில் ஏதேனும் மூன்று அல்லது நான்கு தினமும் உணவில் சேர்த்து வந்தால் உடலுக்குத் தேவையான செலினியம் கிடைத்துவிடும். களைப்பாகவும், சோர்வாகவும் இரண்டு நாட்களுக்குமேல் தொடர்ந்து காணப்பட்டால் பால், தயிர், மீன், தக்காளி, வெங்காயம், வெள்ளைப் பூண்டு முதலியவற்றை சில வாரங்களுக்கு நன்கு சேர்த்து வாருங்கள்.. இதன் மூலம் இளமைத் துடிப்பு மட்டுமல்ல உலகின் பெரிய தொல்லை நோய்களான புற்று நோய், இதயநோய் முதலியவற்றின் அறிகுறிகள் முதலிலேயே வேருடன் அகன்றுவிடும்.

மலட்டுத் தன்மையைப் போக்கிக்கொள்ள விரும்பும் ஆண்களும், பொடுகை அகற்ற விரும்பும் பெண்களும் செலினியம் உள்ள மேற்கண்ட உணவு வகைகளைத் தொடர்ந்து உண்ணவும். வயதானவர்கள் இந்த உணவு வகைகளுடன் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் தொடர்ந்து ஆரோக்கியமாக வாழ மொச்சை, ஈரல், இறைச்சி, கடலை வகைகளை நன்கு சேர்த்துக்கொள்ளவும். இவற்றில் உள்ள துத்தநாக உப்பு முதுமைக் காலத்தில் இவர்களை ஆரோக்கியமாக வாழ வைத்துக் காப்பாற்றி வரும்.



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

## நோயா? நிவாரணமா?

இருமல் ஒரு நோய் என்று நினைக்கின்றோம். தொண்டையில் சிக்கும் பொருளை இருமி, இருமி நீக்கிக்கொள்ள முடியாதவர்கள் நிமோனியாவினால் இறக்க வேண்டிவரும்.

அது போலவே உடல் வலியும். உடலின் வலி தெரியாதவர்களும், நெடுநேரம் ஒரே நிலையில் இருந்தால் கால், கை, மூட்டுக்களில் இரத்த ஓட்டம் நின்று திசு சிதைவு ஏற்பட்டு இளம் வயதிலேயே நோய்வாய்ப்படுகின்றார்கள். பார்க்கப்போனால் இருமலும், வலியும் நோய் என்பதைவிட நிவாரணங்கள் என்றே கூறலாம்.

## முடக்கு வாதம்



முடக்கு வாதம் மூட்டுக்களை மட்டுமே தாக்கக் கூடியது. கை, கால், மூட்டு எலும்புகளை அசைக்கும்போது, அவை ஒன்றுடன் ஒன்று உராய்வதைத் தடுக்க பஞ்சு போன்ற ஒரு திசுப் பொருள் மூட்டுக்களில் அமைந்துள்ளது. இத்திசுக்களைப் பாதுகாப்பது கொலாஜன் என்னும் புரதப் பொருளாகும். வயதாகும்போது, கொலாஜன் சுரப்பது குறைந்துவிடுகின்றது. எனவே திசுப் பொருட்கள் வலுவிழந்து முடக்கு வாதம் உண்டாகின்றது.

நோய் கடுமையாகும்போது திசுக்கள் அறவே இல்லாமற் போய்விடுகின்றது. இதன் விளைவால் மூட்டுக்கள் அசையும்போது ஒன்றுடன் ஒன்று உராய்ந்து கடும் வலியை ஏற்படுத்தும். உடற்பயிற்சி மற்றும் வெப்பப் பயிற்சி எனப்படும் மருத்துவம் ஆகியவற்றின் மூலம் இதனைக் குணப்படுத்தலாம். ஆனால் மிகக் கடுமையான முடக்குவாத நோய்க்கு செயற்கை மூட்டுக்களைப் பொருத்தி சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

- ஞா. கிறிஷாந்தா (குயின்சி), சாளம்பன்.

## பேரிச்சம்பழச் சட்னி



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | - ¼ Kg |
| செத்தல் மிளகாய் | - 15, இஞ்சி - 2 |
| உள்ளி | - 4 பல்லு. |
| வினாகிரி | - 1 ரம்ளர். |
| சீனி | - 2 மேசைக் கரண்டி |
| கஜு | - 50 g |
| உப்பு | - அளவாக. |

### செய்முறை :


பேரிச்சம் பழத்தை விதை நீக்கி, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அரைப்பதமாக அரைத்து எடுத்துக்கொள்ளவும். செத்தல் மிளகாய், இஞ்சி, உள்ளி என்பவற்றை நீர் சேர்க்காமல் 1 மேசைக்கரண்டி வினாகிரி விட்டு, பசுந்தாக (நன்றாக) அரைக்கவும். அரைத்த பழத்தை தாச்சியில் போட்டு, அரைத்த கூட்டு, சீனி, உப்பு, வினாகிரி என்பன சேர்த்து, அடுப்பில் வைத்து காய்ச்சவும். கலவை ஓர் அளவு தடிக்கத் தொடங்கும் போது, கஜு"வையும் சேர்த்துக் கிளறி, இறக்கி, ஆறவைத்து, ஈரமற்ற போத்தலில் அடைத்து வைத்து பின் அதை எடுத்துப் பரிமாறலாம்.

## பேதி மருந்தும் - குடற் புழுக்களும்

பேதி மருந்து உட்கொண்டால் குடல் புழுக்கள் ஒழியும் என்ற தவறான கருத்து ஒன்று உள்ளது. பேதி மாத்திரை அல்லது மருந்து உட்கொண்டால் குடல் இயக்கம் தூண்டப்பட்டு மலம் எவ்வித சிக்கலுமின்றி எளிதில் வெளியேறிவிடும். இவற்றால் குடற் புழுக்கள் ஒழிவதற்கு வாய்ப்பில்லை.

காரணம் குடல் புழுக்கள் முட்டை, லாவா, புழு எனும் மூன்று வளர்ச்சி நிலைகளில் உள்ளன. இவற்றில் முட்டையும் - புழுக்களும் குடற் சுவர்களில் 'அட்டை' போல ஒட்டிக்கொள்கின்றன. இவை பேதி மாத்திரைகளால் வெளியேறுவதில்லை. குடற்புழுக்களை வெளியேற்றுவதற்கு VERMOX போன்ற மருந்துகளை வைத்திய ஆலோசனையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

## நீங்களும் தயாரிக்கலாம் வைட் குருமா!



கரட், பட்டாணி, உருளைக்கிழங்கு, பட்டர் பீன்ஸ், முட்டைகோஸ் என்று கிடைக்கும் இங்கிலீஷ் காய்கறிகளை அரை கிலோ எடுத்துக்கொள்ளுங்கள். தோல் நீக்க வேண்டியவற்றைக் கழுவி, தோல் சீவி, சிறு சிறு துண்டுகளாக நறுக்குங்கள். குக்கரில் காய்களைப் போட்டு, சிறிது உப்பு, ஒரு கப் தண்ணீர் சேர்த்து ஒரு விசில் வரும் வரை வைத்து இறக்குங்கள். இரண்டு நிமிடம் கழித்து மூடியைத் திறந்துவிடுங்கள். ஒரு தேங்காயைத் துருவிக்கொள்ளுங்கள்.

அத்துடன் ஐந்து பச்சை மிளகாய், நான்கு பல் பூண்டு, இரண்டு பட்டை, இரண்டு ஏலக்காய், இரண்டு லவங்கம், பத்து முந்திரிப் பருப்பு, பொட்டுக்கடலை ஒரு டேபிள்ஸ்பூன், அரை ரீ ஸ்பூன் நற்சீரகம், ஆகியவற்றை 5 நிமிடம் வதக்கி இறக்கி ஆறவிட்டு அரையுங்கள். அரைத்த விழுதைக் காய்கறிகளுடன் சேர்த்துக் கலந்துகொள்ளுங்கள். ஒரு வெங்காயத்தைப் பொடியாக நறுக்குங்கள். ஒரு ரேபிள்ஸ்பூன் எண்ணெய், ஒரு ரேபிள்ஸ்பூன் நெய்யைக் காயவைத்து, வெங்காயத்தை வதக்கி குருமாவில் சேருங்கள். ஒன்றாக 5 நிமிடம் கொதிக்கவிட்டு இறக்குங்கள்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு



மலர்வு 16 - 02 - 1940 | உதிர்வு 20 - 06 - 2006

### திருமதி. அ. அக்னேஸ் குருஸ் (செபமாலை குருஸ்)

மாதமொன்று சென்றாலும் மாறாது எம் துயரம் ஏது பவம் செய்தோமோ இத்துயரில் நாம் துவள! ஓ பரமா! ஏசுபரா! உன் துணைதான் எங்களுக்கு ஓர் கணமும் மாறாது உன் தயவைத் தந்துவிடு

அன்னை எமை அன்பு செய்த காலமெல்லாம் என்ன வென எண்ணியல்லோ, ஏங்கி வாடுகிறோம்! சின்ன உலகின்பமெலாம் சீரழிவு என்றுணர்ந்தோ சீவபரன் பாதமதை சென்றணைந்து வாழுகிறாய்.

*துயரால் வாடும் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரி பிள்ளைகள், உற்றார், உறவினர்.*

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக தாழ்வுபாடு புனித சூசையப்பர் தேவாலயத்தில் 21.07.2006 காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 15 - 01 - 1920 | உதிர்வு 21 - 08 - 2005

### அமரர். அ. லூயிஸ் குருஸ் (இளைப்பாறிய அதிபர் - தாழ்வுபாடு)

தக்க சமயத்தில் உனை நாடி வந்தவர்க்கு
மிக்க உதவிடும் சற்குருவாய் அறிவின் பொக்கிஷமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கித் தனது
எண்பத்தைந்தாம் வயதில் இறைபதம் நாடிச் சென்ற
எம் குல தெய்வமே அன்பு நிறை அப்பாவே
ஓராண்டு வந்ததையா நீர் பிரிந்து
ஓர் போதும் அழியாது உம் நினைவு
சுவர்க்கத்திலே இறைவனுடன் காலத்தென்றும்
சாந்திபெற வேண்டுகின்றோம் நாம் என்றும்.

*இவரது பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்.*

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 21.08.2006 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## 6ம் ஆண்டு நினைவு



மலர்வு 09 - 02 - 1940 | உதிர்வு 17 - 08 - 2001

### அமரர். அ. தொம்மை (ஓய்வு பெற்ற அதிபர்) பாலைக்குளி

குடும்பத்தின் சிகரமாய், பண்பின்
உறைவிடமாய், பாசத்தின் குலவிளக்காய்,
மெய்வருத்தம் பாராது எம்மை வாழ்விக்க
உம் உதிரம் சிந்தி
எம் மூவரையும் செம்மைப்படுத்திவிட்டு
நிம்மதியை நாடி உயிர் நீத்தீரே அப்பா!
ஆண்டு ஆறு ஆனாலும்
ஆறவில்லையப்பா எம் உள்ளம்
உங்கள் ஆன்மா அமைதி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவு



மலர்வு 04 - 09 - 1946 | உதிர்வு 28 - 06 - 2006

### சா.யக்கோவு (பாக்கியம்) கொக்குப்படையான், சிலாவத்துறை

குடும்பத்தின் அகல் விளக்காய் பாசத்தின் உறைவிடமாய் செல்வங்கள் ஏழுபேரை நற்பண்புடன் மணம் வீசும் கொடிமலராக வளர்த்திட்ட எம் பாசமிகு தந்தையே, நாட்கள் 31 ஒன்று உருண்டோடியும் உம் அன்பு முகம் காணாமல் எம் மனம் பரதவிக்கின்றதே! இனி தந்தை என்றழைக்க யார் உளரோ? ஐயா எம்மை எல்லாம் விட்டுப்பிரிய எப்படி மனம் வந்ததோ! இது மனிதன் இட்ட சதியா? அல்ல இறைவன் இட்ட விதியா? நீங்கள் எமக்காகப்பட்ட தனிப்பாடுகளை நாம் எப்படி மறவோம். உங்களது ஆன்மா இறைவனோடு ஒன்றித்து இன்பமாக வாழ நாளும் வரம் வேண்டி நிற்கின்றோம்.

*உங்கள் பிரிவால் வாடும்: அன்பு மனைவி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 06 - 1954 | உதிர்வு 10 - 08 - 2001

### திருமதி. மரிய கொறற்றி ஜேசுதாசன் (முதலியார் குளம்)

அன்பிற்கோர் அணிகலனாய், பண்பிற்கோர் காவியமாய், பாசத்தின் இருப்பிடமாய், அன்பாய் அணைத்தெம்மை, ஆதரவாய் வளர்த்தெடுத்து விண்ணைப்போல் உயர்த்திவிட்டு வேதனையில் நாம் தவிக்க மண்ணுலகை விட்டுக் காற்றிலே கலந்து கடவுளிடம் சென்று ஆண்டு ஐந்து சென்றிடினும் உம் நினைவு எம்மை விட்டு பிரிவதில்லை. ஊற்றெடுக்கும் விழிநீர் காயவில்லை உங்கள் நினைவுகளுக்கு மரணமில்லை. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 10.08.2006 காலை 6.30 மணிக்கு முதலியார் குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். *அன்னாரின் பிரிவால் துயருறும் கணவன், மகன்மார், றேகன், றேமன், மயூரன், பெறாமக்கள்.*

## 31ம் நாள் நினைவு



மலர்வு 26 - 03 - 1928 | உதிர்வு 09 - 06 - 2006

### திருமதி. இ. மேரி மாக்கிறேற் (மன்னார்)

அன்புத் தந்தையே இறைவா! இவ்வுலக வாழ்வில் தனது கணக்கை முடித்துக்கொண்டு உமதண்டை வந்து சேர்ந்த உமது அடியாள் திருமதி. இராயப்பு மேரி மாக்கிறேற் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

இவர் தம் வாழ்நாளில் அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகளை உமது திருமகனின் திருப்பாடுகளினாலும், மரணத்தினாலும் சிந்திய திரு இரத்தத்தினாலும் மன்னித்து மறந்து அவரை நித்திய வான்வீட்டில் புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மன்னார் மறைமாவட்டத்தில்
# ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தின் பணி

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் அருட்சகோதரர் ஆயரிடம் பக்குவமாகச் சென்று, அமைதியான குரலில், "மரிய ராசா உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்" என்று சொன்னார். உடனே ஆயர், "நான் இப்போது இராசாதி இராசாவான இயேசுவோடு பேசிக்கொண்டிருக்கின்றேன். வந்த - அந்த ராசாவை கொஞ்சம் இருக்கச் சொல்லும்" என்று கண்டிப்பாகக் கூறினாராம். தனது செப நேரம் தனக்கு முக்கியமான ஒன்று என்பதை அவருடைய அந்த வார்த்தைகள் புலப்படுத்தின.

### தனது குருக்களில் அன்பும் அக்கறையும் காட்டியவர்

ஆயர் தோமஸ் ஆண்டகை தனது குருக்களோடு ஆழமான உறவைத் - தொடர்பைப் பேணி வந்தார். குருக்கள் மட்டில் ஆயருடைய கடமையைக் குறித்து திருச்சபைச் சட்டத்தொகுப்பு பின்வருமாறு கூறுகின்றது, "மறைமாவட்ட ஆயர் குருக்கள்மீது சிறப்பான அக்கறைகொண்டிருக்க வேண்டும். தமது உதவியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் போன்றுள்ள அவர்களுக்கு அவர் செவிமடுக்க வேண்டும். அவர்களின் உரிமைகளை அவர் பாதுகாக்க வேண்டும். தங்கள் நிலைக்குரிய கடமைகளை தக்கவிதத்தில் அவர்கள் நிறைவேற்றுகின்றனர் என்பதை அவர் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்களின் அருள்வாழ்வு மற்றும் அறிவுசார்ந்த வாழ்வைப் பேணிவளர்க்கத் தேவையான வழிமுறைகளும் நிறுவனங்களும் அவர்களுக்குக் கிடைக்கும்படி அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். (திருச்சபைச் சட்டத் தொகுப்பு எண். 384)

வாழ்வுதய இயக்குனர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளார் குருக்கள் மட்டில் ஆயருக்கு இருந்த அக்கறையைத் தனது அனுபவத்தின் மூலம் பகிர்ந்துகொள்கிறார். "நான் வவுனியாப் பங்குத் தந்தையாக இருந்தபோது வவுனியாவுக்கு வந்த ஆயர் ஓமந்தையில் இருந்த அருட்பணியாளர் பிரான்சிஸ் அவர்களைப் பார்க்கப் புறப்பட்டார். என்னையும் தன்னோடு வரும்படி கேட்டுக்கொண்டார். போக ஆயத்தமாகும் வேளையில் அவருடைய வாகனச் சாரதி திரு. செபஞானத்திடம் கடைக்குப் போய் மூன்று நான்கு பிஸ்கற் பக்கற்றும், ஒரு ஜாம் போத்தலும் வாங்கிவரும்படி கூறினார். ஓமந்தைக்கு சென்றபோது தன்னைச் சந்திக்க வந்த சிறுவர்களுக்கு பிஸ்கற்களைக் கொடுத்த ஆயர், அருட்பணியாளர் பிரான்சிஸ்சுக்கு ஜாம் போத்தலைக் கொடுத்து, "பிரான்சிஸ், இது பெறுமதி இல்லாத ஒரு சிறிய பொருள்தான். ஆனால் இதை எனது அன்பின் அடையாளமாக வைத்துக்கொள்ளும்" எனக் கூறிக்கொடுத்தார். இது குருக்கள்மேல் அவருக்கிருந்த அக்கறையை, கரிசனையைக் காட்டுவதாக இருந்தது"

ஆயர் அவர்களுடைய பணிக்காலத்தின்போது அவருடைய பணித்தேவைக்காக *சிவப்புநிற வான்* ஒன்றை அவர் வைத்திருந்தார். அந்த சிவப்பு வான் 25 வருடங்கள் கடந்து இன்றும் மறைமாவட்டத்தில் ஓடிக்கொண்டே இருக்கின்றது. மறைமாவட்டத்தின் தொடக்க காலத்தில் ஆக 12 குருக்களே இங்கு இருந்தனர். இந்தச் சிறிய குருக்கள் குழுவைத் தனது சிவப்புநிற வானிலே ஏற்றிக்கொண்டு தியானங்கள் மற்றும் சுற்றுலா போன்றவற்றிற்கு அவரே அழைத்துச் செல்வார். மிக அரிதான நிறமாகிய அந்தச் சிவப்பு நிற வான் எவ்வளவு தூரத்தில், எங்கு வந்துகொண்டிருந்தாலும் இலகுவில் அதை அடையாளம் கண்டுகொள்ள முடியும். அந்த சிவப்பு நிற வேனைத் தவிர்த்தால் ஆயருடைய பார்வையில் இருந்து தப்பிவிட முடியும் என அக்காலத்தில் பணிசெய்த குருக்கள் பகிடியாகக் கூறுவார்கள்.

### மனிதநேயம் மிக்க மக்கள் பணியாளர்

ஆயர் தோமஸ் ஆண்டகையின் ஆளுமைப் பதிவுகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் சுருக்கமாக அவரை '*மனித நேயம் மிக்க மக்கள் பணியாளர்*' என்று கூறுவது மிகையாகாது. தாழ்மையும், எளிமையும் கொண்டவர். புன்னகைப் பூக்களை முகத்தில் படரவிட்டு அனைவரையும் அன்போடு வரவேற்று உபசரிப்பவர். மக்கள் அவரை எளிதில் அணுக முடியும். அனைவரையும் மதித்துக் கௌரவிக்கும் உள்ளம் கொண்டவர். அனைவரிலும் தனிப்பட்ட அக்கறை – கரிசனை கொண்டவர்.

தனது 25 வருட ஆயர் பணியில் பலவித சவால்களை அவர் சந்தித்தபோதும் நிலைகுலையாது "மலையே வந்தாலும் தலையே சும" என உறுதியோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். ஆயர் பெருந்தகை அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் இறைபணியில் நிறைபணியாற்றிட மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் பாராட்டுக்களையும் கூறிநிற்கின்றேன்.

"ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும் பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளிவீசித் திகழ்வர்!" (தானியேல் 12 : 3)

கண்ணியம் தவறிடாமல்
கருத்துடன் எதையும் செய்வீர்
எண்ணியே ஆய்ந்து பார்ப்பீர்
ஆய்ந்தபின் முடிவெடுப்பீர்
திண்ணிய நெஞ்சத்தோடு
திடமுடன் கடமை செய்வீர்
மண்ணிலே நாங்கள் கண்ட
மகத்துவம் தாங்கள் ஆனீர்!

மன்னார் மண்ணுக்கு நீர்
முன்னாள் ஆயரானீர்
கண்ணின் கருவிழிபோல்
எண்ணியே காத்து வந்தீர்.
தன்னிகரில்லா உந்தன்
தனிப்பெரும் பணியை எண்ணி
பொன்னாளாம் இந்நன் நாளில்
புகழ்பாக்கள் பாடுகின்றோம்!

## தாகத்தோடு மன்றாடுவோம்!
# யாழ் பேராலயத்தில் அமைதி வேண்டிச் செபம்

உணர்வுகள் ஒன்றிணைந்து உள்ளங்களை உருக்கும் ஒரு நாள் செபவழிபாடு யாழ். மரியன்னை பேராலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 09.07.2006 அன்று இடம்பெற்றது.

அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்கள் ஒன்றிணைந்த இந்த செபவழிபாடானது காலை 9.00 மணி தொடக்கம் - பிற்பகல் 3.00 மணிவரை தொடர்ந்தது. இந்நிகழ்வானது இறைமக்களை இந்நாட்களின் அவலநிலையை உணர்ந்து, உபவாசத்துடன் செபிக்க அழைத்திருந்தது. "எல்லாத் தேவைகளிலும் நன்றியோடுகூடிய செபத்திலும், மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள்" என்ற புனித சின்னப்பரின் வார்த்தைகளுக்கு ஏற்ப, உபவாசத்துடன் செபித்த பக்தர்கள் எமது இன்றைய கொடூரமான சூழ்நிலைகளிலிருந்து நாம் விடுதலைபெற நன்றியோடுகூடிய தொடர்ச்சியான விண்ணப்பங்களை ஏறெடுத்தலில் ஒன்றிணைந்திருந்தனர்.

இவற்றிற்கும் மேலாக, "இதோ உலக முடிவுவரை நான் எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்" என்ற இயேசுக்கிறிஸ்துவின் நற்கருணைப் பிரசன்னம் இவ்வழிபாட்டின் சிகரமாக விளங்கியது.

யாழ். திருச்சபைத் தலைவர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் இதில் இணைந்திருந்தமை, துன்புறும் யாழ். திருச்சபையின் குடும்ப உறவை உறுதிப்படுத்தி நின்றது.

இன்றைய உலகில், கருவறையிலிருந்து புறப்படும் குழந்தை முதல் கல்லறை நோக்கி கால்நடை போடும் வயோதிபர் வரை ஆசித்து நிற்கும் சமாதானத்தை அடைவதற்காக பல போராட்டங்களும் - ஆர்ப்பாட்டங்களும் இடம் பெறும் இக்கால கட்டத்தில், இறைவனின் இல்லத்தில் நோன்பிருந்து விண்ணப்பம் செய்தல் அர்த்தம் தருவதும், அவசியமானதுமாகும் என ஆயர் அவர்கள் குறிப்பிட்டார்.

குருக்கள், துறவிகள், மதசார்பற்ற சபைகளுக்கான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஒரு நாள் நோன்புடனான செப வழிபாட்டில், *உயிர்களை மதிப்போம் உரிமைகளை மதிப்போம், மனிதத்தை வாழ்வோம், வன்முறை ஒழிப்போம், கொலைகளை நிறுத்துவோம், அன்பு நீதியும் நிறைந்த அமைதியை விரும்புவோம்,* என்ற சுலோகங்கள் ஆலய வளவின் பல பகுதிகளிலும் போடப்பட்டு, இதன் அடிப்படையில் பல்வேறு துறவற சபைகள் மூலம் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்செபவழிபாட்டின் மையப்பொருளான அம்சங்கள் அடங்கிய துணுக்குகளை மக்கள் தம் இல்லங்களுக்கும் எடுத்துச் சென்றார்கள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 52

## 2 சாமுவேல் - அதிகாரம் 1 - 12

உங்கள் விடைகளை 10. 09. 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | * | * | | | | | 03 | * | | |
| | | 04 | | | * | | | | 05 | |
| | | | | | | 06 | | | | |
| 07 | | | | | | | 08 | * | * | |
| | | | | | 09 | | | | 10 | |
| | | * | | 11 | | | | | | * |
| | 12 | | | | | | | | | |
| 13 | | | | 14 | | | * | | | |
| | | | 15 | | | 16 | * | 17 | | |
| 18 | | | | | | | | | | 19 |

### இடமிருந்து வலம்

1. பிறகு தாவீது சவுலையும், அவருடைய மகன் யோனத்தானையும் குறித்து ………………… ஒன்று பாடினார்.
4. அவர்களுக்காக வியத்தகு ……………….. செயல்கள் புரிந்தீர்.
6. உம் மேலும் உம் உயிர் மேலும் ஆணை. நான் அப்படிச் செய்யவே …………
7. தாவீது அப்னேரை …………… அவனும் பாதுகாப்புடன் சென்றான்.
12. அரசர் தாவீது எபிரோனில் ஆண்டவர் …………… அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டார்.
13. அப்போது பென்யமினின் ஆள்கள் அப்னேருக்குப்பின் ஒரே படையாகத் திரண்டு ஒரு ………………… உச்சியில் நின்றனர்.
18. அவர்கள் அந்த இடத்திலேயே …………………….. வாழச் செய்வேன்.

### மேலிருந்து கீழ்

1. நீங்கள் ………………….. செய்ததால் நானும் உங்களுக்கு நன்மை செய்வேன்.
2. என் முன்பாக உனது ………………… உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்.
4. உனது ………………… என்றுமே நிலைத்திருக்கும்.
6. உமது பெயர் என்றும் ………………… பெறுவதாக.
8. அவன் அதை …………….. வாங்கியிருந்தான்.
9. அவனுக்கு நான் ……………..த் தந்தது அதுவே.
10. அதன் மன்னனின் தலையிலிருந்த ……………….. எடுத்தார்.
14. நீர் அவர்களை என் …………………… ஒப்புவிப்பீரா?

### வலமிருந்து இடம்

2. ஒரு சாரார் இப்பக்கமும், மறு சாரார் அப்பக்கமும் ……..……….. அருகே அமர்ந்தனர்.
3. அரசன் செய்ததெல்லாம் மக்கள் அனைவருக்கும் ……………...….ப் பட்டது.
5. குன்றின்மீது இருந்த அபினதாபின் இல்லத்திலிருந்து கடவுளின் ……….. ஒரு புதிய வண்டியில் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.
6. உம் ஊழியன் அறிந்துகொள்ளட்டும் என்று உம் வார்த்தையை முன்னிட்டும், உம் இதயத்திற்கு ஏற்பவும் ……………………….. செயல்கள் அனைத்தையும் நிறைவேற்றினீர்.
9. தாவீது எங்கு சென்றாலும் அவருக்கு ஆண்டவர் ………………….. அளித்தார்.
11. தாவீது தம் வீட்டாருக்கு ………………… வழங்க வந்தார்.
15. அப்போது உசாவுக்கு எதிராக ஆண்டவரின் ………………….. பற்றி எரிந்தது.
19. இச்செயல் ஆண்டவரின் ………………….. தீயதாக இருந்தது.

### கீழிருந்து மேல்

5. இத்தகைய ஆண்டவரின் …………………..யை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்வேன்.
6. அசாவேல் காட்டு ………………. வேகமாக ஓடக்கூடியவன். (2வது எழுத்து 4வதாக நிற்கிறது)
12. நான் அரசனாகத் ………………….. செய்யப்பட்டும் இன்று வலுவிழந்தவனாய் இருக்கிறேன். (4ம் 5ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. இருப்பினும் தாவீது சீயோன் ……………..க் கைப்பற்றினார்.
17. அத்தலையை எடுத்துக்கொண்டு இரவு …………….. அராமா வழியாகப் பயணம் செய்தார்கள்.
18. அசாவேல் விழுந்து இறந்த இடத்திற்கு வந்தவர்கள் அனைவரும் ……………. நின்றனர்.
19. ஆண்டவரும் உனது ……………… நீக்கி விட்டார்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.51ற்கான முடிவுகளை, 2006ம் ஆண்டு செப்ரம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377

# மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 50ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
எம். தீபா,
எமில்நகர், மன்னார்

*இரண்டாம் பரிசு*
மா. ஜெனுனி,
தி.கு.கன்னியர் மடம்,
மிருசுவில்.

*மூன்றாம் பரிசு*
எஸ். சத்தியப்பிரியா,
நொச்சிக்குளம்,
உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 171 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 163 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.50ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ம. றேகா, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.
2. அ. றூபா குரூஸ், தேவ பராமரிப்புச் சபை தேவத்தை, றாகம.
3. அ. தனுஜா, குஞ்சுக்குளம், முருங்கன்
4. அ. விலோச்சினி, கன்னாட்டி, அடம்பன்.
5. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
6. தே. அலிமா பௌசியா, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
7. ச. யூடிற்றா (யூடி), அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
8. போ. அருள்தாஸ், ஆயுள்வேத மருந்தகம், பூங்காவீதி, வவுனியா.
9. ச. நிஷாந்தினி கூஞ்ஞு, 11 ஏ, 8ம் வட்டாரம், பேசாலை.
10. கி. ஆன் றிஷானா, தரம் 11, பள்ளிமுனை, மன்னார்.
11. கு. சுதர்ஷன் றொபட், கீழியன் குடியிருப்பு, தலைமன்னார்.
12. செ. அனுபா, இல-06, மடுக்கோவில், மடு.
13.என். சி. ஜெகஜீவன் றோச், புனித லூசியா ம .வி. பள்ளிமுனை.
14. எவ். பப்பிறிஸ்ரா டலிமா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
15. பி. லெஷன்சி குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.
16. அ. அமல நாயகி, பெரிய கோமரசன்குளம், யேசுபுரம், வவுனியா.
17.ஜெ.கமலிஸ்ரீனா, ஜீ.ஆர்.09, சென் மறியன் கொஸ்ரல், திருகோணமலை.
18. அ. ஜெயசீலன், பெரியகடை, மன்னார்.
19. ம. லடிஸ் மேரி, குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.
20. கே. மஞ்சுளா, இல. 1, மடுக்கரை, நானாட்டான்.
21. தே. அனட் யான்சன், தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
22.ம.தட்சாயினி, வீ.இ. பீ64, ஓ.ஆர்.எஸ்.முகாம், த. மடு, பாலம்பிட்டி.
23. வே. சியாமளா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
24. பூ. டேனியல் ராஜ், தரம்.08, 7ம் குறுக்குத்தெரு, முதலியாகுளம்.
25. தே. நிஷாந்தினி, பூவரசன்குளம், வவுனியா.
26. இ. கியோமர் டலிமா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
27. ப. நிஷாளினி, இத்திக்கண்டல், அடம்பன்.
28. ஏ.ஜீ. சாதனா, சின்னக்கடை, மன்னார்.
29. ப.த. நிரோஷா றீற்றா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
30. கி. டெல்வின் டலிமா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
31. கொ. மேரி கிறேசியன், புதுக்கமம், உயிலங்குளம்.
32. மி. பெர்னடேற், முருங்கன் பிட்டி, முருங்கன்.
33. பி. நிரோஜினி, தரம் - 8, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.
34. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
35. பீ. ஒகஸ்ரினா, இல.25/1, ராணிமில் வீதி, இறம்பைக்குளம், வவு.
36. ச. டிலைக்சன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
37. வை. அஜித், ஜேர்மனி.
38. அ. ஜோண் கெனடி, பெரிய முறிப்பு, முருங்கன்.
39. ம. கிளாறா பீரிஸ், திருக்குடும்ப கன்னியர்மடம், மிருசுவில்.
40. சூ. யூஜின் பற்றிமா, றஜனி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
41. என். பிரான்சிஸ்கா, பனங்கட்டிக்கொட்டு கிழக்கு, மன்னார்.
42. கே. சறோமி, ஈரப்பெரியகுளம், நேரியகுளம்.
43. சிறகுடைந்த இளஞ்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
44. அ. புறுனோ, இல. எம்.8, மடுக்கோவில் , மடு.
45. அ. கரோலின் கீர்த்திகா, 70 பேராலய வீதி, திருகோணமலை.
46. ஞா. அன்ரன் வினோத், மு. மகாவித்தியாலயம், முல்லைத்தீவு.
47. ஞா. இ. வினோஜினி, வவுனியா தேசிய கல்வியல் கல்லூரி, வவு.
48. றெ. அலெக்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
49. இ. டிலக்ஷன், வவுனியா. வெளிக்குளம் கனிஸ்ர உயர்தரம் பிரிவு.
50. ஏ. அலெக்ஸ் லவுசன் மறைக்கல்வி நிலையம், மன்னார்.

## சேவியர் குரூஸ் அடிகளின் குருத்துவ....

12ம் பக்கத் தொடர்ச்சி

இக்கட்டிடத்தை பல சிரமங்கள் மத்தியிலும கட்டி எழுப்பியமையால்தான் இன்று குருமடம் மட்டுமல்ல, சாவற்கட்டு நூறுவீட்டுத் திட்டப் பகுதி முழுவதுமே, மக்கள் குடியேற்றம் அதிகமுள்ள வளர்ச்சியடைந்துள்ள ஒரு பகுதியாக மாறியுள்ளது எனலாம். இவ்வாறு, சிறப்புற ஆரம்பித்து, சிறிய குருமடக் கட்டடத்தையும் உருக்கொடுத்து படிப்படியாக வளர்ச்சிக்கு வித்திட்டது அடிகளார் என்பதை எம் குருமடம் பெருமையோடு கூறிக்கொள்கின்றது. 1989 இலிருந்து 1995 வரையிலான காலப்பகுதியில் பல மாணவர்கள் குருக்களால் உருவாக்கப்பட்டுள்ளனர். அவர்களுள், 12 குருக்கள் மன்னார் திருச்சபையில் இன்று அருட்பணியாற்றி வருகின்றனர்.

மன்னார் சிறிய குருமட அதிபர் பதவியிலிருந்து விலகிய காலப்பகுதியிலிருந்து இன்றுவரை எமது குருமட மாணவர்களின் ஆங்கில அறிவை வளப்படுத்த தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உதவி வருகின்றார். குருமட மாணவர்களைச் சந்திப்பது, அவர்களுக்கு அறிவுரை கூறுவது போன்றவற்றிலிருந்து, குருத்துவ அழைத்தலுக்கு இவரிடம் தனிப்பட்ட விருப்பம் ஒன்று இருந்து வந்துள்ளதை இவரைச் சந்தித்த சக குருமட மாணவர்களும் அறிவார்கள்.

மன்னார் குருமட குருத்துவ அழைத்தல் பணிக்கு அடிகளார் ஆற்றிய பணிக்கு, அறுவடையில் ஆண்டவர், 'நன்று … நன்று நம்பிக்கைக்குரிய என் நல்ல பணியாளரே' (மத். 25:23) எனும் வாக்கியத்தை இறைவன் நிச்சயம் இவருக்கு அருளுவார் என்று குருக்களும், குருமட மாணவர்களும் அடிகளாரை வாழ்த்தி வேண்டுகின்றோம்.

# வைரவிழா வாழ்த்து



**திரு. திருமதி. அவுலீன் திரேசம்மா தம்பதியர்**
**(பிச்சகுளம் - முருங்கன்)**

**1946.08.06**

இருமனம் இணைந்து அறுபது ஆண்டுகள் அக்களிப்புறும்
இல்லற வாழ்வில் இனிதாக இன்புற்று வாழ
இறைவன் ஈர்ந்த நல் வாழ்விற்கு நன்றி நவில்கின்றோம்.
இவ்வைர விழா நாளில் மூவொரு இறைவன் ஆசீர்
முப்பொழுதும் கிடைப்பதாக. செபமாலை அன்னை
யேசுவினிடம் இனிய வாழ்விற்காக பரிந்து பேசுவாளாக.

வாழ்த்தும் நன்றியும் நவிலும்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# பொன்விழா வாழ்த்து



**திரு. திருமதி. அலஸ் அந்தோனி செபஸ்தியம்மா தம்பதியர்**
**பொன்தீவுகண்டல் - முருங்கன்**


**1956.08.17**

இல்லறம் என்னும் நல்லறம் தன்னில் இனிய
ஐம்பதாண்டினை நிறைவுசெய்யும்
எம் அன்புப் பெற்றோரே! இன்றுபோல் என்றும் நீங்கள்
அன்பு, பொறுமை, தியாகம் நிறைந்த செப வாழ்வில்
நிலைத்திடவும், உடல் உள நலம் பெற்று வாழ்ந்திடவும்
வாழ்த்துகின்றோம்.

உங்கள் அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

*தகவல்: பிள்ளைகள்.*

# மன்னா



# 'இயேசுவின் இதயம் இரக்கத்தின் ஊற்று'

## திருத்தந்தை கூறுகிறார்



இறைவனின் இரக்கத்திற்காக ஏங்கும் ஆயிரக்கணக்கான மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் விதமாக திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற், யூன் 24ம் திகதி, இயேசுவின் திரு இருதயப் பக்தி, மற்றும் இறை இரக்கப் பக்தியின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.

புனித பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த 30,000 மக்களுக்கு உரையாற்றிய திருத்தந்தை, “இயேசுவின் திருஇருதயப் பக்தி முயற்சிகளை இறையியல் ஆதாரமுள்ளதாகச் செய்கின்றது. திருஇருதய அரசாட்சிக்குக் குடும்பங்களை அர்ப்பணிக்கும் திருஇருதய ஸ்தாபகம் சில நாடுகளில் பாரம்பரியமாகப் பின்பற்றப்படுகின்றது. திருஇருதயப் பக்தியைப் புரிந்துகொள்ள இயேசுவின் மனுவுருவைப் புரிந்துகொள்ள வேண்டும். காரணம், “இறைவனின் இணையற்ற அன்பு இயேசுவின் திரு இருதயப் பக்தி இறை இரக்கத்திற்கு ஏங்கும் ஆயிரக்கணக்கான மக்களைக் கவரும் ஆற்றல் மிக்கது. பாலைவனமாகிப்போன பலருடைய இதயங்களை இயேசுவின் திரு இருதயப் பக்தியால் சோலைவனமாக்குவோம்.” என்றார் திருத்தந்தை.

## உயிலங்குளப் பங்குச் சிறுமி
## அகில இலங்கை ரீதியான நடனப் போட்டியில் 1ம் இடம்



மன்னார் உயிலங்குளப் பங்கின் மணற்குளத்தைச் சேர்ந்த திரு. ஞானேந்திரன் ஜெனிற்றா தம்பதியினரின் மகளும், தற்போது வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் கல்லூரியில் முதலாம் ஆண்டில் கல்வி கற்பவருமான செல்வி. ஜனார்த்தனா, சங்கீத நடனம் மற்றும் பேச்சுத் திறன்களுக்கான பிறிற்றிஸ் மற்றும் சர்வதேச அமைப்பினால் (BRITISH & INTERNATIONAL FEDERATION IN MUSIC DANCE & SPEECH ) நடாத்தப்படும் 2006ம் ஆண்டிற்கான போட்டி நிகழ்வில் வவுனியா மாவட்டப் போட்டியில் 05 வயதுப் பிரிவில் SRILANKA FOLE SOLO நடனத்தில் 1ம் இடத்தினைப் பெற்று, தங்கப் பதக்கத்தினையும், அகில இலங்கை ரீதியான போட்டியில் 1ம் இடத்தினை பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் பரத நாட்டியத்தில் ( INDIAN FOLE SOLO) வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றதுடன் 2005ம் ஆண்டில் நடைபெற்ற 5 வயது கீழ்ப்பிரிவில் INDION FOLE SOLO நடனத்தில் வவுனியா மாவட்டத்தில் 1ம் இடத்தினையும், அகில இலங்கை ரீதியில் 1ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

செல்வி ஜனார்த்தனாவுக்கும் அவருடைய பொறுப்பாசிரியர் திருமதி. இ. சிவகுரு அவர்களுக்கும், நடனக்குரு திருமதி. சூரியாழினி வீரசிங்கம் அவர்களுக்கும் மன்னா சார்பாக எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (தகவல் : சூ. பிரான்சீஸ்பிள்ளை, மணற்குளம்.)




கொழும்பு மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்க சிறப்புப்பணி முதல்வராக (Episcopal Vicar ) ஒகஸ்டின் அடிகள் அண்மையில் கொழும்பு பேராயரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்
அன்னாருக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்.

## காலி மறைமாவட்ட ஆயரின் மேய்ப்புப்பணி தரிசிப்பு



காலி மறைமாவட்ட ஆயர் மேதகு. கரல் அந்தனி ஆண்டகை அவர்கள் தெனியாய புனித சூசையப்பர் பங்குக்கு கடந்த வைகாசி மாதம் 26, 27, 28ம் திகதிகளில் தம் மேய்ப்புப் பணித்தரிசிப்பை மேற்கொண்டார். அவ்வேளையில் பல்லேகம சிரிசிலிய தோட்ட பாடசாலையை பார்வையிட வந்தபோது, அவரை பாடசாலை நிர்வாகத்தினர் வரவேற்பதைப் படத்தில் காணலாம். (தகவல் எம். எஸ். எட்வேட் கெனடி, தெனியாய.)



### கிளரேசியன் சபைக்குப் புதிதாக 3 குருக்கள்



ஏப்ரல் மாதம் 28ம் திகதி ஜெயராஜ் றொயஸ்ரன், ஸ்ரீபன் சதீஸ், சிங்கராயர் ஸ்ரீபன் ஆகியோர் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். அத்திருநிகழ்வின் ஆரம்ப வைபவத்தை படத்தில் காண்கிறீகள்.

## வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளுக்கு கண்ணீர் அஞ்சலி

### 31 ம் நாள் நினைவஞ்சலி

09-07-2006



| அமரர். சின்னையாமூர்த்தி மாட்மன் | அமரர். மாட்மன் மேரிமெக்டலின் குலாஸ் | அமரர். மாட்மன் ஆன்லக்சிகா | அமரர். மாட்மன் ஆன்டிலக்சன் |
|---|---|---|---|
| மலர்வு. 1968-11-12 | 1976-04-24 | 1997-04-04 | 1999-06-04 |

உதிர்வு.2006-06-09

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு."
2 கொரிந்தியர் [illegible]

திரு.திருமதி.
சூ.அந்தோனி குலாஸ் குடும்பத்தினர்
தோமஸ்புரி வங்காலை